REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK
2024 மே 14 செவ்வாய்க்கிழமை
# தினகரன்
THINAKARAN தினகரன்
92
வருட. 92 இல. 114 | Tuesday 14, May, 2024 | 16 பக்கங்கள் | 50/-




## G.C.E O/L விஞ்ஞான பாடத்தில் இடம்பெற்ற தவறுகள்

# மாணவர்களுக்கு அநீதி ஏற்படாத வகையில் புள்ளி

## நிவர்த்தி செய்யும் வகையில் புள்ளிகளை வழங்கும் முறைமை தயாரிப்பு



### பாராளுமன்றில் கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேம ஜயந்த தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கல்வி பொது தராதர சாதாரண தரப் பரீட்சையில் விஞ்ஞான பாட வினாத்தாள் தொடர்பில் மாணவர்களுக்கு அநீதி ஏற்படாத வகையில் புள்ளி முறைமை ஒன்று தயாரிக்கப்பட்டு உரிய புள்ளிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

விஞ்ஞான பாட வினாத்தாளில் இடம்பெற்றுள்ள தவறுகள் தொடர்பில் சிக்கல்கள் எழுந்துள்ளதையடுத்து அந்த வினாத்தாள்களைத் தயாரித்த விரிவுரையாளர்களை அழைத்து நேற்று முன்தினம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சுசில் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

மேற்படி விவகாரம் தொடர்பில் பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடை க்கான வினாக்கள் வேளையில் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ரோஹிணி கவிரத்ன எழுப்பிய கேள்வி யொன்றுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர் சுசில், இயல்பாகவே அனைத்து பரீட்சைகளிலும் 06

## ஜனாதிபதியின் பொருளாதார சீர்திருத்த முன்னெடுப்புக்கு அமெரிக்கா பாராட்டு



அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரப் பணியகத்தின் உதவி இராஜாங்கச் செயலாளர் டொனால்ட் லு, (Donald Lu) இலங்கையின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பது தொடர்பாக நேற்று (13) ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து கலந்துரையாடினார். இதன்போது, ஜனாதிபதியினால் முன்னெடுக்கப்படும் பொருளாதார சீர்திருத்த திட்டங்களுக்கும் அவர் பாராட்டுத் தெரிவித்தார்.

# ஜனாதிபதி தேர்தலை நடத்த நிதிப் பிரச்சினை ஏற்படாது

### பட்ஜட்டில் ஏற்கனவே நிதி ஒதுக்கீடு; *அமைச்சர் சுசில்*

அரசியலமைப்பு மற்றும் ஜனாதிபதித் தேர்தல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குறிப்பிட்ட திகதிகளின்படி ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படல் மற்றும் திகதி நிர்ணயித்தல் ஒருபோதும் அரசாங்கம் எடுத்த திடீர் முடிவல்ல.

ஏற்கனவே. வரவு செலவுத் திட்டத்தின் மூலம் பணம் ஒதுக்கப்பட்டதால், ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு நிதிப் பிரச்சினை இல்லை என கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்ட போராட்டத்தின் பின்னர், நிதி மற்றும் எரிபொருள் நெருக்கடி போன்ற பிரச்சினைக்குரிய சூழ்நிலையில், ஜனாதிபதி 2022 மே மாதம் கல்வி அமைச்சர் பதவியை தன்னிடம் கையளித்ததாகவும், அதை சவாலாக ஏற்றுக்கொண்டு செயலிழந்திருந்த பாடப்புத்தகங்கள் 06

## தோட்ட தொழிலாளரின் சம்பள அதிகரிப்பு

# தோட்ட நிர்வாகங்கள் நீதிமன்றம் சென்றால் முகம்கொடுக்கத் தயார்



பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு குறித்து அரசாங்கம் விடுத்துள்ள வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய பெருந்தோட்ட கம்பனிகள் செயற்பட வேண்டியது அவசியமென வலியுறுத்திய நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான், அதற்கு எதிராக கம்பெனிகள் மேற்கொள்ளும் நீதிமன்ற நடவடிக்கைளுக்கு முகம்கொடுக்கத் தயாரெனவும் 06

## நிறுவனங்களின் மறுசீரமைப்பு

# மஹிந்தவின் அறிக்கையில் எங்கும் குறிப்பிடப்படவில்லை



**லோரன்ஸ் செல்வநாயகம்**

மின்சார சபை தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மறுசீரமைப்பு வேலைத் திட்டம் எதிர்காலத்தில் உரிய விதத்தில் நடைமுறைப்படுத்தப்படுமென எரிசக்தி, மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெளியிட்டுள்ள அறிக்கை மற்றும் மின்சார சபை மறுசீரமைப்பு தொடர்பில் எதிர்க்கட்சியின் பிரதம 06

## வரலாறாகும் வேதாந்தி; முத்திரை வெளியீடு



**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபக தவிசாளர், முன்னாள் ஊடகத்துறை பிரதியமைச்சர் மற்றும் வேதாந்தியுமான எம்.எச். ஷேகுஇஸ்ஸடீனை கௌரவித்து முத்திரை வெளியிடப்பட்டது. மேல்நீதிமன்ற நீதிபதி என்.எம்.எம். அப்துல்லா மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற 06

## ஒசுசல அரச மருந்தகங்களில்

# கர்ப்பிணிகள், குழந்தைகளுக்கு 05 வீத விசேட விலைக் கழிவு

### டொக்டர் ரமேஷ் பத்திரன



கர்ப்பிணித் தாய்மார், சிரேஷ்ட பிரஜைகள், மற்றும் 05 வயதுக்குட்பட்ட குழந்தைகள் ஆகியோருக்கு 05 வீத விசேட விலைக் கழிவுடன் அரச மருந்தகங்கள் மூலம் மருந்து வகைகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென சுகாதார அமைச்சர் டொக்டர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார். ஒசுசல மருந்தக விற்பனை வலையமைப்பின் 55 ஆவது கிளையை நேற்று (13) அம்பலாங்கொடையில் திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அமைச்சர் இந்த விடயத்தை தெரிவித்தார். 06

# தேசிய டெங்கு ஒழிப்பு 26 முதல் ஜூன் 01 வரை



தேசிய டெங்கு ஒழிப்பு வாரம் எதிர்வரும் 26 முதல் ஜூன் மாதம் (01) வரை நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. 17 மாவட்டங்களிலுள்ள 71 மருத்துவப் பிரிவுகளை உள்ளடக்கியதாக இத் திட்டத்தை நடைமுறைப்படுத்த தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவுக்கு அறிவுறுத்தல்கள் 06

# PHI அதிகாரிகள் எனக் கூறி பணம், நகைகள் கொள்ளை

### 70 வயது நபர் உட்பட 03 பேர் கைது



பொதுச் சுகாதார பரிசோதகர்களெனக் கூறி நகை மற்றும் பணம் உள்ளிட்ட பொருட்களை கொள்ளையிட்டதாகக் கூறப்படும் மூன்று சந்தேக நபர்கள், கட்டுநாயக்க பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 09 ஆம் திகதி பெண் ஒருவரை ஏமாற்றி கடத்திச் 06

# தமிழர் தரப்பு பொது வேட்பாளர் விடயத்தில் அவசரப்பட வேண்டாம்



### இரா. சம்பந்தன் வேண்டுகோள்

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் விடயத்தில், தீர்மானம் எடுப்பதற்கு அவசரப்பட வேண்டாமென இலங்கை தமிழரசுக் கட்சி உட்பட சகல தமிழ் தரப்பிடமும் சிரேஷ்ட தலைவரும் திருமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்காக, அரசியல் கட்சிகள் கொள்கை அளவில் இணக்கம் வெளியிட்டுள்ளன. சிவில் அமைப்புக்களும் இக்கருத்தை வரவேற்றுள்ளன. இலங்கை தமிழரசுக் கட்சி (19) இல், தீர்மானத்தை வெளியிடப் போவதாக தெரிவித்துள்ளது. இது குறித்து சம்பந்தனிடம் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு 06

# குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு 10 கிலோ அரிசி

### மாத இறுதியில் 02 ஆம் கட்ட விநியோகம்

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அரிசி வழங்கும் திட்டத்தின் இரண்டாம் கட்ட நடவடிக்கைகள், இம்மாத இறுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். 06



# 03 ஓமானிலிருந்து வந்த நபர் 10,000 சிகரட்டுகளுடன் கைது

# பாவனைக்குதவாத 1,70,000 கிலோ அரிசி மூடைகள் மீட்பு

### திகதி மாற்றியமைக்கப்பட்ட இடம் சுற்றிவளைப்பு



மனித பாவனைக்குத் தகுதியற்ற சுமார் ஒரு இலட்சத்து எழுபதாயிரம் கிலோ அரிசியை நுகர்வோர் விவகார அதிகாரசபை அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

நுகர்வோர் அதிகார சபையின் அனுராதபுரம் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய நேற்று முன்தினம் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

ஒரு இலட்சத்து எழுபதாயிரம் கிலோ அரிசியை 08 லொறிகளில் தனியார் அரிசி ஆலைக்கு கொண்டு 06

# பொலிஸ் தடை உத்தரவையும் மீறி முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல்

### திருமலையில் நான்கு பேர் கைது



திருகோணமலை சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சேனையூர் பகுதியில், முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கிய குற்றச்சாட்டில் பல்கலைக்கழக மாணவி ஒருவர் உட்பட நால்வர் சம்பூர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்று முன்தினம் (12) ஞாயிற்றுக்கிழமை கைதாகினர். சம்பவத்தில் பல்கலைக்கழக மாணவி உட்பட 3 பெண்களும் ஆண் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்ட பொது மக்களை நினைவுகூரும் முகமாக, (12) ஞாயிற்றுக்கிழமை சேனையூர் பிள்ளையார் ஆலயத்தில் 06

### கற்பிட்டி, கண்டக்குளி பிரதேசத்தில்

# 10 கோடி ரூபா பெறுமதியான 30 கிலோ அம்பருடன் ஐவர் கைது

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**



கற்பிட்டி, கண்டக்குளி பிரதேசத்தில் வீடொன்றின் பின்புறத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த, 10 கோடி ரூபா பெறுமதியான அம்பர் மீட்கப்பட்டுள்ளது. இங்கு ஐந்து சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். வண்ணாத்திவில்லு பொலிஸ் நிலையத்துக்குக் கிடைத்த தகவலின் பேரில், புத்தளம் பொலிஸ் 06

## போதகர் ஜெரோம் விசாரணை

# அறிக்கை சமர்ப்பிக்குமாறு உயர் நீதிமன்றம் உத்தரவு



போதகர் ஜெரோம் பெர்னாண்டோ தொடர்பான விசாரணைகளின் முன்னேற்றம் தொடர்பான அறிக்கையை, இரண்டு வாரங்களுக்குள் சமர்ப்பிக்குமாறு சட்ட மாஅதிபருக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பௌத்தம் உள்ளிட்ட பிற மதங்களை இழிவுபடுத்தும் வகையில் கருத்து வெளியிட்டதாகக் கூறப்படும் போதகர் ஜெரோம் பெர்னாண்டோவை, சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் சாசனச் சட்டத்தின் 06

# நகர்வலம்



23,000 பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கும் திட்டம்

# நீதிமன்ற தீர்ப்புகள் தடையாக அமையாவிட்டால் நியமனங்களை விரைவாக வழங்க நடவடிக்கை

## கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நீதிமன்ற தீர்ப்புகள் தடையாக அமையாவிட்டால் ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகளை விரைவாக முன்னெடுக்க முடியும் என கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

23,000 பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்குவதற்காக நாம் முன்னெடுத்த நடவடிக்கைகள் ஒரு தரப்பினர் நீதிமன்றத்திற்கு சென்று மேற்கொண்டுள்ள நடவடிக்கையால் கடந்த வருடம் மார்ச் மாதம் முதல் இன்று வரை தடையாக உள்ளது என்பதை சபையில் சுட்டிக் காட்டிய அமைச்சர், நீதிமன்ற தீர்ப்புகள் தடையாக அமையாவிட்டால் ஆசிரியர் நியமனங்களை விரைவாக வழங்க முடியும் என்றும் சபையில் தெரிவித்தார்.



பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அந்த வகையில் கடந்த வருடம் மார்ச் மாதத்திலிருந்து இன்று வரை அந்த தடை யுத்தரவு அமுலில் உள்ளது. அதனால் எமக்கு அதற்கான பரீட்சையை நடத்த முடியாத நிலையே தற்போதுள்ளது.

உச்ச நீதிமன்றத்தில் அந்த வழக்கு உள்ள நிலையில் எமக்கு அது தொடர்பில் வேறு எந்த நடவடிக்கையும் மேற்கொள்ள முடியாது. எனினும் இதற்கிடையில் ஆசிரிய சேவையில் ஓய்வு பெற்றோர் மற்றும் பதவியை இராஜினாமா செய்து சென்றுள்ளோருக்கு பதிலாக ஆசிரியர்களை நியமிப்பதற்கு கல்வியமைச்சின் அனுமதியைப் பெற்றுக்கொண்டு அது தொடர்பில் நடவடிக்கை எடுத்தோம். அந்த வகையில் 9 மாகாணங்களிலும் உரிய பரீட்சை நடத்தப்பட்டு நியமனக் கடிதங்கள் வழங்க ஆரம்பிக்கும் போது மேலும் ஒரு தரப்பினர் நீதிமன்றத்திற்கு சென்று மேற்படி தரப்பினருக்கு நியமனம் வழங்கும் வரை இந்த நியமனத்தை வழங்கக் கூடாது என நீதிமன்றத்தில் கேட்டுக் கொண்டுள்ளனர்.

எனினும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் அதற்கான தடை நீக்கப்பட்டது. அந்தத் தடை நீக்கப்பட்டதை தொடர்ந்து பட்டதாரிகளுக்கு கட்டம் கட்டமாக நியமனம் வழங்கும் நடவடிக்கையை நாம் மேற்கொண்டோம் என்றார்.

# குருநாகல், இலுப்பிட்டியவத்த மக்கள் எதிர்கொண்ட குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு

## வட மேல் மாகாண ஆளுநர் துரித நடவடிக்கை



**புத்தளம் தினகரன் நிருபர்**

குருநாகல் அஸ்வெத்தும இலுப்பிட்டியவத்த மக்கள் எதிர்கொண்ட நீண்டகால குடிநீர் பிரச்சினைக்கு வடமேல் மாகாண ஆளுநர் அல்ஹாபிழ் நஸீர் அஹமட்டினால் தீர்வு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

குருநாகல் அஸ்வெத்தும விகாரையின் விகாராதிபதி ஆனந்த ஹிமி, முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர் மொஹமட் மூஸீன் போன்றோர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள இந்த பிரச்சினைக்கு உடனடியாக வட மேல் மாகாண ஆளுநர் நிரந்தர தீர்வினை அம்மக்களின் எதிர்கால நலனுக்காக பெற்றுக் கொடுத்துள்ளார்.

ஆளுநர் நஸீர் அஹமட், முன்னெடுத்த துரித நடவடிக்கை காரணமாக குருநாகல் அஸ்வெத்தும இலுப்பிட்டியவத்த மக்களின் பல நாள் தீர்க்கப்படாத இந்த குடிநீர் பிரச்சினைக்கு உடனடியான தீர்வினை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

# பேருவளை நகர் பள்ளிவாசல் சபை தலைவர் கமால்தீன் காலமானார்

பேருவளை நகரிலுள்ள பள்ளிவாசல் நிர்வாக சபைத் தலைவரும் சமூக சேவையாளருமான அல்ஹாஜ் கமால்தீன் (வயது 62) நேற்று முன்தினம் (12) தர்கா நகர் இல்லத்தில் காலமானார்.



தர்கா நகர், சீனா துறையைச் சேர்ந்த இவர், காலஞ்சென்ற முகம்மது தாஸிம் மற்றும் உம்மு நோனா தம்பதியின் புதல்வரான இவர், நான்கு பிள்ளைகளின் தகப்பனாரும் ஆவார்.

பேருவளை நகரில் ஒரு பள்ளிவாசல் இல்லாத குறையை நிவர்த்தி செய்யுமுகமாக, தனது வர்த்தக நிலையத்தின் மேல்மாடியை மக்களுக்கு கடமையான தொழுகையை நிறைவேற்றிக் கொள்ள இருபது வருடங்களுக்கு முன்பு இடம் ஒதுக்கிக் கொடுத்தார்.

அதன் பின்னர் அவ்விடத்திலே பள்ளிவாசல் அமையப் பெற்றது இங்கு குறிப்பிடத்தக்கது.

இவரின் அளப்பரிய இப்பணியும், தியாகமும் இன்றும் மக்களின் பாராட்டுக்குரியதாக அமைந்தது.

அன்னாரின் ஜனாஸா, நேற்று திங்கட் கிழமை (13), லுஹர் தொழுகையை அடுத்து, தர்கா நகர் முஹிய்யத்தீன் ஜும்ஆ மஸ்ஜித் (பெரிய பள்ளி) மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. ஜனாஸா நல்லடக்கத்தில் பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

# வான் மற்றும் விண்வெளி சக்தி மாநாட்டில் விமானப்படை தளபதி பங்கேற்பு

இலங்கை விமானப்படை தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ அவுஸ்திரேலியாவில் அண்மையில் இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வான் மற்றும் விண்வெளி சக்தி மாநாட்டில் கலந்துகொண்டார்.

"தேசிய வான் மற்றும் விண்வெளி சக்தியை தயார்ப்படுத்தல் மற்றும் மீள்திறனை உருவாக்குதல்" எனும் கருப்பொருளில் இந்த மாநாடு இடம்பெற்றது. இதில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த உயர்மட்ட பாதுகாப்புத் தலைவர்கள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் இராணுவப் பிரதிநிதிகள் பங்குபற்றினர்.

இந்த நிகழ்வின் போது எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ பல முக்கிய பிரமுகர்களுடன் இருதரப்பு கலந்துரையாடல்களில் ஈடுபட்டார். விமானப்படைத் தளபதி அவுஸ்திரேலியாவுக்கான இலங்கையின்



உயர்ஸ்தானிகர் திருமதி சித்ராங்கனி வாகீஸ்வராவையும் சந்தித்தார், அங்கு அவர்கள் கடல்சார் கள விழிப்புணர்வு தொடர்பான கூட்டு முயற்சிகள் மற்றும் ஆஸ்திரேலிய இராணுவத்துடன் கூட்டுப் பயிற்சிக்கான வாய்ப்புகளைப் பற்றி கலந்துரையாடினர். மேலும், இரு விமானப்படைகளுக்கு இடையேயான பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்காக ராயல் அவுஸ்திரேலிய விமானப்படையின் தளபதி எயார் மார்ஷல் ராபர்ட் சிப்மேனை சந்தித்தார்.

அதேபோன்று, அவுஸ்திரேலியாவில் உள்ள உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுடனான கலந்துரையாடல்கள், ISR திறன்கள் மற்றும் பயிற்சி வாய்ப்புகளை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்ட Beechcraft King Air 350 நன்கொடையின் மூலம் இலங்கை விமானப்படையின் திறன்களை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தப்பட்டது.

மேலும் விமானப்படை தளபதி அவர்கள் ஜப்பானின் துணை பதவி நிலை பிரதானியான லெப்டினன்ட் ஜெனரல் டகுடோ ஒகஸ்வராவுடன் கலந்துரையாடினார், குறிப்பாக இதன்போது மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் நிவாரணத்தில் (HADR) பாதுகாப்பு ஒத்துழைப்பு மற்றும் கூட்டுப் பயிற்சியின் முக்கியத்துவம் பற்றி கலந்துரையாடப்பட்டது.

# திருமணம் முடிக்க காத்திருக்கும் யுவதிகளுக்கு விசேட கற்கைநெறி



**கிண்ணியா தினகரன் நிருபர்**

லைப்பொண்ட் நிறுவனத்தின் திருமண வாழ்வை எதிர்நோக்கியுள்ள யுவதிகளுக்கான 2 மாத நிகழ்நிலை கற்கை நெறிக்கான அங்குரார்ப்பண நிகழ்வு வெள்ளிக்கிழமை (10) மாலை மாவனல்லை கட்டுகஹவத்தை Grand saphire (peace centre) மண்டபத்தில் நடைபெற்றது.

மேற்படி அங்குரார்ப்பண வைபவத்தில் அகில இலங்கை அஹதிய்யா பாடசாலைகள் மத்திய சம்மேளனத்தின் தலைவரும் லைப்பொண்ட் நிறுவனத்தின் பணிப்பாளருமான எம். ஆர். எம். ஸரூக் சிறப்பு அதிதியாகவும் லக்சிறி கார்கோ நிறுவனம் சார்பில் சிறப்பு விருந்தினராக ஷஹீன் இக்பாலும் கலந்து கொண்டனர்.

மேலும் லைப்பொண்ட் நிறுவனத்தின் இயக்குனர் அஷ்ஷெய்க் முஹம்மத் பகீஹுத்தீன், முகாமையாளர் இர்ஷாத் இமாம்தீன், வளவாளர் அஷ்ஷெய்க் அக்ரம் அப்துஸ் ஸமத் ஆகியோர் இவ்வைபவத்தில் அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர்.

மேற்படி அங்குரார்ப்பண நிகழ்வில் பெருமளவிலான மாணவிகள், பெற்றோர்களும் கலந்து கொண்டமை விசேட அம்சமாகும்.

# ஷாதுலிய்யா தரீக்காவின் புதிய கலீபாக்கள் நியமனம்



**பேருவளை விசேட நிருபர்**

இலங்கையில் ஷாதுலிய்யாத் தரீக்காவின் ஆன்மீகப் பணிகளை மேலும் செவ்வனே முன்னெடுத்துச் செல்லும் வகையில் தரீக்காவின் உலக ஆன்மிகத் தலைவர் சங்கைக்குரிய செய்கு ஸஜ்ஜாதா அஷ் செய்ஹ் மஹ்தி அப்துல்லாஹ் அல்பாஸி அல் மக்கி அஷ் ஷாதுலி அவர்களினால் புதிதாக ஆறு பேர் கலீபதுஷ்ஷாதுலிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

சீனன்கோட்டை, பேருவளை மருதானை, தர்கா நகர் வாழைச்சேனை மற்றும் காலி ஆகிய பகுதிகளை சேர்ந்த ஆறு உலமாக்கள் இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுள் 4 பேருக்கான நியமனக் கடிதம் பேருவளை மருதானை ஷாதுலிய்யா ஸாவியாவில் நடைபெற்ற 157ஆவது வருட மனாக்கிப் தமாம் மஜ்லிஸின் போது கலீபத்துல் குலபா மௌலவி அல்ஹாஜ் எம்.இஸட். முஹம்மத் ஸுஹுர் (பாரி) மற்றும் சங்கைக்குரிய ஸாதாத்மார்களினால் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.மௌலவி அல்ஹாஜ் எம்.ஐ.எம்.பாரூக் (மக்கி) பேருவளை, மௌலவி மபாஸுல் ஹுஸைன் (பஹ்ஜி) தர்கா நகர்,மௌலவி அல்ஹாஜ் எம்.ஜே.எம்.பஸ்லான் (அஷ்ரபி பீ.ஏ.) பேருவளை,மௌலவி அப்துல் மஜீத் (ஷர்கி) வாழைச்சேனை ஆகியோருக்கே இவ்வாறு நியமனக் கடிதம் கையளிக்கப்பட்டதோடு கலீபதுல் குலபாவுக்கான ஷேக் நாயத்தின் அதிகாரப்பூர்வமான கடிதம் ஒன்றும் கையளிக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. கொழும்பு உம்மு சாவியா நிர்வாக சபை தலைவர் தேசபந்து மக்கி ஹாசிம், மஸ்ஜிதுல் அப்ரார் ஜமாத் சபை தலைவர் தேசமான்ய சட்டத்தரணி எம்.ஏ.எம்.ஹனபி, கலீபதுஷ் ஷாதுலிகளான மௌலவிகள் ஏ.எச்.எம்.அஜ்வாத் (அல்பாஸி) அஹ்மத் சூபி (மஹ்ழரி) ஆகியோரினால் கடிதம் கையளிக்கப்பட்டது.

கலீபதுஷ்ஷாதுலி மௌலவி எம்.ஐ.எம்.ரபீக் (பஹ்ஜி) தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன.

# கேரள கஞ்சா வைத்திருந்த பொலிஸ் சார்ஜன்ட் கைது

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

கேரள கஞ்சாவுடன் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரை மன்னார் கடற்படை முகாமைச் சேர்ந்த புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

கடற்படை புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றிற்கமைய மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது அநுராதபுரம் 50 கடைப் பகுதியில் இந்த பொலிஸ் சார்ஜன்ட் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளுக்காக குறித்த சார்ஜன்ட் அநுராதபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.அநுராதபுரம் தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் மேற்பார்வையின் கீழ் குறித்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்கு வடமத்திய மாகாண



சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

# திஹாரியில் மின்சாரம் தாக்கி ஒருவர் பலி; நால்வர் காயம்

நிட்டம்புவ, திஹாரிய பிரதேசத்தில் மரணச்சடங்கு நிகழ்வொன்றிற்காக வீதியிலிருந்த மின் கம்பத்தில் மின் விளக்குகளைப் பொருத்தச் சென்ற ஐவர் மின்சாரம் தாக்கி காயமடைந்துள்ள நிலையில் அவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக நிட்டம்புவ பொலிஸார் தெரிவித்தனர்.திஹாரிய, கலகெடிஹேன பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயது நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். காயமடைந்த நால்வரும் வத்துபிட்டிவல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வீதியிலிருந்த மின் கம்பமானது மின்விளக்குகளைப் பொருத்தப் பயன்படுத்தப்பட்ட மின் கம்பிகளுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது இது தொடர்பாக பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 மே 14 செவ்வாய்க்கிழமை
தினகரன்
THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்
சுபஹ் - 04.35
ளுஹர் - 12.08
அஸர் - 03.28
மஃரிப் - 06.20
இஷா - 07.33

இன்றைய சுபதினம்
குரோதி வருடம் வைகாசி 01
ராகுகாலம் : பகல் : 2.53 - 4.23வரை
சுபநேரம் : காலை : 10.23 - 11.53வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சூன்ய



# கத்தியின் கூர் விளிம்பில் நாட்டின் பொருளாதாரம்

## பாலங்களை புனரமைக்க பணம் அச்சிட முடியாது

லோரன்ஸ் செல்வநாயகம்



நாட்டிலுள்ள அனைத்து பாலங்கள் உடைந்து விழுந்தாலும் அதனை திருத்துவதற்காக ஒருபோதும் மீண்டும் பணத்தை அச்சிட முடியாது. பணம் அச்சிடுவதை மத்திய வங்கி தடை செய்துள்ளது என ஊடகத்துறை மற்றும் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரம் இன்னும் கத்தி நுனியிலேயே உள்ளதால் தவறியேனும் ஒரு அடியை எடுத்து வைத்தாலும் படுகாயம் ஏற்படும் அபாயம் இருக்கிறதென்றும் போக்குவரத்து மற்றும் ஊடகத்துறை அமைச்சர் தெரிவித்தார். நாடு இவ்வாறான நிலையில் காணப்படும் போது பாராளுமன்றத்தில் அனைவரும் டயானாவை பற்றி பேசுவது விந்தையாக உள்ளது. நாட்டின் பொருளாதாரம் தொடர்பான பொறுப்பு இந்த பாராளுமன்றத்துக்கு உள்ளதால் அனைவரும் சிறந்த உரைக்காக இந்த சபையை பயன்படுத்துவது அவசியம் என்றும் அவர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சியினர் அரசாங்கத்தை உருவாக்கியதும் கடன் தொடர்பான உடன்படிக்கைகளை மாற்றுவதாக தெரிவிப்பது நாட்டு மக்களை ஏமாற்றுவதற்கே என தெரிவித்த அவர், கடந்த அரசாங்கம் பெற்றுக் கொண்ட கடனை செலுத்துவது அவசியம் என்றும் அதற்கான

06

# சமூக ஆலோசனைக் குழுக்களில் உள்ளூராட்சி வேட்பாளர்கள் இல்லை

## பிரதமர் தினேஷ் குணவர்தன சபையில் தெரிவிப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)



சமூக ஆலோசனைக்குழு உருவாக்கும் சுற்று நிருபத்தில், எந்த ஒரு இடத்திலும் உள்ளூராட்சி சபை தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் உறுப்பினர்களாக நியமிக்கப்படுவது தொடர்பில் குறிப்பிடப்படவில்லையென பிரதமர் தினேஷ் குணவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

மேற்படி குழுவில் நாடளாவிய ரீதியிலுள்ள ஓய்வு பெற்ற பொறியியலாளர்கள், தொழில்நுட்ப அதிகாரிகள், பல்வேறு துறைகளிலும் நிபுணத்துவம் பெற்றவர்கள் மற்றும் கிராமிய தலைவர்கள் நியமிக்கப்பட்டு அவர்கள் நாட்டின் அபிவிருத்திக்காக பயன்படுத்தப்படுவரென்றும் பிரதமர் தெரிவித்தார்.

மாகாண சபையிலுள்ள பொறுப்புள்ள கல்விமான்களை இக்குழுவில் இணைத்துக் கொள்ளவுள்ளதாக தெரிவித்த பிரதமர், அவ்வாறு இணைத்துக் கொள்ள வேண்டாமென எதிர்க்கட்சி தெரிவிக்கின்றதா? என்றும் அவர் சபையில் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று தயாசிறி ஜயசேக்கர எம்பி எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே, பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

இரண்டு வருடங்கள் நடைபெறாமலிருந்த அபிவிருத்தி திட்டங்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு வரவு செலவு திட்டத்தின் மூலம் திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள பிரதமர், அபிவிருத்தி குழுக்களில் பங்கு பற்றி, கோரிக்கைகள் மற்றும் யோசனைகளை சமர்ப்பித்துள்ள அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பன்முகப்படுத்தப்பட்ட நிதி, மாகாண சபை மூலமான நிதி, மத்திய அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்களும் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சி என்ற ஒன்று தற்போது கிடையாதென தெரிவித்த அவர், அன்று சபை முதல்வராக பதவி வகித்து லக்ஷ்மன் கிரியெல்ல எம்பி, செயற்பட்ட விதம் காரணமாகவே இன்றும் மாகாண சபை தேர்தலை நடத்த முடியாமல் உள்ளது என்றும்

06

# தினகரன் 92 வருடங்களுக்கு முன்

தினகரன்
THINAKARAN
තිනකරන්

**92**

வருடங்களுக்கு முன்

## தினகரன்

இன்று 14 மே 1932


வ ர வு
செலவு
1932-33 வருட
மதிப்பு தயார்
செலவு
அதிகம்
சம்பள வெட்டு நீங்காது
1932-33 பண வருஷத்து வரவு செலவு மதிப்புகள் யாவும் முற்றுப் பெற்று விட்டன என்றும் வருகிற பண வருடத்துப் பண நிலைமையைப் பற்றித் தற்போது கிடைக்கக் கூடிய விவரங்கள் யாவற்றையும் மந்திரிமார் சரிவர அறிந்து கொண்டனர் என்றும் செய்தி எட்டுகிறது.

### வரவு செலவு

1932-33 வருட
மதிப்பு தயார்

### செலவு அதிகம்

**சம்பள வெட்டு நீங்காது**

**193233 பண வருஷத்து வரவு செலவு மதிப்புகள் யாவும் முற்றுப் பெற்று விட்டன என்றும் வருகிற பண வருடத்துப் பண நிலைமையைப் பற்றித் தற்போது கிடைக்கக் கூடிய விவரங்கள் யாவற்றையும் மந்திரி மார் சரிவர அறிந்து கொண்டனர் என்றும் செய்தி எட்டுகிறது.**

**ஆனால் கடந்த வருடங்களின் வரவு செலவுத் திட்டங்களுக்கும் வருகிற வருட வரவு செலவுத் திட்டத்துக்கும் இரு விஷயங்களில் வித்தியாசம் உண்டு.**

# சமூக ஊடகங்களில் ஆபாச வார்த்தைகளுடனான பாடல்

## விசாரணைக்கு அமைச்சர் விதுர பணிப்பு

சமூக ஊடகங்களில் இடம்பெற்றுவரும் ஆபாச வார்த்தைகள் அடங்கிய பாடல் குறித்து விசாரணை ஆரம்பமாகியுள்ளன.

புத்தசாசனம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவின் பணிப்புரைக்கு அமைவாக, இவ்விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சமூக ஊடகங்களில் பதிவேற்றுபவர்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு தொலைத்தொடர்பு

06

# ஓமானிலிருந்து வந்த நபர் 10,000 சிகரட்டுகளுடன் கைது

சட்டவிரோத மாக சுமார் 10,000 வெளிநாட்டு சிகரட்டுகளை நாட்டுக்குள் கொண்டுவந்த, 36 வயதுடைய நபர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார்.

இவர், ஓமானின் தலைநகர் மஸ்கட்டிலிருந்து ஓ.வி.137 இலக்க விமானத்தில் நேற்று முன்தினம் (12) 2.35 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார். இதன் போது, விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் அதிகாரிகள் அவரை சோதனையிட்டனர்.

06

# மருந்துகள் பதிவு செய்யப்பட்டதை உறுதிப்படுத்த விசேட ஸ்டிக்கர்கள்

## அடுத்த மாதம் முதல் நடைமுறைக்கு

மருந்துகள் பதிவு செய்யப்பட்டுள்ளமையை உறுதிப்படுத்துவதற்கு விசேட ஸ்டிக்கர் அறிமுகம் செய்யப்படவுள்ளதாக, தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பான கொள்வனவு கோரிக்கை, அரச அச்சகக் கூட்டுத்தாபனத்துக்கு வழங்கப்பட்டுள்ளதாக அதன் தலைவர், விசேட வைத்தியர் ஆனந்த விஜேவிக்கிரம குறிப்பிட்டுள்ளார்.

மருந்துகளுக்காக போலி பதிவுச் சான்றிதழ்கள் முன்வைக்கப்படுவதைத் தவிர்ப்பதற்காக, இந்நடைமுறை அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இதற்கமைய, தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்படும் சகல மருந்துகளுக்கும் விசேட ஸ்டிக்கர் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளதாக ஆனந்த விஜேவிக்கிரம கூறினார்.

ஒரு மாதத்துக்குள் இவ்வேலைத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை திட்டமிட்டுள்ளது.

# வேதாந்தியின் விவேகங்களை புரியாததால் பாரிய பின்னடைவு

## ஊடகவியலாளர் சட்டத்தரணி தாஜ் கவலை

(பாலமுனை தினகரன் நிருபர்)



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபக தவிசாளர் வேதாந்தி ஷேகு இஸ்ஸடீனின் விவேகங்களை புரியாததால், முஸ்லிம் அரசியலில் பாரிய பின்னடைவு ஏற்பட்டுள்ளதாக, சட்டத்தரணியும் ஊடகவியலாளருமான ஏ.எம். தாஜ் தெரிவித்தார்.

வரலாறாகும் வேதாந்தி எனும் முத்திரை வெளியீட்டு விழாவில் சிறப்புரை நிகழ்த்தியபோதே ஏ.எம்.தாஜ் இவ்வாறு குறிப்பிட்டார். அக்கரைப்பற்றில் நடந்த இந்த முத்திரை வெளியீட்டு விழாவில் உரையாற்றி அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

முஸ்லிம் தனித்துவ அரசியலில் வேதாந்தியின் வகிபாகம் நமது சமூகத்தில் ஆழ வேரூன்றியுள்ளது.

சமூக,சமயோசித சிந்தனைகளால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை வழி நடத்தியவர் வேதாந்தி தலைமைத்துவம் அஷ்ரபிடம் இருந்தாலும் தீட்சண்யம் தவிசாளரான வேதாந்தியிடமே இருந்தது.

இதற்கான சான்றுகளைத் தேடுவோர் வேதாந்தியின் அரசியல் பேச்சுக்கள், அறிக்கைகள் மற்றும் நடத்தைகளில் காணலாம்.

ஒலுவில் துறைமுகம் தொட்டு, உரிமை அரசியல் வரை முஸ்லிம் சமூகம் இன்று பல சவால்களை சந்தித்துள்ளமைக்கு வேதாந்தியின் விவேகங்களை புரிந்துகொள்ளாததே காரணம்.



தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321


குரோதி வருடம் வைகாசி மாதம் 01ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 துல்கஃதா பிறை 05

**குறள் தரும் சிந்தனை**

அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்
நண்பு என்னும் நாடாச் சிறப்பு

*அன்பு பிறரிடம் விருப்பம் உடையவராக வாழும் தன்மையைத் தரும்: அது எல்லாரிடத்தும் நட்பு என்றுசொல்லப்படும் அளவற்ற சிறப்பைத் தரும்.*

# மண்சரிவு அனர்த்த ஆபத்தை அலட்சியம் செய்யலாகாது!

மழையுடன் கூடிய காலநிலை ஆரம்பமாகியுள்ளதைத் தொடர்ந்து மண்சரிவு அபாயம் குறித்து முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. நாட்டில் மழையுடன் கூடிய காலநிலை நிலவும் காலப்பகுதியில் மலைநாட்டிலும் மலை சார்ந்த பிரதேசங்களிலும் சிறிய அளவிலோ பெரிய அளவிலோ மண்சரிவுகள் ஏற்படுவது வழமையாகும்.

அந்த வகையில் தற்போதைய மழையுடன் கூடிய காலநிலையின் விளைவாகவும் மண்சரிவு ஏற்படக் கூடிய அச்சுறுத்தல் ஏற்பட்டு இருக்கின்றது. இலங்கையில் மண்சரிவு ஆராய்ச்சியில் முன்னணியில் திகழும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் இதனை சுட்டிக்காட்டி உள்ளது. குறிப்பாக மலைநாட்டு பிரதேசங்களும் மலைசார்ந்த பிரதேசங்களும் இத்தகைய அச்சுறுத்தலுக்கு முகம்கொடுக்கக் கூடியனவாக உள்ளன.

மண்சரிவு அச்சுறுத்தல்மிக்க பிரதேசங்களில் நூறு மில்லி மீற்றருக்கு மேல் மழை பெய்யுமாயின் மண்சரிவு அச்சுறுத்தலுக்கு முகம்கொடுக்க நேரிடும் என்பதுதான் அனர்த்த முகாமைத்துவ நிறுவனத்தின் அறிவுறுத்தலாகும்.

இந்த நிலையில் வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் மத்தி, சப்ரகமுவ, ஊவா மாகாணங்களிலும் காலி, மாத்தறை, களுத்துறை ஆகிய மாவட்டங்களிலும் அடுத்துவரும் 24 மணித்தியாலங்களுக்கு 100 மில்லி மீற்றருக்கும் மேற்பட்ட மழை பெய்யும் என்று குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில் பதுளை, கேகாலை, குருநாகல் மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு முதற்கட்ட மண்சரிவு எச்சரிக்கையை தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் விடுத்திருக்கிறது.

இந்நாட்டில் மண்சரிவு அச்சுறுத்தல்மிக்க பிரதேசங்கள் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டு மண்சரிவு அச்சுறுத்தல்மிக்க பிரதேசங்களாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளன. அப்பிரதேசங்கள் மனித குடியிருப்புகளுக்கு பாதுகாப்பானவை அல்ல. கடும் மழை பெய்யும் போது மண்சரிவு குறித்து முன்னவதானத்துடன் செயற்படுவது இன்றியமையாததாகும். அது தொடர்பிலான தகவல்கள் அந்தந்தப் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு பிரதேசவாசிகள் அறிவூட்டப்பட்டும் உள்ளனர்.

அதனால் மண்சரிவு அச்சுறுத்தல்மிக்க பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் கடும் மழை பெய்யும் போது முன்னவதானத்துடன் செயற்படத் தவறலாகாது. அதேநேரம் அனர்த்த முகாமைத்துவ நிலையம், தேசிய கட்டட ஆராய்ச்சி நிலையம் என்பவற்றின் அறிவித்தல் குறித்தும் கவனம் செலுத்த வேண்டும்.

குறிப்பாக மழை பெய்யும் போது மலைநாட்டிலும் மலைசார்ந்த பிரதேசங்களிலும் வசிக்கும் மக்கள் மண்சரிவு முன்னெச்சரிக்கை குறித்து கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். இது தொடர்பில் கவனயீனமாகவோ அசிரத்தையுடனோ நடந்து கொள்ளக்கூடாது.

ஏனெனில் மண்சரிவு என்பது திடீரென ஏற்படக்கூடிய ஒன்று. அதனால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களும் சேதங்களும் மிக அதிகமாகும். பதுளை மாவட்டத்திலுள்ள மீரியபெத்த பிரதேசம், கேகாலை மாவட்டத்திலுள்ள கீக்கியனகந்த பிரதேசம் உள்ளிட்ட பல பிரதேசங்களில் ஏற்பட்ட மண்சரிவுகள் இதற்கு நல்ல எடுத்துக்காட்டுகளாகும். அந்த மண்சரிவுகளின் போது பலர் மண்ணில் புதையுண்டு மாண்டு போயினர். அத்தோடு பாரிய சொத்து அழிவுகளுக்கும் நாடு முகம்கொடுத்தது. அத்தோடு நில்லாது ஏனைய மண்சரிவுகளும் கூட அத்தகைய பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடியனவாக அமைந்துள்ளன.

இந்த மண்சரிவுகள் திடீரென ஏற்படக்கூடியவை என்றாலும் அவை ஏற்பட முன்னர் சில முன்சமிக்ஞைகள் வெளிப்படும் என்பதுதான் பூகற்பவியலாளர்களின் கருத்தாகும். குறிப்பாக ஏதாவதொரு பிரதேசத்தில் மண்சரிவு ஏற்படுமாயின் அதற்கு முன்னர் அப்பிரதேச சுற்றாடலில் சில முன்சமிக்ஞைகளை அவதானிக்கலாம்.

அதாவது புதிய நீரூற்றுக்கள் தோற்றம் பெறல், ஏற்கனவே இருக்கும் நீரூற்றுக்கள் வற்றிப்போகும் அல்லது காணாமல் போகும். நீரூற்றுக்களில் சேற்றுநீர் வெளிப்படும், உயரமான மரங்கள் திடீரென சரிவடையும். இவ்வாறான முன்சமிக்ஞைகளை சுற்றாடலில் அவதானிக்கக்கூடியதாக இருந்தால் அச்சந்தரப்பங்களில் மண்சரிவு அச்சுறுத்தல்மிக்க பிரதேசங்களில் வசிப்பவர்கள் தாமதியாது அவ்விடங்களை விட்டு பாதுகாப்பான இடங்களை நோக்கிச் செல்ல வேண்டும். அத்தோடு இந்த முன்சமிக்ஞைகள் குறித்து கிராம உத்தியோகத்தர் ஊடாக பிரதேச செயலாளருக்கும் அறிவிக்கவும் தவறக்கூடாது. அதன் ஊடாக மண்சரிவு காரணமாக ஏற்படக்கூடிய பாதிப்புக்களையும் அழிவுகளையும் தவிர்த்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

ஆகவே மண்சரிவுகளால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைத் தவிர்த்துக் கொள்வது குறித்து ஒவ்வொருவரும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். இதனை தம் பொறுப்பாகக் கருத வேண்டியது அவரவர் பொறுப்பாகும். அதன் ஊடாக மண்சரிவினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களையும் அழிவுகளையும் தவிர்த்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

editor.tkn@lakehouse.lk

# எதிர்வரும் ஆண்டில் 3 சதவீத பொருளாதார வளர்ச்சி; அரச ஊழியர் சம்பளத்தையும் அதிகரிக்க நடவடிக்கை

## சர்வதேச தாதியர்தின நிகழ்வில் ஜனாதிபதி தெரிவிப்பு



2025ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம் 3% ஆக உயரும் என எதிர்பார்ப்பதாகவும் அதற்கமைய அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அலரிமாளிகையில் நேற்றுமுன்தினம் (12) முற்பகல் நடைபெற்ற சர்வதேச தாதியர்தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

ஏற்றுமதிப் பொருளாதாரத்துடன் நாட்டின் பொருளாதாரத்தை விரைவான அபிவிருத்தியை நோக்கி கொண்டு செல்வதற்கு நான்கு பிரதான சட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும் என்று தெரிவித்த ஜனாதிபதி, மத்திய வங்கியை சுயாதீனமாக செயற்பட அனுமதிக்கும் மத்திய வங்கிச் சட்டம் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும், அரச கடன் முகாமைத்துவ சட்டம், அரச நிதிச் சட்டம், பொருளாதார பரிமாற்றச் சட்டம் உள்ளிட்ட சட்டமூலங்கள் இந்த ஜுன் மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

தாதியர் சேவையின் ஸ்தாபகரான புளோரன்ஸ் நைட்டிங்கேலின் பிறந்தநாளை நினைவுகூரும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் மே 12 அன்று சர்வதேச தாதியர் தினம் கொண்டாடப்படுகிறது.இந்த ஆண்டு சர்வதேச தாதியர் தினத்தின் கருப்பொருள் 'நமது தாதியர்கள் நமது எதிர்காலம், தாதியர் சேவையின் பொருளாதார சக்தி' என்பதாகும்.

இதேவேளை, இலங்கை தாதியர் பல்கலைக்கழகம் ஜனாதிபதியினால் திறந்து வைக்கப்பட்டதுடன், அது தொடர்பான நினைவுப் பலகை டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் ஊடாக திறந்து வைக்கப்பட்டது.

அரச சேவை தாதியர் சங்கத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் பிரதமர் தினேஷ் குணவர்தனவினால் ஆரம்பிக்கப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறியதாவது:

"தாதியர் சேவையை உருவாக்கிய புளோரன்ஸ் நைட்டிங்கேலின் பிறந்தநாளை நாம் கொண்டாடுகிறோம். எமது வணக்கத்திற்குரிய முருத்தொடுவே ஆனந்த தேரரின் பெருமுயற்சியின் விளைவாக இந்தப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனினும், அந்தப் பணியை வெற்றிகரமாக முடித்துள்ளோம். இப்பல்கலைக்கழகம் தற்போதுள்ள கட்டடத்தில் ஆரம்பித்து பின்னர் மேம்படுத்தப்படும்.

எமது வணக்கத்திற்குரிய முருத்தெட்டுவே ஆனந்த தேரரின் வாழ்க்கை வரலாற்றின் முக்கிய அங்கமாக இப்பல்கலைக்கழகம் திகழ்கிறது. தாதியர் சேவை மட்டுமின்றி, இந்தப் பல்கலைக் கழகத்தில் சர்வதேச மொழிகளையும் கற்பிக்க வேண்டும். ஆங்கிலம், ஜெர்மன், ஜப்பான், கொரியன், சீனா உள்ளிட்ட அனைத்து மொழி அறிவும் இங்கு வழங்கப்பட வேண்டும். இந்த அறிவைப் பெற்ற பிறகு, தாதியர்கள் வெளிநாடுகளில் சேவைவாய்ப்புகளைப் பெறலாம்.

எவ்வாறாவது அரச ஊழியர்களுக்கு முடிந்த அளவு சலுகைகளை வழங்கியுள்ளோம். அடுத்த ஆண்டு சம்பளத்தை அதிகரிப்பது குறித்தும் எமது கவனம் செலுத்தப்பட்டுள்ளது. கடந்த 4 ஆண்டுகளில் நாங்கள் மிகவும் கடினமான சூழ்நிலையை எதிர்கொண்டோம். இந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சி கடந்த ஆண்டின் கடைசி இரண்டு காலாண்டுகளில்தான் தொடங்கியது.

மேலும் நாட்டில் போசாக்குக் குறைபாடு அதிகரிப்பது ஒரு பெரிய பிரச்சினையாக மாறியுள்ளது. வறுமை மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு என்பன சில குழந்தைகளின் வளர்ச்சிக்கு தடையாக உள்ளன. இந்த நிலை எதிர்காலத்தில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தலாம். எனவே, இந்நிலையைக் கட்டுப்படுத்த நிதி ஒதுக்க வேண்டியதாயிற்று. அதற்காக உலக வங்கியுடன் பேச்சுவார்த்தை நடத்தி சமுர்த்தியை விட மூன்று மடங்கு நிவாரணத்தை மக்களுக்கு வழங்க ஏற்பாடு செய்தோம். மேலும், பயனாளிகளின் எண்ணிக்கை 18 இலட்சத்தில் இருந்து 24 இலட்சமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேலும், அரசு ஊழியர்களின் கஷ்டங்களை உணர்ந்து அவர்களுக்கு பத்தாயிரம் ரூபாய் சம்பள உயர்வு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் ஊடாக தனியார் துறையிலும் தோட்டத் துறையிலும் சம்பளத்தை உயர்த்துவதற்கான சமிக்ஞை கிடைத்துள்ளது".

பிரதமர் தினேஷ் குணவர்தன உரையாற்றுகையில், " தாதியர் சேவையை முழுச் சமூகமும் மதிக்கிறது. நம் நாட்டில் மற்றும் உலகம் முழுவதும் உள்ள நம்பிக்கையின் காரணமாக இந்த நாள் மரியாதையுடன் நினைவுகூரப்படுகிறது. மக்கள் செவிலியர்களை மிகுந்த நம்பிக்கையுடன் அணுகுகிறார்கள். நீண்ட காலமாக ஆராயப்பட்டு வந்த பிறகு தற்பொழுது தாதியர் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது. எமது வணக்கத்திற்குரிய முருத்தெட்டுவே ஆனந்த தேரரின் கடின உழைப்பு மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுத்த உறுதியான தீர்மானத்தின்படி இன்று தாதியர் பல்கலைக்கழகத்தை நிறுவ முடிந்துள்ளது" என்றார்.

கைத்தொழில் மற்றும் சுகாதார அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பத்திரன உரையாற்றுகையில், "ஜனாதிபதியின் வழிகாட்டலின் கீழ், இலங்கையின் முதலாவது தாதியர் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டுள்ளது. பிரதிப் பணிப்பாளர் நாயகம் பதவியும் உருவாக்கப்பட்டுள்ளது. இலங்கையின் சுகாதாரத் துறையில் தாதியர் சேவையின் சிறப்பைப் பாராட்டி சீருடைக் கொடுப்பனவை அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். இலங்கையின் சுகாதார சேவையில் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரத்திற்கும் அதிகமானோர் பணிபுரிகின்றனர். 2024ஆம் ஆண்டு சுகாதார சேவைக்காக 410 பில்லியன் ரூபா அதிகளவான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது" என்று தெரிவித்தார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் வேந்தர், அரச சேவை ஐக்கிய தாதியர் சங்கத்தின் தலைவர் வண. முருத்தெட்டுவே ஆனந்த தேரர் உரையாற்றுகையில், "தாதியர்கள் அனைவரும் நைட்டிங்கேலின் வழியைப் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன். இன்று சின்ன சின்ன விடயங்களுக்கு கூட போராடுகிறோம். வெற்றி பெற்றதை பாதுகாப்பதுதான் தற்பொழுது எஞ்சியுள்ளது. கடமைகளை நிறைவேற்றி சம்பளத்தை உயர்த்துவோம். எத்தகைய அழுத்தங்கள் வந்தாலும் உன்னதமான தாதியர் சேவையின் கௌரவத்தை நிலைநாட்டுமாறு அனைவரையும் கேட்டுக் கொள்கின்றேன். சவால்களுக்கு முகங்கொடுத்து உறுதியுடன் இருந்து ஜனாதிபதி எடுத்த தீர்மானங்களினால் இந்த உரிமைகள் கிடைத்துள்ளன. எமக்கு எந்தப் பிரச்சினையையும் கலந்துரையாடக் கூடிய ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சர் உள்ளனர் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும், அவர்களுடன் நாம் எந்த பிரச்சினையையும் பேச முடியும்" என்று தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, சுதேச மருத்துவ இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி, பாராளுமன்ற உறுப்பினர்களான வஜிர அபேவர்தன, யதாமினி குணவர்தன, சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்திய நிபுணர் பாலித மஹிபால, அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் டொக்டர் ஹரித அலுத்கே, சுகாதார அமை ச்சு அதிகாரிகள், தாதியர் கல்லூரிகளின் அதிபர்கள், தாதி உத்தியோகத்தர்கள், தாதியர் மாணவர்கள், ஓய்வுபெற்ற தாதியர்கள் உள்ளிட்ட பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.





**ஜனாதிபதி ஊடகப் பிரிவு...**

# சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகன் சுவாமிகள் புத்தளம் சேனைக்குடியிருப்பு அமைப்புக்களால் கௌரவிப்பு

யாழ் தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் அமுதகலாசுரபி கலாநிதி மோகன் சுவாமிகள் புத்தளம் சேனைக்குடியிருப்பு பொதுஅமைப்புக்களால் அண்மையில் கௌரவிக்கப்பட்டார்.

பல்லின மக்கள் வாழும் புத்தளம் சேனைக் குடியிருப்பில் பல்வேறு நிவாரண உதவிகள், மாணவர்களுக்கான கல்விச் செயற்றிட்ட உதவிகள், அறநெறிப் பாடசாலைகளுக்கான உதவிகள், ஆலயங்களில் கட்டுமானப் பணிகளுக்கான நிதிக் கொடுப்பனவுகள் போன்றவற்றை தொடர்ச்சியாக வழங்கியமைக்காகவே புத்தளம் சேனைக்குடியிருப்பு மக்களால் 'சமூகச்சுடர்' என்ற விருது வழங்கி மோகன் சுவாமிகள் கௌரவிக்கப்பட்டதுடன் வாழ்த்து மடல், நினைவுச் சின்னமும் வழங்கி வைக்கப்பட்டது.

மேற்படி கௌரவிப்பு நிகழ்வில் சமூகசேவையாளரும் புத்தளம் பிரஜா பொலிஸ் ஆலோசகரும், பொருளாளருமான சுப்பையா மகேந்திரன், புத்தளம் ஓய்வுபெற்ற மருத்துவர் மு. திருச்செல்வம், பெரும்பான்மை இனத்தை சார்ந்த திரிய சக்தி திரிய வனிதா சங்கத் தலைவர் திருமதி க.நிமாலி ரேணுகா சுபசிங்ஹா மற்றும் பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

இதேவேளை சந்நிதியான் ஆச்சிரமத்தின் சைவ கலை பண்பாட்டு பேரவையின் வாராந்த நிகழ்வில் பஞ்ச புராண ஓதுதலுடன் சைவப்புலவர் சங்க செயலாளரும், சைவப்புலவருமான எஸ்.ரி. குமரனின் ஆலயவழிபாடு பற்றிய விசேட ஆன்மீக அருளுரை காலை 10.40 மணி தொடக்கம் 11.45 மணி வரை ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்றது.

மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்குவதற்காக ரூபா 40,000 நிதியும், தொண்டைமானாறு இந்து அபிவிருத்தி நிலையத்தினரின் கோரிக்கைக்கு அமைவாக அறநெறி மாணவர்களை திருக்கேதீச்சரம் அழைத்துச் செல்வதற்காக ரூபா 50,000 நிதியும், பண்டாரவளை, அப்புத்தளை விஹாரகலை தமிழ் வித்தியாலயத்திற்கு படிக்கட்டு கட்டுமானப் பணிக்காக 1ம் கட்ட நிதியாக ரூபா 100,000 நிதியும் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வுகளில் புத்தளம் சேனைப்புலவு பிரதேச மக்கள் அமைப்பு பிரதிநிதிகள், சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவை நிர்வாகிகள், தொண்டர்கள், பக்தர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.







**எஸ்.தில்லைநாதன்...**
*(கரவெட்டி தினகரன் நிருபர்)*

# யுத்தம் முடிவடைந்து 15 வருடங்கள் கடந்தும் கண்ணிவெடிகளால் இன்னும் அச்சுறுத்தல்கள்!

மழைவிட்டும் தூவானம் நிற்கவில்லைஎன்பதுபோல வடக்கு, கிழக்கில் கண்ணிவெடிகள் மற்றும் வெடிபொருட்கள் இன்றும் மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு சவாலாக இருந்து வருகின்றன. யுத்தம் நிறைவுற்று 15 வருடங்கள் ஆகின்றன. ஆனாலும் வடக்கு, கிழக்கில் கண்ணிவெடிகள், வெடிபொருட்களின் அச்சுறுத்தல்கள் முழுமையாக நீங்கியதாக இல்லை. எனவேதான் மக்களின் முழுமையான இயல்புவாழ்க்கைக்குத் தடையாக உள்ள கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் வடக்கில் 'டாஸ்' மனிதநேய கண்ணிவெடிஅகற்றும் அமைப்பு செயற்பட்டு வருகிறது.

இந்நிறுவனமானதுஅரசசார்பற்ற மனிதாபிமான உதவி வழங்கும் நிறுவனம் ஆகும். ஆரம்பத்தில் ஜப்பான் நாட்டின் நிதியுதவியுடன் இந்நிறுவனம் கண்ணிவெடியகற்றும் பணியைத் தொடங்கியது. பின்னர் இந்நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கு ஜப்பானிய அரசாங்கம், அமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஜேர்மனி குடியரசு மற்றும் சுவிற்சர்லாந்தின் கண்ணிவெடியற்ற உலகத்திற்கான அறக்கட்டளை என்பன நிதியுதவி வழங்குகின்றன. இதுவரை கண்ணிவெடியகற்றலில் 8,934 தனிநபர் கண்ணிவெடிகள், 19 கனரகவாகன கண்ணிவெடிகள், 1,154 வெடிக்காத பொருட்கள் மற்றும் 9,962 சிறியஆயுதவெடிபொருட்கள் என்பன கண்டெடுக்கப்பட்டு பாதுகாப்பாக அழிக்கப்பட்டுள்ளன.

ஆபத்துக்கள் நிறைந்த இந்தகண்ணிவெடிகள் அகற்றும் மனிதாபிமானப் பணிகளில் டாஸ் நிறுவனத்தில் ஈடுபட்டுள்ளவர்களில் 90 வீதமானவர்கள் அப்பகுதிகளைச் சேர்ந்த தமிழர்களாவர். அத்தோடு சிங்களவர், முஸ்லிம்கள் எனப் பலரும் இணைந்தே இப்பணிகளை முன்னெடுத்து வருகின்றனர். இவர்களில் முக்கியமாக இக்கண்ணிவெடியகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளவர்களில் 22 வீதமானவர்கள் பெண்களாவர்.

குறிப்பாக களப்பணியாளர்களாக புனர்வாழ்வளிக்கப்பட்ட புலிகள் இயக்க உறுப்பினர்கள் பணியாற்றுகின்றனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்றவர்களாகவும் உள்ளமையால் இதுவொரு வாழ்வாதார தொழிலாகவும் அமைந்துள்ளது. முக்கியாமாக பெண் ஊழியர்கள் பெண் தலைமைத்துவக் குடும்பங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களாகக் காணப்படுகின்றனர்.

மனிதநேய கண்ணிவெடிகற்றம் பணிகள் மூலம் வேலைவாய்ப்பு உள்ளிட்ட பல வழிகளில் நேரடியாக பயனடைந்தவர்களாக 2,807 பேரும், மறைமுகப் பயனாளிகளாக சுமார் 17,941 பேரும் காணப்படுகின்றனர்.

தற்போது கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும் கண்ணிவெடி அகற்றும் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் பணியானது தனியே மக்களை கண்ணிவெடிகள் மற்றும் வெடிக்காத வெடிபொருட்களிலிருந்து பாதுகாப்பது மட்டுமன்றி அவர்களுக்கான வாழ்வாதாரத்திற்கான தொழிலாகவும் அமைந்துள்ளது.







வெடிபொருட்களை அகற்றும் மனிதநேய பணியில் டாஸ் நிறுவனம்

**தமிழ்ச்செல்வன்...**
*(கிளிநொச்சி குறூப் நிருபர்)*

# தூய ஆவியானவர் திருவிழாவும் திருச்சபையின் பிறந்தநாளும்




## திருச்சபை 19ஆம் திகதி சிறப்பிக்கின்றது

கத்தோலிக்க திருச்சபை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமையன்று தூய ஆவியானவர் பெருவிழாவைக் கொண்டாடுகிறது.

ஒரு குழந்தை பிறந்துவிட்டால் அன்று அந்தக் குடும்பத்தில் மகிழ்ச்சி. மிக ஆடம்பரமாக மிக மகிழ்ச்சியோடு பெற்றோர், உறவினர்கள் கொண்டாடுகிறார்கள். ஏனெனில் புதுவாழ்வு கிடைத்தது என்பதால்தான்.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை தூய ஆவியின் பெருவிழாவை நாம் கொண்டாடுகிறோம். ஆவியானவர் நமக்கு ஆண்டவர் இயேசுவின் விண்ணக ஏற்புக்குப் பிறகு இறை தந்தையால் தரப்பட்ட கொடை.

தூய ஆவி பிறந்தார் என்பது அல்ல. மாறாக தூய ஆவியானவரின் வருகையால் திருச்சபையானது பிறப்பெடுத்தது என்பது தான் அதன் மகிமை.

இறை மக்கள் பிறந்தார்கள். ஆவியின் வாழ்வில் திருத்தொண்டர்கள் தொடங்கி, சீடர்கள், ஆதி கிறிஸ்தவர்கள் என்றெல்லாம் திருக்கூட்டமானது பெருகியது என்பதைத் தான் அதன் மூலம் நினைவு கூருகின்றோம்.

ஆதியிலே தூய ஆவியானவர் காற்றாக, தீப்பிழம்பாக, புறாவாக, ஏன் தண்ணீராக அடையாளம் காட்டப்பட்டுள்ளார். மனித வாழ்வில் ஆவி, காற்று இவை மிக முக்கியம். மூச்சுவிட காற்று, ஆவி இன்றி மனிதனால் வாழ முடியாது. அதுபோன்றே மனிதவாழ்வுக்கு காற்று வடிவில் தேவ ஆவி காட்சி தருகிறார். தீ நாவாக மனித வாழ்வுக்குக் காட்சி தருகிறார்.

மனிதன் பேசவும், போதிக்கவும் நாவு தேவை. இதை ஆவியானவர் வடிவாக காட்சி தருகிறார். மூன்றாவது நெருப்பாகக் காட்சி தருகிறார். நெருப்பானது தண்ணீரைச் சூடாக்கி நீராவியாகி இயக்கும் சக்தி பெறுகிறது. உணவுக்கு சுவை உண்டாக்குகிறது. இதேபோல்தான் மனிதரைச் சுவையுள்ள மனிதராக மாற்றுகிறது.

நான்காவதாகப் புறா வடிவில் காட்சி தருகிறது. இதனால் தூய்மை உண்டாக்கி, இருளைப் போக்கும் ஆவியாகக் காட்சி தருகிறார். ஐந்தாவதாக ஆவியானவர் தண்ணீராக அழைக்கப்படுகிறார். யாரேனும் தாகமாக இருந்தால் ஆன்ம தாகத்தைத் தீர்க்க அருளாளராகவும் நம்மைத் தூய்மை ஆக்குபவராகவும் அவர் உள்ளார்.

ஒரு கொல்லன் பட்டறை தொழிலாளி ஒரு இரும்புக் கம்பியைத் தீச்சூளையில் வைத்துச் சூடேற்றுகிறார். சூடேற்ற, சூடேற்ற அது நெருப்பாக, சிவப்பாக மாறுகிறது. அதனால் கொல்லன் விரும்பும் சாயலை இந்த இரும்பால் உருவாக்கி விடுகிறார்.





இதேபோல்தான் நகைகளை உருவாக்கும் தங்கம் செய்யும் பணியாளரும். ஆனால் சூடேற்றிய இரும்பானது சூடு குறைந்தால் கருப்பாகி, வளைக்க முடியாத நிலைக்கு ஆகிவிடும். இதுபோலத்தான் ஆவியானவரின் செயல்.

நாம் ஆவிக்கு நம்மை அர்ப்பணம் ஆக்கிடும்போது நாம் செயல் வீரர்கள் ஆவோம். உறுதியூட்டும் இறைவனால் எதையும் செய்யும் ஆற்றல் உண்டு (பிலி. 4:18) என்பது என் விருதுவாக்கு. ஆம் ஆவியானவரின் துணை கொண்டு செயலாக்கம் பெற முடியும்.

நாம் நம் பாவத்திற்காக மகதலா மரியாளைப்போல் மனம் வருந்தி பாவி என்ற உணர்வோடு நம்மைத் தாழ்த்தி இறைவனிடம் வரவேண்டும் (லூக் 7 : 38, 50).

கொர்னேலியுவைப்போல் புனித பவுலைப்போல் செபத்திலும், தபத்திலும் ஈடுபட்டு இடைவிடாது செபிக்க வேண்டும் (தி. ப. 10:4446).

நமது மனதை கழுகுக் குஞ்சைப் போல் மேல்நோக்கி உயர்த்த வேண்டும். உலகம் அதன் இன்பம், பொருள் இவைகளுக்கு அடிமையாகி இருந்தால் ஆவியானவர் நம்மில் செயலாற்ற முடியாது. நாம் தாகத்தோடு இருக்க வேண்டும். தாகம் இருந்தால்தான் தண்ணீர் குடிக்க ஆசை வரும். அதேபோல் பாவமின்றி ஆன்ம தாகம் இருந்தால்தான் ஆவியானவரைப் பெற முடியும் (யோவா 7 : 37).

தேவ வார்த்தையை, விவிலியத்தை எடுத்து வாசிக்க வேண்டும். தேவ வார்த்தையைக் கவனமுடன் கேட்க வேண்டும். மூப்பர்கள் குருக்கள் கை வைக்க நாம் ஆவியைப் பெற்றுக்கொள்ள முடியும்.

(தி.ப. 8:1 19:0)

**எல். லெஸ்லி ஜொனதன்**

## மடுத்திருப்பதிக்கு மடுமாதா மீண்டும் திரும்பிய நிகழ்வு



மருதமடு திருப்பதியிலிருந்து மடு அன்னையின் திருச்சொரூபம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி உட்பட வடக்கிலுள்ள ஏனைய பங்குகளின் ஆலயங்களுக்கு திருப்பவனியாக சென்று மீண்டும் மடுத்திருத்தலத்திற்கு கொண்டுவரப்பட்டு மன்னார் ஆயர் பேரருட்திரு. இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையின் தலைமையில் மீண்டும் மடு திருப்பதியில் வரவேற்கப்பட்டபோது... கூட்டுத்திருப்பலியுடன் வெகு விமரிசையாக அதற்கான நிகழ்வுகள் இடம் பெற்றன.

(படங்கள்: எஸ். றொசேரியன் லெம்பேட் மன்னார் குறூப் நிருபர்)



# "நம்பிக்கை கொண்டோர் மீட்புப் பெறுவர்"

## விண்ணேற்புப் பெருவிழா தரும் சிந்தனை

இயேசுவின் விண்ணேற்புப் பெருவிழாவை கத்தோலிக்கத் திருச்சபை நேற்று கொண்டாடியது.

இப்பெருவிழாவானது நாமும் இவ்வுலக வாழ்வின் முடிவில் இயேசுவைப் போல் விண்ணகம் செல்வோம் என எமக்கு எடுத்துரைக்கும் ஒரு முன்னடையாளமாகும்.

நாமும் விண்ணேற்படைய கிறிஸ்து விட்டுச்சென்ற அன்புப் பணியை அவரது நற்செய்தியின் வழியில் வாழ்ந்து, பிறரையும் ஊக்கப்படுத்திட திருச்சபை எம்மையழைக்கின்றது.

இயேசு விண்ணேற்படைந்ததையும் தூய ஆவியின் வருகை தொடர்பான இயேசுவின் முன்னறிவிப்பையும், ஆண்டவர் இயேசுவின் இரண்டாம் வருகை சம்பந்தமான வானதூதரின் அறிவிப்பையும் திருத்தூதர் பணி நூலில் புனித லூக்கா விளக்குகின்றார்.

பெருவிழா தின இரண்டாம் இறை வாசகத்தில் எமக்கு கடவுளிடமிருந்து அருளப்பட்டுள்ள வெளிப்பாடு, அதன் அழைப்பு, கிறிஸ்தவ வாழ்வின் எதிர்நோக்கு பற்றி தூய பவுல் எபேசியருக்கு எழுதும் கடிதம் காணப்படுகிறது.

"நம்பிக்கை கொண்டோர் மீட்புபெறுவர், நம்பிக்கையற்றோர் தண்டனை தீர்ப்பு பெறுவர்" என்று மாற்கு நற்செய்தியில் கூறும் இயேசு நாம் அனைவரும் கடவுளின் மீட்புத்திட்டத்தை அறிந்தவர்களாக எதிர்நோக்குடன் வாழ எம்மையும் அழைக்கின்றார்.

திருத்தூதர் பவுல் எபேசியருக்கு எழுதிய திருமுகம் 4ஆம் அதிகாரம் 1-13 வசனங்கள் இவ்வாறு தெரிவிக்கின்றன.

"சகோதரர் சகோதரிகளே,ஆண்டவர் பொருட்டுக் கைதியாக இருக்கும் நான் உங்களைக் கெஞ்சிக் கேட்கிறேன்; நீங்கள் பெற்றுக்கொண்ட அழைப்புக்கு ஏற்ப வாழுங்கள். முழு மனத்தாழ்மையோடும் கனிவோடும் பொறுமையோடும் ஒருவரையொருவர் அன்புடன் தாங்கி, அமைதியுடன் இணைந்து வாழ்ந்து, தூய ஆவி அருளும் ஒருமைப்பாட்டைக் காத்துக் கொள்ள முழு முயற்சி செய்யுங்கள்.

நீங்கள் ஒரே எதிர்நோக்குக் கொண்டு வாழ அழைக்கப்பட்டிருக்கிறீர்கள். ஒரே எதிர்நோக்கு இருப்பதுபோல, உடலும் ஒன்றே; தூய ஆவியும் ஒன்றே. அவ்வாறே ஆண்டவர் ஒருவரே; திருமுழுக்கு ஒன்றே. எல்லாருக்கும் கடவுளும் தந்தையுமானவர் ஒருவரே;

அவர் எல்லாருக்கும் மேலானவர்; எல்லார் மூலமாகவும் செயலாற்றுபவர்; எல்லாருக்குள்ளும் இருப்பவர். கிறிஸ்து கொடுக்க விரும்பும் அளவுக்கேற்ப நம் ஒவ்வொருவருக்கும் அருள் அளிக்கப்பட்டுள்ளது. ஆகையால்தான், 'அவர் உயரே ஏறிச் சென்றார்; அப்போது, சிறைப்பட்ட கைதிகளை இழுத்துச் சென்றார்; மனிதருக்குப் பரிசுகளை வழங்கினார்' என்று மறைநூல் கூறுகிறது. 'ஏறிச் சென்றார்' என்பதனால் அதன் முன்பு மண்ணுலகின் கீழான பகுதிகளுக்கு அவர் இறங்கினார் என்று விளங்குகிறது அல்லவா?

கீழே இறங்கியவர்தான் எங்கும் நிறைந்திருக்கும்படி எல்லா வானுலகங்களுக்கும் மேலாக ஏறிச் சென்றவர்.

அவரே சிலரைத் திருத்தூதராகவும், சிலரை இறைவாக்கினராகவும், வேறு சிலரை நற்செய்தியாளர்களாகவும், ஆயர்களாகவும், போதகர்களாகவும் ஏற்படுத்தினார். திருத்தொண்டாற்ற இறைமக்களை ஆயத்தப்படுத்தவும், கிறிஸ்துவின் உடலைக் கட்டியெழுப்பவும் இவர்களை அவர் ஏற்படுத்தினார்.

அதனால் நாம் எல்லாரும் இறைமகனைப் பற்றிய அறிவிலும் நம்பிக்கையிலும் ஒருமைப்பாட்டை அடைவோம். கிறிஸ்துவிடம் காணப்பட்ட நிறைவைப் பெறும் அளவுக்கு நாம் முதிர்ச்சியடைவோம் என அந்த வாசகம் நமக்குத் தெரிவிக்கின்றது.

மாற்கு நற்செய்தியின் 15 ஆம் அதிகாரம் 15.20 வசனங்கள் இவ்வாறு கூறுகின்றது.

இயேசு பதினொருவருக்குத் தோன்றி, அவர்களை நோக்கி, "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள். நம்பிக்கை கொண்டு திருமுழுக்குப் பெறுவோர் மீட்புப் பெறுவர்; நம்பிக்கையற்றவரோ தண்டனைத் தீர்ப்புப் பெறுவர். நம்பிக்கை கொண்டோர் பின்வரும் அரும் அடையாளங்களைச் செய்வர்: அவர்கள் என் பெயரால் பேய்களை ஓட்டுவர்; புதிய மொழிகளைப் பேசுவர்; பாம்புகளைத் தம் கையால் பிடிப்பர். கொல்லும் நஞ்சைக் குடித்தாலும் அது அவர்களுக்குத் தீங்கு இழைக்காது. அவர்கள் உடல் நலமற்றோர்மீது கைகளை வைக்க, அவர்கள் குணமடைவர்" என்று கூறினார்.

இவ்வாறு அவர்களோடு பேசியபின்பு ஆண்டவர் இயேசு விண்ணேற்றமடைந்து கடவுளின் வலப்புறம் அமர்ந்தார். அவர்கள் புறப்பட்டுச் சென்று எங்கும் நற்செய்தியைப் பறைசாற்றினர். ஆண்டவரும் உடனிருந்து செயல்பட்டு, நிகழ்ந்த அரும் அடையாளங்களால் அவர்களுடைய வார்த்தையை உறுதிப்படுத்தினார்.

இயேசுவின் விண்ணேற்பு பெருவிழாவைக் கொண்டாடும் நாம் அனைவரும் இன்றைய நாளில் எம் வாழ்வில் நாம் செய்த தவறுகளுக்காக மனம் வருந்தி மன்னிப்புக்கேட்டு நாமும் ஒரு நாள் உயிர்ப்போம் என்ற உன்னத விசுவாசத்தை நிலைநிறுத்திக் கொள்வது அவசியம்.

**எல்.எஸ்.**

## தோட்ட நிர்வாகங்கள்...

தெரிவித்தார். கூட்டு ஒப்பந்தம் இருந்த காலத்தில் 02 வருடங்களுக்கு ஒரு முறை சம்பளம் அதிகரிப்பு செய்யப்பட்ட நிலையில் கடந்த நான்கு வருடங்களாக தொழிலாளர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்கப்படவில்லை எனத் தெரிவித்த அமைச்சர் ஜீவன் தொண்டமான், டொலரின் பெறுமதி வீழ்ச்சியை சாதகமாக கொண்டு பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரிக்க கம்பனிகள் முன்வர வேண்டுமெனவும் வலியுறுத்தினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (13) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர் ஜீவன் தொண்டமான் மேலும் குறிப்பிட்டதாவது:

"தற்பொழுது நடைமுறைப்படுத்தப்படும் நாள் சம்பள முறைமை பொருத்தமற்றதாகும். அந்த முறைமையில் இருந்து மாற வேண்டியது அவசியம். அதற்காக நான்கைந்து வருடங்கள் அவசியப்படும். அதற்காக தோட்ட தொழிலாளர்களை 1,000 ரூபா சம்பளத்துடன் காத்திருக்கச் வைப்பதை ஏற்றுகொள்ள முடியாது.

தேர்தல் காலத்தில் ஒவ்வொரு கட்சியும் ஒவ்வொரு தொகையை பெற்றுத்தருவதாக கூறும். எதிர்கட்சிகள் தோட்ட மக்களை சிறுதோட்ட உரிமையாளர்களாக மாற்றுவதாக கூறினாலும் அதற்காக பொறிமுறை என்னவென்பது கேள்விக்குரியாகும்.

ஆரம்பத்தில் பெருந்தோட்ட தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பளத்தில் ஒரு ரூபா கூட அதிகரிக்க முடியாதென கூறிய கம்பனிகள், அரசாங்கம் 1,700 சம்பள அதிகரிப்புக்கான வர்த்தமானி அறிவித்தலை விடுத்த பின்பு அடிப்படைச் சம்பளத்தில் 200 ரூபாவை அதிகரிக்க முன்வந்துள்ளனர். அதனால் சம்பள அதிகரிப்பை செய்ய முடியும் என்று கம்பெனிகள் காண்பித்துள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, கொட்டகலை மே தினக் கூட்டத்தில் பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு குறித்து அறிவித்தார். ஏப்ரல் 30 ஆம் திகதி பெருந்தோட்ட மக்களுக்கு 1,700 ரூபா சம்பள அதிகரிப்பை வழங்குவது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு தொழில் அமைச்சர் மனுஷ நாணாயக்காரவினால் வெளியிடப்பட்டது. இது குறித்து சிலர் மக்கள் மத்தியில் சர்ச்சைகளை ஏற்படுத்தி வதந்திகள் பரப்பினர். ஜனாதிபதி இந்த அறிவிப்பை விடுத்த மறு தினமே அது நடக்காது என்றும் கூறினார்கள்.

இதே பெருந்தோட்ட நிறுவனங்கள் 1,000 சம்பள அதிகரிப்பை வழங்க முடியாதென கூறினார்கள். அதற்கு எதிராக தொடரப்பட்ட வழக்கிலும் இரண்டு தடவைகள் வெற்றி பெற்றிருக்கிறோம். தற்போது மேல்முறையீடு செய்துள்ளனர். குறித்த வழக்கு ஏற்கனவே உள்ள சம்பள நிர்ணய சபை மீதே தொடரப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் மேற்கொள்ளப்போகும் சம்பள விடயத்தில் நிர்ணயச் சபைக்கு தொடர்பில்லை. 1,000 ரூபாவுக்கு மேலதிகமாக ஒரு ரூபாவும் கொடுக்க முடியாது என்று கூறிய பெருந்தோட்ட நிறுவனங்கள் 1,700 சம்பள அதிகரிப்புக்கான வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்ட பின்பு 1,200 ரூபாவாக அடிப்படை சம்பளத்தை உயர்த்த முன்வந்துள்ளனர்.

ஒரு ரூபா கூட அதிகரிக்க முடியாது என்று கூறியவர்கள் அடிப்படைச் சம்பளத்தில் 200 ரூபாவை அதிகரிக்க விருப்பம் தெரிவித்துள்ளனர். வழங்கு இடம்பெறுவதால் சம்பள உயர்வு வழங்க முடியாது என்று சட்டம் இல்லை. அது குறித்த எழுத்துமூல அறிவிப்பு சட்டமா அதிபரினால் தொழில் அமைச்சுக்கு அனுப்பட்டிருக்கிறது. பெருந்தோட்ட நிறுவனங்கள் இந்த விடயத்தை இழுபரியாக்கவே பார்க்கின்றார்கள். இது குறித்து ஜனாதிபதியிடமும் பேசியிருக்கின்றோம்.

அதன்படி ஜனாதிபதியின் வழிகாட்டலின் கீழ் தொழில் அமைச்சரால் இது குறித் ஆவணமொன்று தயாரிக்கப்படுகிறது. பெருந்தோட்ட நிறுவனங்கள் எந்தெந்த இடத்தில் எல்லாம் சட்டத்தை மீறியிருக்கின்றது? எந்தெந்த இடத்தில் எல்லாம் அவர்கள் இலக்கு இல்லாமல் வேலை செய்திருக்கின்றார்கள்? மீள் நடுகை செய்யாமலிருப்பதற்கான காரணம் என்ன உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இதன்போது ஆராயப்படும்.

இவ்வாறிருக்க பெருந்தோட்ட கம்பனிகள் குத்தகை காலத்தை நீடித்து தாருமாறு கேட்கிறார்கள். மீள் நடுகைச் செய்தால் இலாபமீட்ட 60 வருடங்கள் ஆகும் என்று கூறுகிறார்கள். 53 வருடங்கள் குத்தகைக்கு காணிகளை பெற்றுக்கொண்டபோது அவர்களுக்கு அது விளங்கவில்லையா என்பது கேள்விக்குரியாகும். அதனால், தற்போது சம்பளத்தை அதிகரிக்க முடியாது என்று கூறுவது நியாயமற்றது. பராமரிப்பு இன்மையினாலேயே தோட்டங்கள் காடாக மாறியுள்ளன.

தோட்டத் தொழிலாளர்கள் தொழில் செய்யும் இடத்தில் கௌரவமாக நடத்தப்படுத்துவதில்லை. அதுவே தொழிலாளர்கள் எண்ணிக்கை குறையக் காரணமாகும். அவர்களுக்கு உரிய அங்கீகாரம் கிடைப்பதில்லை. தேயிலைத் தோட்டத்தில் தேயிலை மாத்திரம் தான் இருக்கும் என்ற நிலை இன்று மாறிவிட்டது. பங்களாக்கள் சுற்றுலா இடங்களாக மாற்றப்பட்டுள்ளன. அதிலும் நாளாந்தம் 1,000 – 2,000 டொலர் ஈட்டுகின்றனர். அங்கு தேநீர் நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு இரு முனைகளில் வருமானம் ஈட்டினாலும் கம்பனிகள் அரசாங்கத்திற்கு வெறும் 500 ரூபாவை மாத்திரமே வழங்குகின்றனர். தங்களாலேயே சுற்றுலாத்துறை ஊக்குவிக்கப்படுவதாக கூறிக் கொள்கிறார்கள். இது பெருந்தோட்ட நிறுவனங்களின் சூழ்ச்சியாகும். அதனாலேயே ஜனாதிபதியும் தொழில் அமைச்சரும் எமது கோரிக்கையை ஏற்றுக்கொண்டுள்ளனர். கடந்த 4 வருடங்களாக பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு கிடைக்கிவில்லை.

கூட்டு ஒப்பந்தம் இருக்கும்போது இரண்டு வருடத்திற்கு ஒரு முறை சம்பள உயர்வு கிடைத்தது. டொலரின் பெறுமதி வீழ்ச்சி கண்டதன் மூலம் பெருந்தோட்ட கம்பனிகள் அதிக இலாபம் ஈட்டியுள்ளன. அதனால் நிச்சயமாக தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்க முடியுமென்றும் அவர் தெரிவித்தார்.

## வரலாறாகும் வேதாந்தி;...

உறுப்பினருமான எம்.ரி. ஹஸனலி ஆகியோர் இணைந்து முத்திரையை வேதாந்தியிடம் கையளித்தனர்.

அகவை எண்பதில் கால்பதிக்கும் அவரின் வாழ்நாள் சாதனைகளை பாராட்டும் வகையில், வேதாந்தியின் அபிமானிகளான விடுதலைபாடிகள் ஏற்பாடு செய்த இந்நிகழ்வு (12) ஞாயிற்றுக்கிழமை அக்கரைப்பற்று 'கொக்கோ கார்டனில்' நடைபெற்றது. பிரதேசத்தின் முக்கியஸ்தர்கள்,விளையாட்டு கழகங்கள் மற்றும் சமூக முன்னோடி அமைப்பினர் ஷேகு இஸ்ஸடீனைப் பாராட்டி பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர்.

முஸ்லிம்களின் அரசியல் முகவரியாக ஆரம்பிக்கப்பட்ட ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை சமூகமயப்படுத்துவதில் ஷேகு இஸ்ஸடீன் எடுத்துக்கொண்ட வகி பாகங்கள் பற்றி, பலரும் இக்கூட்டத்தில் உரையாற்றினர்.

## ஜனாதிபதி தேர்தலை நடத்த...

மற்றும் சீருடைகளை சரியான நேரத்திற்கு வழங்கவும், பாடசாலைகள் மூடப்பட்டதன் காரணமாக தவறவிட்ட கல்வி நடவடிக்கைகளை பூர்த்தி செய்ததன் மூலம் பரீட்சை கால அட்டவணையை படிப்படியாக வழமைக்கு கொண்டுவர அர்ப்பணிப்புடன் செயற்பட்டதாக அமைச்சர் மேலும் கூறினார். அத்துடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கல்வி அமைச்சர் என்ற பொறுப்பையும் தமக்கு முழு சுதந்திரத்தையும் ஒத்துழைப்பையும் வழங்கியதை சுசில் பிரேமஜயந்த இங்கு நினைவு கூர்ந்தார். அதற்கேற்றவாறு தயாரிக்கப்பட்ட எதிர்காலத் திட்டங்களை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்றும் அவர் கூறினார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர், எதிர்காலத்தில் சவால்களை ஏற்றுக்கொள்ள முடியாத நபர்களிடம் நாட்டை ஒப்படைக்கக் கூடாது எனவும் தெரிவித்தார்.

## மாணவர்களுக்கு அநீதி...

வினாத்தாள் வழங்கும் இறுதி சந்தர்ப்பத்தில் மாதிரி மார்க்கிங் இடம் பெறுவதன்படி சிறு சிறு மாற்றங்கள் ஏற்படும்.

கல்வி பொதுத் தராதர சாதாரண தர ஆங்கில மொழி வினாத்தாளின் தரத்தை உறுதி செய்வது அவசியமென்றும் அதன்படி வினாத்தாள் தயாரிக்கப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

ரோஹிணி கவிரத்ன எம்பி தமது கேள்வியின் போது;

பாடத்திட்டத்திலிருந்து நீக்கப்பட்ட பிரிவுகளில் இருந்து விஞ்ஞான பாடத்துக்கு 12 புள்ளிகளைக் கொண்ட வினாக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. கற்பிக்காத பாடத்திலிருந்து கேள்வி கேட்கும் போது பரீட்சார்த்திகள் எவ்வாறு பதிலளிப்பார்கள்? இவ்விடயம் தொடர்பில் கல்வி அமைச்சு உரிய கவனம் செலுத்த வேண்டுமென வலியுறுத்தினார்.

2023 ஆம் ஆண்டுக்கான கல்வி பொதுத் தராதர சாதாரன தரப் பரீட்சை தற்போது நடைபெறுகிறது. கொவிட்19 பெருந்தொற்று காரணமாக பாடசாலை கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன. பாடத்திட்டங்களை உரிய காலத்தில் நிறைவு செய்யாத காரணத்தால் ஒருசில பாடப் பிரிவுகள் பாடத்திட்டத்திலிருந்து நீக்கப்பட்டிருந்தன.

அவ்வாறு நீக்கப்பட்ட சில பிரிவுகளிலிருந்து இம்முறை விஞ்ஞான பாடத்துக்கான கேள்விகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

ஒருசில கேள்விகளுக்கு விடை இல்லை. இன்னும் சில கேள்விகள் மிகுந்த முரண்பாட்டுடன் காணப்பட்டுள்ளன. அதனால் பரீட்சார்த்திகள் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாகியுள்ளனர் என்றும் தெரிவித்தார். அதற்குப் பதில் அளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

## மஹிந்தவின் அறிக்கையில்...

கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். லக்ஷ்மன் கிரியெல்ல எம்பி தமது கேள்வியின் போது;

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச வெளியிட்டுள்ள அறிக்கையில், அரச வளங்களை தனியாருக்கு விற்பதை நிறுத்துமாறும் அதற்கான நடவடிக்கைகள் புதிதாக அமைக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார். அந்த வகையில் மஹிந்த ராஜபக்ச கூறுவது போல் அரசாங்கம் செயற்படப் போகின்றதா? அல்லது மின்சார சபையயை தனியார் மயப்படுத்த போகின்றதா ? என கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர;

மஹிந்த ராஜபக்ஷவின் அறிக்கையில் எந்த இடத்திலும் நிறுவனங்களின் மறுசீரமைப்பு தொடர்பில் குறிப்பிடப் படவில்லை.

மின்சார சபையை தனியாருக்கு விற்பனை செய்வது அரசாங்கத்தின் நோக்கமல்ல.

எதிர்க்கட்சிக்கு அவ்வாறான தேவை உள்ளதா? என்பது எமக்குத் தெரியாது. அரசாங்கம் மறுசீரமைப்பு வேலைத் திட்டங்களை முன் வைத்துள்ளது.

அதனை எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கர்ப்பிணிகள், குழந்தைகளுக்கு...

1971 ஆம் ஆண்டில், பேராசிரியர் சேனக பிபிலே இலங்கையில் அரச மருந்துக் கூட்டுத்தாபனத்தை நிறுவினார். கடந்த 53 ஆண்டுகளில், அரச மருந்துக் கூட்டுத்தாபனம் நாடளாவிய ரீதியில் மருந்தகங்களின் வலைப்பின்னலை நிறுவியுள்ளது.

இலங்கையில் இலவச சுகாதார சேவை குறித்து குறிப்பிடும் போது பேராசிரியர் சேனக பிபிலேவின் பெயர் மிகவும் அதிகமாகவே குறிப்பிடப்படுகிறது.

அரச மருந்துக் கூட்டுத்தாபனம் மக்களுக்காக பெரும் பணியை செய்து வருவகிறது, இந்த மருந்தகம் மூலம் உயர்தர மருந்துகளை நியாயமான விலையில் பொது மக்களால் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் கூறினார்.

இப்பணியை ஆரம்பித்து வைத்த பேராசிரியர் சேனக பிபிலேவின் எணக்கருவுக்கு அமைவாக, கிராமங்ளில் இன்றும் அரச மருந்தகம் இல்லாமை ஒரு குறைவாகும். இந்த குறைபாட்டை விரைவில் தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அரச மருந்த அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

இந்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் சுகாதாரத்திற்காக அரசாங்கம் வரலாற்றில் அதிகூடிய தொகையான 407 பில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது. மருந்துகளுக்காக 180 பில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. சுதந்திரத்திற்குப் பின்னர் நாட்டில் எந்த அரசும் வரவு செலவுத் திட்டத்தை நிர்வகித்து நிதி ஒதுக்கீட்டை அதிகரித்ததே தவிர குறைக்கவில்லை.

சுதந்திரம் அடைந்து 77 வருடங்களில் மிகப்பெரிய சமூக மாற்றம் ஏற்பட்டுள்ளது. சுகாதார சேவையின் முக்கிய பணியை எடுத்துரைப்பது ஊடகங்களின் பொறுப்பாகும் என்றும் சுகாதார மற்றும் கைத்தொழில் அமைச்சர் டொக்டர் ரமேஷ் பத்திரன மேலும் தெரிவித்தார்.

## தமிழர் தரப்பு...

தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் செப்டெம்பர் 17 ஒக்டோபர் 16 ஆம் திகதிக்குமிடையில் நடைபெறவுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. நாட்டின் நீண்ட வரலாற்றை பார்க்கின்றபோது பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவரே ஜனாதிபதியாக வரமுடிகிறது.

தென்னிலங்கையின் தேசியக் கட்சிகள் தற்போது வரையில் உத்தியோகபூர்வமாக ஜனாதிபதி வேட்பாளர் பற்றி அறிவிக்கவில்லை. இதற்கு முன்னர், எமது நிலைப்பாட்டை முன்வைத்து வீணான குழப்பங்களை ஏற்படுத்த வேண்டிய அவசியமில்லை.

தென்னிலங்கைத் தலைவர்களில் யார்? வேட்பாளர் அவர்களின் தமிழ் மக்கள் தொடர்பான நிலைப்பாடு என்ன? அவர்களுடைய தேர்தல் விஞ்ஞாபனம் என்ன? இவ்விடயங்களில் ஆழமான கவனத்தைச் செலுத்த வேண்டியுள்ளது.

வடக்கு, கிழக்கில் வரலாற்று ரீதியாக வாழும் மக்கள், சமஷ்டி அடிப்படையில் அதியுச்ச அதிகாரப்பகிர்வைக் கோருவதை தென்னிலங்கை தலைவர்கள் நன்கு அறிவர். ஆகவே அவர்கள் நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்பதாக இருந்தால், நிச்சயமாக தமிழ் மக்களின் கோரிக்கைகள் தொடர்பில் தங்களது நிலைப்பாடுகளை வெளிப்படுத்த வேண்டியது அவசியமாகும்.

தென்னிலங்கை தலைவர்கள் தமிழர்களின் உள்ளக சுயநிர்ணய உரித்தினை ஏற்றுக்கொள்ளாவிடின் சர்வதேசச் சட்டங்களுக்கு அமைவாக வெளியக சுயநிர்ணயத்தைக் கோருவதற்கு இயலுமானவர்களாக உள்ளோம். இச் சந்தர்ப்பத்தில் இதை, நினைவுபடுத்துகிறேன்.

## குறைந்த வருமானம்...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், "முதற்கட்டமாக இலவச அரிசி வழங்கும் திட்டம் கடந்த மாதம் நடைமுறைப்படுத்தப்பட்டது. நாடளாவிய ரீதியில் 34 இலட்சம் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அரிசி வழங்கும் திட்டத்தின் இரண்டாம் கட்ட நடவடிக்கைகள் இம்மாத இறுதியில் ஆரம்பிக்கப்படும்.

இதன்படி மாவட்ட செயலகங்கள் ஊடாக தலா 10 கிலோ இலவச அரிசி வழங்கப்பட உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

## பொலிஸ் தடை உத்தரவை...

முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறும் நிகழ்வு பொதுமக்களினால் முன்னெடுக்கப்பட்டிருந்தது. நீதிமன்ற தடை உத்தரவை காண்பித்து இந்நடவடிக்கையை நிறுத்துமாறு சம்பூர் பொலிஸார் கூறினர். எனினும்,இவர்கள் முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறும் நிகழ்வை முன்னெடுத்தனர். இதன்போதே இவர்கள் கைதாகினர்.

## அறிக்கை சமர்ப்பிக்குமாறு...

கீழ் கைது செய்து வழக்குத் தொடர உத்தரவிடுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனு, நேற்று (13) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போதே பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

## PHI அதிகாரிகள்...

சென்று (09) நகை மற்றும் பணத்தை இவர்கள் கொள்ளையிட்டுள்ளனர். இதுகுறித்து கட்டுநாயக்க பொலிஸ் நிலையத்துக்குக் கிடைத்த முறைப்பாட்டின்படி மேற்கொள்ளப்பட்ட விசாரணையிலே இச்சந்தேக நபர்கள் கைதாகினர்.

மருதானை, தெமட்டகொடை மற்றும் பொரளை பகுதிகளைச் சேர்ந்த 38, 47 மற்றும் 70 வயதுடைய மூன்று நபர்களே, இவ்வாறு கைதாகினர். இவர்கள் மூவரும் பொதுச் சுகாதார பரிசோதகர்களெனக் கூறி, பல்வேறு நபர்களை ஏமாற்றி நகை மற்றும் பணம் உள்ளிட்ட பொருட்களை கொள்ளையிட்டுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. சந்தேக நபர்களிடமிருந்து 03 காதணிகள், 01 மோதிரம் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கட்டுநாயக்க பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## 10 கோடி ரூபா பெறுமதியான...

குற்றப் புலனாய்வு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பிலே சந்தேக நபர்கள் கைதாகினர்.கடலில் மிதந்து கொண்டிருந்த திமிங்கல வாந்தி எனக் கூறப்படும் இந்த அம்பர், ண்டக்குளி மீனவர்களால் கண்டெடுக்கப்பட்டது.

இதை, இரகசியமாக விற்பனை செய்வதற்காக பாதுகாப்பாக புதைத்து வைக்கப்பட்டிருந்ததாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

35 கிலோ எடைகொண்ட அம்பர், சுமார் 10 கோடி ரூபா பெறுமதியானது எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## இன்றைய பலன்கள்

**(14.05.2024)**

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம்** :
உத்தியோகஸ்தர்கள் காரியங்களை முயற்சியுடன் செய்து முடிப்பீர்கள். புதிய நண்பர்களை சந்தித்து அவர்களின் மூலம் வளர்ச்சிக்கு அடித்தளம் இடுவீர்கள்.

**ரிஷபம்** :
முயற்சியோடு செய்யும் காரியங்களில் நல்ல திருப்பங்களை எதிர்பார்க்கலாம். நண்பர்களின் ஒத்துழைப்பு தகுந்த சமயத்தில் கிடைக்கும்.

**மிதுனம்** :
நெருங்கிய நண்பர்கள் உதவியுடன் முக்கியமான சில காரியங்களை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். வீடு அல்லது மனை வாங்கும் திட்டத்தை நல்ல முறையில் செயல்படுத்த முடியும்.

**கடகம்** :
எண்ணங்களை செயல் வடிவமாக்கும் முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். தள்ளி வைத்த காரியம் ஒன்றை தானாகவே முடிக்கக்கூடிய நிலை ஏற்படும்.

**சிம்மம்** :
உங்கள் பெரும்பாலான செயல்களில் வெற்றியும் அதனால் பொருளாதார மேன்மையும் பெறுவீர்கள். நவீன சாதனங்களை வாங்கக்கூடிய வாய்ப்பு உண்டாகும்.

**கன்னி** :
சிறு சிறு தாமதங்கள் ஏற்படும். என்றாலும் உங்கள் செயல்களில் எதிர்பார்க்கும் வெற்றிக்கு குறைவிருக்காது. முக்கியமான பணிகளை நிறைவேற்ற புகழ் பெற்ற மனிதர்களை சந்திப்பீர்கள்.

**துலாம்** :
பயணங்களை தவிர்க்கவும். நீங்கள் உற்சாகத்தோடு ஆரம்பிக்கும் செயல்கள் ஒன்று இரண்டில் தாமதம் ஏற்படும்.

**விருச்சிகம்** :
முயற்சிகளில் தாமதம் ஏற்படும். பண பரிவர்த்தனையில் திட்டமிடுதல் அவசியம். உத்தியோகத்தர்களில் சிலருக்கு அவசரமாக செய்த பணி ஒன்றில் ஏற்பட்ட தவறால் சிறு மனக்கலக்கம் ஏற்படும்.

**தனுசு** :
ஜாமீன் கையெழுத்து இடுவதை தவிர்க்கவும். நண்பர்கள் உங்கள் பணிகளில் உதவியாக இருப்பார்கள்.

**மகரம்** :
மறைமுக எதிரிகளால் தொல்லை உண்டாகும். இருப்பினும் எடுத்த காரியங்களை எளிதில் முடித்து எதிர்பார்க்கும் ஆதாயங்களை பெறுவீர்கள்.

**கும்பம்** :
நீங்கள் எடுத்துக் கொண்ட செயல்கள் சிலவற்றில் தடை தாமதம் இருந்தாலும் முடிவில் வெற்றி அடைவீர்கள். உத்தியோகத்தர்கள் பதவி உயர்வு, சம்பள உயர்வு பற்றி கோரிக்கை வைக்க இது சரியான தருணம் அல்ல.

**மீனம்** :
உங்களுக்கு பணிகளின் மூலம் வரவு இருந்தாலும் செலவுகளும் அதிகரிக்கும். நிலம் அல்லது வீடு விற்பனைகளில் எதிர்பார்த்த லாபம் கிடைக்காது.

## ஓமானிலிருந்து வந்த நபர்... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

இந்நபரிடம் இருந்து 10,000 தடை செய்யப்பட்ட சிகரெட்டுகள் இருப்பதை பொலிஸார் அவதானித்தனர்.

பிணையில் விடுதலையான இந்நபர், எதிர்வரும் (22) 10,000 சிகரட்டுகளுடன் நீர்கொழும்பு மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மஞ்சஸ்டர் ரக 10,000 சிகரட்டுகளும் 50 கார்டூன்களாக பொதி செய்யப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். இந்த நபர் ஹொரனை பிரதேசத்தை சேர்ந்தவரென்றும் ஓமானில் கோப்பி ஷொப் ஒன்றை நடத்திவருபவரென்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவின் அதிகாரிகள் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சமூக ஊடகங்களில் ஆபாச... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

ஒழுங்குறுத்தல் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பாடல்களை மாற்றி, திரிபுபடுத்தி பாடுவது வழமையானது என சட்டத்தரணி திஷ்ய வேரகொட தெரிவித்துள்ளார். சூர்ய மாங்கல்யப் பாடலில் குளறுபடி செய்தவர்களைக் கைது செய்யும் நடவடிக்கையை பொலிஸார் மேற்கொண்டமை தொடர்பாகவே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

## சமூக ஆலோசனைக்... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

குறிப்பிட்டார். நாடளாவிய ரீதியில் ஆயிரக்கணக்கான முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள் காணப்படுவதாக தெரிவித்த பிரதமர், அவர்களிடமிருந்து பிரயோசனத்தை பெற்றுக் கொள்வதிலுள்ள தடைகள் என்ன? என்றும் எதிர்க்கட்சியிடம் கேள்வி எழுப்பினார்.

## கத்தியின் கூர் விளிம்பில்... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

வாக்குறுதியில் கையொப்பமிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நிதி கட்டளைச் சட்டம் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பாலங்கள் உடைகின்றன, மண்சரிவு ஏற்படுகின்றன, அபிவிருத்திகள் நிறுத்தப்பட்டுள்ளன இவைகள் இதுவரை அரசாங்கத்துக்கு தெரியவில்லையா? என அரசாங்கத்தை தூற்றுகின்றனர்.

கடந்த அரசாங்கங்கள் பணத்தை அச்சிட்டு அவ்வாறான திட்டங்களை முன்னெடுத்தன. தற்போது அவ்வாறு செய்ய முடியாது. மத்திய வங்கி பணம் அச்சிடுவதை தடை செய்துள்ளது அதனால் நாட்டிலுள்ள அத்தனை பாலங்களும் உடைந்து விழுந்தாலும் பணம் அச்சிடப்பட மாட்டாது. மகாவலி கங்கையை வடக்குக்கு திருப்புவதும் கடன் மூலமே என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## பாவனைக்குதவாத...

சென்று, மீண்டும் பொதி செய்து கொண்டிக்கையில் இச்சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த 30 இல், காலாவதியாகியிருந்த காலாவதித் திகதி அடுத்த 30 நாட்களுக்கு செல்லுபடியாகும் வகையில் மாற்றியமைக்கப்பட்டது.கையகப்படுத்தப்பட்ட அரிசி சீல் வைக்கப்பட்டுள்ளதுடன், அரிசி ஆலையின் உரிமையாளரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

## தேசிய டெங்கு ஒழிப்பு...

வழங்கப்பட்டுள்ளன. தற்போது மேல் மாகாணத்தில் அதிக டெங்கு நோயாளர் பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. தொடர்ச்சியாக மழை பெய்து வருவதால், டெங்கு பாதிப்பு எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

### டயனாவின் கடவுச்சீட்டு விநியோகம்;

# ஜனாதிபதியோ குடிவரவு, குடியகல்வு ஆணையாளரோ தலையிடவில்லை

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயனா க மகேவுக்கு இராஜதந்திர கடவுச்சீட்டு வழங்கிய விடயத்தில் ஜனாதிபதியோ, குடிவரவு, குடியகல்வு திணைக்கள கட்டுப்பாட்டு ஆணையாளர் நாயகமோ தலையிட்டிருக்கவில்லையென நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார். அதேவேளை, 2018 ஆம் ஆண்டு உத்தியோகபூர்வ அலுவலக கடவுச்சீட்டு டயனாவுக்கு விநியோகிக்கப்பட்ட போது, அதற்கு எதிர்ப்பு தெரிவிக்காத எதிர்க்கட்சியினர் தற்போது அவருடனான பகையை வைத்து அவருக்கு எதிரான விமர்சனங்களை மேற்கொள்வது வேடிக்கையானது என்றும் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற நிதிக்கட்டளைகள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயனா கமகேவின் விவகாரம் தொடர்பில் மாறுபட்ட கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

டயனா கமகேவின் குடியுரிமை தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் விசாரணைகள் இடம்பெற்றிருந்தன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க டயனா கமகேவுக்கு வெளிநாட்டு கடவுச்சீட்டு விநியோகிக்க நடவடிக்கை எடுத்ததாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.



இவ்விடயம் தொடர்பில் அமைச்சு மட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் டயனா கமகேவுக்கு 2014 ஆம் ஆண்டு முதலாவதாக வெளிநாட்டுக் கடவுச்சீட்டு விநியோகிக்கப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டு உத்தியோகபூர்வ அலுவலக கடவுச்சீட்டு விநியோகிக்கப் பட்டுள்ளது. அத்துடன் 2022 ஆம் ஆண்டு அவருக்கு இராஜதந்திர கடவுச்சீட்டும் விநியோகிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் தற்போதைய எதிர்க்கட்சியினர் ஒருகாலத்தில் இணக்கமாக செயற்பட்டார்கள். தற்போது முரண்பாடு என்று குறிப்பிட்டு, இரகசியமான பேச்சுவார்த்தையில் ஈடுபடுகிறார்கள்.

2018 ஆம் ஆண்டு டயனா கமகேவுக்கு அலுவலக கடவுச்சீட்டு விநியோகிக்கப்பட்ட போது இவர்கள் அதனை எதிர்க்கவில்லை. தற்போது அவருடன் பகைமை என்பதால் விமர்சனங்களை முன்வைக்கிறார்கள்.

## சிறப்பு வர்த்தக பொருட்கள் மீதான வரி நீக்கம்: பரந்த பேச்சுக்கு அரசு தயார்



விசேட வர்த்தக பொருட்களுக்கான வரியை நீக்குவதற்கு அரசாங்கம் ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், இது தொடர்பில் எந்தவொரு தரப்பினருக்கும் பிரச்சினை ஏற்பட்டால் பரந்த அளவிலான பேச்சுவார்த்தைக்கு தயாரெனவும் நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்த பேசுகையில்

சீனி வரி மோசடி தொடர்பில் பலரும் பலவிதமான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். இருந்தபோதிலும் இதை, குற்றம் சுமத்தி விமர்சிக்கும் தரப்புகளினால் நடைமுறையான தீர்வுகள் முன்வைக்கப்படவில்லை. அவ்வாறு நடைமுறை தீர்வுகள் இருப்பின் முன்வைக்க வேண்டும்.

வரிக் குறைப்பு தொடர்பில் இறக்குமதியாளர் உரிய விலக்குகளைச் செய்யாவிட்டால், இறக்குமதியாளர் அதிலிருந்து விடுபடும்போது வரம்பற்ற தொகையை வசூலிக்க முடியுமென அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

வரியை உடனடியாக உயர்த்தினால், அது நாட்டிலுள்ள பங்குகளின் இயல்பான மதிப்பை அதிகரிக்குமென்றும், அதை அரசாங்கத்தால் கட்டுப்படுத்த முடியாவிட்டால், வர்த்தகர் இலாபத்தைப் பெறுவார் என்றும் அமைச்சர் கூறினார்

# ரஷ்ய வேலைவாய்ப்புக்களை நம்பி எவரும் ஏமாற வேண்டாம்

### மோசடிகளில் சிக்கிவிடக் கூடாது பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

ரஷ்யாவில் வேலைவாய்ப்புக்களை பெற்றுத் தருவதாக தெரிவித்து ஒரு தரப்பினரால் முன்னெடுக்கப்படும் மோசடிகளில், மக்கள் சிக்கிவிடக் கூடாதென பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அதேவேளை, ரஷ்ய யுத்த களத்தில் உயிரிழந்துள்ள இலங்கையரின் சடலங்கள், அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் எஞ்சியவர்களை நாட்டுக்கு அழைத்து வர இராஜதந்திர மட்டத்தில் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

முகநூல் பதிவுகளை நம்பி ஏமாறுவோர் இன்றும் நாட்டில் உள்ளனரென்பதை சபையில் சுட்டிக்காட்டிய இராஜாங்க அமைச்சர், ரஷ்யாவில் தொழில் வாய்ப்புக்களை பெற்றுத் தருவதாக தெரிவித்து ஒரு தரப்பினரால் முன்னெடுக்கப்படும் மோசடிகளுக்கு அகப்பட வேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டார். ரஷ்யாவுக்கு இலங்கையர்களை அனுப்பும் ஆட்கடத்தல் மோசடியில் ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகள் ஈடுபட்டுள்ளார்கள் என்பது ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது. அவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று ரஷ்ய யுத்தக் களத்தில் நெருக்கடிக்குள்ளாகியுள்ள இலங்கையர்கள் தொடர்பில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் சபையில் மேலும் தெரிவித்த இராஜாங்க அமைச்சர்,

ரஷ்ய யுத்த களத்துக்கு சென்றுள்ள இலங்கையர்கள் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்ட ஒருசில விடயங்களை அவர் திருத்திக் கொள்ள வேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற பாதுகாப்பு சபை கூட்டத்துக்கு பாராளுமன்ற உறுப்பினர்களான தயாசிறி ஜயசேகர, காமினி வலேபொட ஆகியோரையும் ஜனாதிபதி அழைத்திருந்தார். அந்த வகையில் அவர்கள் இருவரும் இந்த அமர்வில் பங்குபற்றினார்கள். ரஷ்யாவுக்கு தொழில் வாய்ப்புகளுக்காக சென்று யுத்தக் களத்தில் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையர்கள் தொடர்பில், இவ்விருவரும் பல விடயங்களை பாதுகாப்பு சபை கூட்டத்தில் முன்வைத்தார்கள்.

இதன் போது இவ்விடயம் தொடர்பில் கவனம் செலுத்திய ஜனாதிபதி, உடனடியாக விசாரணைகளை முன்னெடுத்து உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு பாதுகாப்புத் தரப்பினருக்கு பணிப்புரை விடுத்தார்.

எமது மக்களுக்கு எத்தகைய வழிகாட்டல்களை வழங்கினாலும், முகநூலில் பதிவிடப்படும் போலியான விளம்பரங்களுக்கு ஏமாறும் ஒரு தரப்பினர் இன்றும் நாட்டில் உள்ளார்கள். இவ்வாறான மோசடிகளில் ஈடுபட்டுள்ள ஒரிருவர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். ரஷ்யாவின் சென் பீற்றர் நகரத்தில் காணி வழங்கப்படுவதாகவும், குடும்பத்தாருக்கு விசா மற்றும் 10 இலட்சம் ரூபா வழங்கப்படுவதாகவும் முகநூலில் விளம்பரங்கள் பதிவேற்றம் செய்யப்படுகின்றன.

இத்தகைய போலியான வாக்குறுதிகளை நம்பி, இலங்கையர்கள் ரஷ்யாவுக்கு சென்று நெருக்கடிக்குள்ளாகியுள்ளார்கள். ஆகவே போலியான விளம்பரங்களுக்கு ஏமாற வேண்டாம் என மக்களிடம் கேட்டுக் கொள்கிறேன்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

ஞாயிறு 2024.05.12 — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk — NLB

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 5473 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.23,431,628.00
ஆங்கில எழுத்து R — வெற்றி இலக்கங்கள் 5 4 1 7 3 6

**அத சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 048 — ஆங்கில எழுத்து R — வெற்றி இலக்கங்கள் 1 7 3 6

**கொவிசெத** — சீட்டிழுப்பு இலக்கம் 3715 — சீட்டிழுப்பு திகதி 2024.05.12 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.76,956,465.36
ஆங்கில எழுத்து C — வெற்றி இலக்கங்கள் 07 32 34 53 — விசேட எழுத்து C — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 05213

**Mega POWER** — சீட்டிழுப்பு இலக்கம் 1821 — 2024.05.12 — 90133 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.432,485,728.00
ஆங்கில எழுத்து U — சுப்பர் இலக்கம் 02 — வெற்றி இலக்கங்கள் 05 09 29 31
அடுத்த டபள் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**VIP** — திகதி 2024.05.12 — சீட்டிழுப்பு இலக்கம் 0299 — ஆங்கில எழுத்து Q — L7 எழுத்து Q — வெற்றி இலக்கங்கள் 7 3 2 2 5 3
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.29,808,985.68

**ராசி சுப பலன்** — திகதி 2024.05.12 — சீட்டிழுப்பு இலக்கம் 782 — செவ்வாய் அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,516,458.24
வெற்றி இலக்கினம் மிதுனம் — வெற்றி இலக்கங்கள் 11 43 47 54 — தனயோக இலக்கம் 02183 — நாளுக்கான விதி எண் 25

**தன நிதானய** — சீட்டிழுப்பு இலக்கம் 1503 — 2024.05.12 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.91,792,657.84
ஆங்கில எழுத்து L — வெற்றி இலக்கங்கள் 09 17 35 62 — விசேட எழுத்து L — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 10222




# கிழக்கின் குரல்



## மட்டக்களப்பு மாவட்டத்தில்
# ரூ. 07 பில்லியன் செலவில் வீதி அபிவிருத்திப் பணிகள்

(கல்லடி குறூப் நிருபர்)



மட்டக்களப்பு மாவட்டத்தில் ரூ.07 பில்லியன் செலவில் மேலும் பல வீதி அபிவிருத்திப்பணிகள் ஆரம்பிக்கவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் காலநிலைக்கு சீரமைவான விவசாய நீர்ப்பாசனத்திட்டம் தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது காலநிலைக்கு சீரமைவான விவசாய நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் புனரமைக்கப்பட்டுவரும் வேலைத்திட்டங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் காலநிலைக்கு சீரமைவான விவசாய நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் 23 வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் இதற்காக ரூ.1053 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதன்கீழ் குளங்கள், கால்வாய்கள் உட்பட விவசாய நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கான செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளன.

மேலும் அபிவிருத்தி திட்டங்களை விரைவில் நிறைவுசெய்து மக்களிடம் கையளிக்குமாறு அறிவுறுத்தப்பட்டதுடன் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் ஏற்படும் சிக்கல்கள் இதன்போது இராஜாங்க அமைச்சரினால் தீர்த்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# உஷ்ணத்திலிருந்து மக்கள் பாதுகாப்பு பெற வேண்டும்

## கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவுரை

(மாளிகைக்காடு குறூப் நிருபர்)



நாட்டின் பல இடங்களிலும் கடுமையான வெப்பம் நிலவும் இக் காலகட்டத்தில் பொது மக்களுக்கு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் சகீலா இஸ்ஸதீன் அறிவுரை வழங்கியுள்ளார்.

நான்கு வயதுக்கு குறைவான குழந்தைகள், 60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், அதிக உடல் எடை கொண்டவர்கள், நோய்வாய்ப்பட்டவர்கள் என பலரும் அவதானமாக இருக்கவேண்டும். உடல் வெப்பநிலை 103 பாகை பரனைட்டுக்கு மேல் காணப்படும்.

அதிக தலைவலி, குமட்டல், தலைசுற்றல், உடல் சோர்வு, தசைப்பிடிப்பு, மனக்குழப்பம், தோல் வரண்டு போவது, இதய படபடப்பு, மூச்சு வாங்குதல் மற்றும் சுவாசிப்பதில் சிரமம் ஏற்படுதல் என்பன அறிகுறிகளாக காணப்படும்.

சூரியஒளி நேராக படுவதை முடியுமானவரை தவிர்க்க வேண்டும்.

உடற்பயிற்சியில் ஈடுபடுவோர் முடிந்தவரை காலை, மாலை வேலைகளில் அதில் ஈடுபட வேண்டும். வாகனத்தினுள் குழந்தைகளை தனியாக பூட்டி விட்டு செல்வதை தவிர்த்தல் வேண்டும். அதேபோல் வெப்பத்தின் தாக்கத்திலிருந்து தவிர்ந்து கொள்ள அடிக்கடி போதிய அளவு நீர் அருந்த வேண்டும், செயற்கை குளிர் பானங்களை தவிர்த்து இயற்கையான பானங்களை பருக வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

குழந்தைகளை வீட்டுக்குள் அல்லது மரநிழலில் விளையாட அனுமதிக்கலாம். வெளியில் செல்லும்போது தொப்பிகளை அணிந்து செல்வதற்கு ஊக்கப்படுத்தவும் என அவர் தெரிவித்தார்.

# நூல் வெளியீட்டு விழா

(தோப்பூர் குறூப் நிருபர்)

'கிண்ணியாவை ஆண்ட உள்ளூராட்சி மன்றத்தலைவர்கள்' எனும் தலைப்பின் கீழ் ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகரும் மற்றும் இலக்கியவாதியுமான எம்.எச்.ஏ. ஹசன் எழுதிய நூல் வெளியீட்டு விழா நேற்றுமுன்தினம் காலை கிண்ணியா பொது நூலக மண்டபத்தில் நடைபெற்றது.

எம்.எச்.ஏ. ஹசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஃரூப் கலந்துகொண்டதுடன் கௌரவ அதிதிகளாக கிழக்கு மாகாண சபையின் பிரதி பிரதம திட்டமிட்டல் பணிப்பாளர் கலாநிதி ந. தமிழ்ச்செல்வன், உள்ளூராட்சி மன்ற முன்னாள் தலைவர்கள், மூதூர் வலயக்கல்விப் பணிப்பாளர், வைத்திய அதிகாரிகள், இலக்கியவாதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# ஓட்டமாவடி உதைபந்தாட்ட சம்மேளனத்துக்கு புதிய செயலாளர் நியமனம்



ஓட்டமாவடி உதைபந்தாட்ட சம்மேளனத்தின் புதிய செயலாளராக கல்குடா அஸ்பக் அகாடமி பணிப்பாளர் ஏ.எல்.எம். இர்பான் நேற்றைய தினம் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் அனுமதியுடன் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் சம்மேளன அதிகாரிகளின் முன்னிலையில் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இவர் கல்குடா பிரதேசத்தில் விளையாட்டை மேம்படுத்த விளையாட்டு துறைசார் கல்குடா அஸ்பக் அகாடமியொன்றை ஸ்தாபித்து பெரும் பணி ஆற்றிவருகிறார். மேலும் இவர் வாழைச்சேனை அந்நூர் தேசிய படையின் முன்னாள் மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# திறந்த போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரல்

(ஒலுவில் விசேட நிருபர்)

கிழக்கு மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் நன்னடத்தை உத்தியோகத்தர் தரம்11 இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளதாக, கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் ஏ. மன்சூர் தெரிவித்தார்.

விண்ணப்பதாரி கிழக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாக கொண்டவராகவும் அல்லது விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் மூன்று வருடங்களோ அல்லது அதற்கு அதிக காலமோ தொடர்ச்சியாக கிழக்கு மாகாணத்தில் வசித்திருத்தல் அத்துடன் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

சமூகவியல் அல்லது உளவியல் அல்லது சட்டம் அல்லது குற்றவியல் அல்லது சமூக விஞ்ஞானம் அல்லது அரசியல் விஞ்ஞானம் ஆகிய துறைகளில் ஏதேனும் ஒன்றில் பட்டதாரியாக இருத்தல் வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள், இம் மாதம் 22ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணம், கன்னியா வீதி, வரோதயநகர், திருகோணமலை எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் அறிவித்துள்ளார்.

# பிரமாண்டமான ஏற்பாடுகளுடன் 5வது ஆண்டு பூர்த்தி விழா



சிலோன் மீடியா போரத்தின் உயர்பீடக் கூட்டம் தலைவர் றியாத் ஏ. மஜீத் தலைமையில் நேற்றுமுன்தினம் (12)சாய்ந்தமருதில் நடைபெற்றது. இதில் ஹஜ்ஜுப் பெருநாளை முன்னிட்டு ஊடகர்கள் மற்றும் பிரமுகர்கள் கலந்து கொள்ளும் ஊடக சுற்றுலா மற்றும் போரத்தின் 5வது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு பிரமாண்டமான ஏற்பாடுகளுடன் கொழும்பு BMICH இல் நடைபெறவுள்ள கௌரவிப்பு நிகழ்வு பற்றியும் விரிவாக ஆராயப்பட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# கிழக்கு மாகாண புதிய இராணுவ கட்டளை தளபதி காத்தான்குடிக்கு விஜயம்

(மட்டக்களப்பு குறூப் நிருபர்)



புதிதாக நியமனம் பெற்றுள்ள கிழக்கு மாகாண இராணுவ கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் எஸ்.ஏ. குலத்துங்க முதன்முறையாக நேற்று காலை காத்தான்குடிக்கு விஜயம் செய்தார்

காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்தின் அழைப்பை ஏற்று வருகை தந்த புதிய இராணுவ கட்டளை தளபதிக்கு பள்ளிவாசல்கள் சம்மேளன தலைமையகத்தில் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

பள்ளிவாசல்கள் சம்மேளன தலைவர் எம்.ஏ.எம் தௌஃபிக் தலைமையில் நடைபெற்ற வரவேற்பு வைபவத்தில் சம்மேளன பொதுச்செயலாளர் அஷ்ஷெய்க் ஐ.எல்.எம் இல்ஹாம்பலாஹி அதன் பிரதி தலைவர் எம்.எஸ்.ஏ.எம் சத்தார் உட்பட இராணுவ உயர் அதிகாரிகள் சம்மேளன பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டனர்.

பள்ளிவாசல்கள் சம்மேளனத்தினால் புதிய இராணுவ தளபதி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதுடன் நினைவுச் சின்னமும் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

# ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு



கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் ஆரம்பக் கல்வி ஆசிரியையாகவும் பகுதித் தலைவியாகவும் கடமையாற்றிய திருமதி றஸீதா அப்துல் நாபித், தமது 36 வருட ஆசிரியர் பணியிலிருந்து நேற்றுமுன்தினம் ஓய்வு பெற்றார்.

சிறுவயதிலேயே தந்தையை இழந்த இவர், பல இன்னல்களுக்கு மத்தியில் சாய்ந்தமருது மல்ஹருஸ் ஸம்ஸ் மகா வித்தியாலயத்தில் ஆரம்பக்கல்வியையும் தரம் 6 இனை கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியிலும் தரம் 7 தொடக்கம் உயர்தரம் (விஞ்ஞானப்பிரிவு) வரை தனது தந்தையின் பிறப்பிடமான நிந்தவூர் அல்அஷ்ரக் மத்திய மகா வித்தியாலயத்திலும் (தேசிய பாடசாலையிலும்) கல்விபயின்றார். உயர் கல்விக்காக வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தெரிவாகி, பட்டப்படிப்பைத் தொடர்ந்த இவர், ஒரு வருட முடிவில் ஆசிரியர் போட்டிப் பரீட்சையில் தோற்றி, சித்தியடைந்ததன் காரணமாக தனது பட்டப்படிப்பை இடைநடுவில் நிறுத்திவிட்டு, 1988 இல் ஆரம்பக் கல்வி ஆசிரியர் நியமனம் பெற்று சாய்ந்தமருது மழ்ஹறுஸ் ஸம்ஸ் மகா வித்தியாலயத்தில் தமது முதல் நியமனத்தை ஏற்றார்.

# மாணவர்களுக்கான செயலமர்வு



(தம்பலகாமம் குறூப் நிருபர்)

பத்தாம் குறிச்சி அறிவு ஒளி மையத்தின் பயன்பெறும் மாணவருக்கான பாலின சீர்மை பற்றிய பயிற்சிப் பட்டறை நேற்று(13) திருகோணமலை நகரசபை வளாகத்திலுள்ள நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக வருகை தந்த திருகோணமலை நகரசபைச் செயலாளர் திரு. இராஜசேகர் கூறுகையில், இவ்வமைப்பானது சிறப்பான முறையில் நமது அடுத்த தலைமுறையினரை செம்மைப்படுத்துகின்றது. ஆகவே இனி வரும் காலங்களில் மாநகரசபையின் ஒரு சில திட்டங்களோடு ஒருங்கிணைத்து செயற்படுவோம்.

அதுமட்டுமின்றி இதேபோன்ற பல மாணவர் மன்றங்களை உருவாக்குவோம் என்றும் அவர் தெரிவித்தார்.



கனடாவில் மறைந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர்.எம்.கே.ஈழவேந்தனின் நினைவஞ்சலி (12) திருகோணமலை வெருகல் சீனன் வெளி விநாயகர் கோயிலில் நடைபெற்றது. இலங்கை தமிழரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் சண்முகம் குகதாசன் தலைமையில் நடைபெற்ற நினைவஞ்சலி நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். ஸ்ரீதரன் உட்பட கட்சியின் முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், கட்சியின் தொண்டர்கள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர். ஏப்ரல் மாதமளவில் கனடாவில் மறைந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தனை நினைவு கூறும் வகையில் அவரது திருவுருப்படத்திற்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். (படம்: தம்பலகாமம் குறூப் நிருபர்)

# உள்ளூராட்சிமன்ற உத்தியோகத்தர்களுக்கு திருமலையில் விசேட செயலமர்வு



(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

"பயனுறுதிமிக்க மக்கள் பங்களிப்பின் ஊடாக உள்ளூராட்சி மன்ற சேவைகளில் வெளிப்படைத்தன்மையையும் பொறுப்புக் கூறலையும் மேம்படுத்தல்" எனும் செயற்றிட்டத்தின் கீழ் திருகோணமலை மாவட்டத்திலுள்ள மாநகர சபை, நகர சபை மற்றும் பிரதேச சபைகளில் பணியாற்றும் அதிகாரிகளுக்கு செயலமர்வொன்று நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

ஆசிய மன்றத்தின் நிதி அனுசரணையில் இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் அமுலாக்கத்ததோடு கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் செயலமர்வுகள் நடைபெற்று வருகின்றன.

திருகோணமலை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தின் நல்லாளுகை வள நிலையத்தில் நடைபெற்ற இச்செயலமர்வில் உள்ளூராட்சி மன்றங்களைச் சேர்ந்த செயலாளர்கள் உட்பட 48 அதிகாரிகளும் அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களுக்கான இணைப்பாளர் ஏ.எல். இஸ்ஸதீன் பிரதான வளவாளராகக் கலந்து கொண்டு செயலமர்வை நடத்தினார்.

# சட்டவிரோத கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட மூவர் கைது!

சட்டவிரோதமாக கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட மூவர் அண்மையில் கைது செய்யப்பட்டுள்ளனர். வாகரை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கதிரவெளி பகுதியில் வைத்தே இவர்கள் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். வெலிகந்தை இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய கதிரவெலி விசேட அதிரடிப்படையினருடன் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே கசிப்பு உற்பத்தி செய்த மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து, 300 லீற்றர் கசிப்பு, கசிப்பு உற்பத்தி செய்ய பயன்படுத்திய ஒன்பது பரல்கள், செப்புக் கம்பிகள் போன்றவை கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட மூவரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# மலையகத்தில் நவீனமயப்படுத்தப்பட்ட பசும்பால் உற்பத்தி செயற்றிட்டம்

## பிரதேச மக்களுக்கு முன்னுரிமை வழங்குமாறு இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் கோரிக்கை



ஐக்கிய அமெரிக்காவும் இலங்கையும் ஒன்றிணைந்து மலையகத்தில் முன்னெடுக்கவுள்ள நவீனமயப்படுத்தப்பட்ட திரவப்பால் உற்பத்தி செயற்றிட்டத்தில் மலையகத்தவர்களுக்கும் முன்னுரிமை வழங்குவதை உறுதிப்படுத்துமாறு பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் கல்வி இராஜாங்க அமைச்சருமான அருணாச்சலம் அரவிந்தகுமார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் அவர் மேலும் கூறியுள்ளதாவது,

ஐக்கிய அமெரிக்காவும் இலங்கையும் ஒன்றிணைந்து முன்னெடுக்கவுள்ள நவீனமய திரவப்பால் உற்பத்தி திட்டம் தொடர்பில் வாழ்த்துக்களை தெரிவித்துகொள்கின்றேன். அதேநேரம் இத்தகையதொரு திட்டத்தை மலையகத்தில் முன்னெடுக்கவுள்ளமைக்கு எனது நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரவப்பால் உற்பத்தி செயற்றிட்டம் தொடர்பிலான துறைசார் நிபுணத்துவமும் அனுபவமும் அதேநேரம் அர்ப்பணிப்பும் கொண்ட பெருமளவானோர் மலையகத்தில் இருக்கின்றனர்.

அதுமட்டுமின்றி மலைநாடானது பால் உற்பத்திக்கு ஏற்ற காலநிலையையும் வளங்களையும் கொண்டிருக்கின்ற மிகப்பொருத்தமான நிலப்பிரதேசமாகும். எனவே தேசிய உற்பத்திகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் இறக்குமதிகளில் வீழ்ச்சியை ஏற்படுத்துவதற்கும் வெளிநாட்டு நாணயங்களை தக்க வைத்துக் கொள்வதற்கும் முடியும்.

மேலும் இத்திட்டமானது மலையக மக்கள் தங்களது பொருளாதாரத்தை விருத்தி செய்து கொள்வதற்கு வாய்ப்பாக அமைகிறது.

அதேநேரம் நவீனமயப்படுத்தப்பட்ட பால் உற்பத்தி செயற்றிட்டத்தில் மலையகத்தவர்களுக்கு முன்னுரிமை வழங்குவதை உறுதிப்படுத்துமாறு தங்களிடம் வினயமாக கேட்டுக்கொள்கிறேன் என அவர் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மலைச்சாரல்

### ரூ.1700 சம்பள அதிகரிப்பு

# தோட்ட கம்பனிகளுடன் தொடர்ந்து உயர்மட்ட பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்படும்

## விரைவில் சாதகமான தீர்வு கிட்டுமென ஆனந்தகுமார் நம்பிக்கை



தோட்டத்தொழிலாளர்களுக்கு ரூ.1700 சம்பள அதிகரிப்பு குறித்து தோட்ட கம்பனிகளுடன் உயர்மட்ட பேச்சுவார்த்தை தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டுவருவதாக இரத்தினபுரி மாவட்ட ஐக்கிய தேசியக்கட்சி அமைப்பாளர்ஆனந்தகுமார் தெரிவித்தார்.

இதன்மூலம் விரைவில் சாதகமான தீர்வு கிட்டுமெனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தோட்டத்தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை ரூ.1700 ஆக அதிகரிப்பதற்கான விசேட வர்த்தமானி அறிவிப்பு விடுத்திருந்த போதும் இன்னும் அதை நடைமுறைப்படுத்துவதில் நிலவிவரும் தாமதம் குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதியின் வழிகாட்டலுக்கு அமைவாக சம்பந்தப்பட்ட தரப்பினருடன் இணைந்து பேச்சுவார்த்தை தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டுவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

எமது மக்களின் நாளாந்த வேதனத்தை அறிவிக்கப்பட்ட படி பெற்றுக்கொடுப்பதே எமது இலக்கு என்று தெரிவித்த அவர் தோட்டக் கம்பனிகள் தட்டிக்கழிக்கும் நோக்குடன் காரணங்களை கூறியபோதிலும் அவற்றை நாம் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. குறிப்பிட்ட தொகையை பெற்றுக்கொடுப்பதே எமது இலக்கு. எனவே தொழிலாளர் நலன்விரும்பும் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

தோட்டத் தொழிலாளர் சம்பளம் மாத்திரமின்றி அவர்களது சேமநலன்களுக்கான விடயங்களிலும் ஜனாதிபதி தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சியின் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் கூடிய கவனம் செலுத்திவருவதுடன் அதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டுவருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கை தோட்ட சேவையாளர் சங்கத்தின் 104வது வருட பூர்த்தி

(நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்)

இலங்கை தோட்ட சேவையாளர் சங்கத்தின் 104வது வருட பூர்த்தியை முன்னிட்டு 25வது பேராளர் மாநாடு எதிர்வரும் 18ஆம் திகதி காலை 8.00மணிக்கு தெஹிவளை ஜயசிங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக சங்கத்தின் பொதுச் செயலாளர் ரொபட் பிரான்சீஸ் தெரிவித்தார். இத்தொழிற்சங்கமானது 1920ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதாகும். பெருந்தோட்டத்துறையில் 104 வருட வரலாற்றை கொண்ட அரசியல் கலப்பற்ற சுதந்திரமாக ஜனநாயக ரீதியாக இயங்கும் தொழிற் சங்கமாகும். எழுதுவினைஞர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், மேற்பார்வை உத்தியோகத்தர்கள், மருத்துவ உத்தியோகத்தர்கள், பராமரிப்பு மற்றும் உதவி உத்தியோகத்தர்கள் ஆகியோர் அங்கத்தவர்களாக இருக்கின்றனர்.

இரண்டு, வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும் மாநாட்டில் புதிய தலைவர், நிதிச்செயலாளர், உப தலைவர்கள் இருவர், கவுன்சில் அங்கத்தினர் ஆறு பேர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். இவர்கள் பதுளை, நுவரெலியா, தலவாக்கலை, ஹற்றன், நாவலப்பிட்டி, கண்டி, கேகாலை, அவிசாவளை, இரத்தினபுரி, மத்துகம, காலி, தெனியாய ஆகிய 12 மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.



நுவரெலியா சீதையம்மன் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதனைமுன்னிட்டு அயோத்தி இராமர் கோவிலிலிருந்து சீதையம்மனுக்கு சீர்வரிசையாக அனுப்பப்பட்ட புனித கோபுர கலசங்கள் நேற்றுமுன்தினம் கொழும்பு தெஹிவளை ஸ்ரீ பஞ்சமுக ஆஞ்சநேயர் ஆலயத்தில் வைக்கப்பட்டு பக்தர்கள் தரிசிப்பதை படங்களில் காணலாம்.

# 20 இலட்சம் பேருக்கு காணி உறுதி வழங்கும் வேலைத்திட்டம்

## ஆளுநர் தலைமையில் கலந்துரையாடல்



(அக்குறணை குறூப் நிருபர்)

மத்திய மாகாணத்தில் இருபது இலட்சம் பேருக்கு 'உறுமய' வேலைத்திட்டத்தின் கீழ் காணி உறுதிகள் வழங்கும் வேலைத்திட்டம் தொடர்பாகவும், அதன் முன்னேற்றம் தொடர்பாகவும் கண்டியில் கலந்துரையாடலொன்று அண்மையில் நடைபெற்றது.

மத்திய மாகாண ஆளுநர் காரியாலயத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஆளுநர் லலித் யூ கமகே தலைமை தாங்கினார்.

மத்திய மாகாணத்தில் முதற் கட்ட வேலைத்திட்டத்தின் கீழ் 611 பேருக்கு தம்புள்ள பிரதேசத்தில் காணி உறுதிகள் வழங்கப்பட்டுள்ளன. இரண்டாம் கட்ட வேலைத்திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடலொன்றும் இதன்போது நடைபெற்றது.

இதில், மாகாண பிரதான செயலாளர் அஜித் பிரேமவன்ச, ஆளுநர் செயலாளர் திருமதி மஞ்சுலா மடஹபொல, மாகாண காணி ஆணையாளர் மனோசா விஜேதுங்க, மாகாண பிரதான அமைச்சின் செயலாளர் மேனகா ஹேரத் ஆகியோர் கலந்து கொண்டதுடன் காணி ஆணையாளர் நாயகம் பந்துல ஜயசிங்க 'ஒன்லைன்' தொழில்நுட்பம் மூலம் தொடர்பு கொண்டிருந்தார்.

# மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய வருடாந்த மகோற்சவப் பெருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பம்



(மன்னார் குறூப் நிருபர்)

வரலாற்று சிறப்பு மிக்க மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய வருடாந்த மகோற்சவப் பெருந்திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய பிரதம குரு கருணாணந்த குருக்கள் தலைமையில் காலை 10 மணி தொடக்கம் 12 மணி வரையான சுப நேரத்தில் கொடியேற்றம் நடைபெற்றது. தொடர்ந்து உற்சவ மூர்த்திகளுக்கு வசந்த மண்டபத்தில் விசேட பூஜை வழிபாடுகள் நடைபெற்றன. அதனை தொடர்ந்து உற்சவ மூர்த்திகள் கொடிக்கம்பத்திற்கு முன் எழுந்தருளியதை தொடர்ந்து விசேட வழிபாடுகள் நடைபெற்றன.கொடிக்கம்பத்திற்கு விசேட அபிஷேகமும் கொடியேற்றும் விழாவில் இடம் பெற்றது. இதன்போது கொடியேற்ற பெருவிழாவில் பல நூற்றுக்கணக்கான அடியார்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.



சர்வதேச தாதியர் தினத்தை முன்னிட்டு, யாழ்.போதனா வைத்தியசாலையும், தாதியர் பயிற்சி கல்லூரியும் இணைந்து நிகழ்வொன்றை ஏற்பாடு செய்திருந்தது. யாழ். தாதியர் பயிற்சி கல்லூரி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி, தாதிய உத்தியோகத்தர்கள், தாதிய மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# வெடி பொருட்கள் மீட்பு

(யாழ்.விசேட நிருபர்)

யாழ்ப்பாணம் சாட்டி கடற்கரை பகுதியிலிருந்து சுமார் 03 கிலோ வெடி பொருட்கள் உள்ளிட்ட பல பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதுடன், அவற்றை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஊர்காவற்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாட்டி கடற்கரை பகுதியில் வெடி பொருட்கள் காணப்படுவதாக பொலிஸ் விசேட அதிரடி படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு விரைந்த விசேட அதிரடி படையினர் 03 கிலோ 145 கிராம் வெடி மருந்துக்கள், ஆர்.பி.ஜி எறிகணைகள் 08 மற்றும் 60 எம்.எம். மோட்டார் எறிகணைகள் 12 என்பவற்றை மீட்கப்பட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட எறிகணைகள் சில வற்றில் இருந்து வெடி பொருட்கள் பிரித்து எடுக்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட வெடி பொருட்களுடன், கைதுசெய்யப்பட்ட நபரையும் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக ஊர்காவற்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# வடக்கின் உதயம்

# தெங்கு, பாக்கு பயிர்ச்செய்கை விரிவாக்க கலந்துரையாடல்

(பரந்தன் குறூப் நிருபர்)

கிளிநொச்சியில் தெங்கு மற்றும் பாக்கு பயிர்ச்செய்கை விரிவாக்கம் தொடர்பான கலந்துரையாடலொன்று அண்மையில் நடைபெற்றது. கிளிநொச்சி மாவட்டத்தில் தெங்கு மற்றும் பாக்கு பயிர்ச்செய்கை விரிவாக்கம் தொடர்பான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் மாவட்ட மேலதிக செயலாளர் திரு.எஸ். முரளிதரன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இக்கலந்துரையாடலில் ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் எஸ்.எம்.சமன் பந்துலசேன கலந்து கொண்டிருந்தார். மேலும் மாகாண உதவி விவசாய பணிப்பாளர், மாவட்ட விவசாய பணிப்பாளர், மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர், உதவி திட்டமிடல் பணிப்பாளர், தெங்கு அபிவிருத்தி சபையின் பிராந்திய முகாமையாளர் உள்ளிட்டோரும் இக்கலந்துரையாடலில் பங்கு பற்றியிருந்தனர்.





வட மாகாண 2024 ஆம் ஆண்டுக்கான பளுதூக்கல் போட்டியில் பங்குபற்றி வவுனியா மாவட்ட வீர வீராங்கனைகள் சாதனை படைத்துள்ளனர். யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பளுதூக்கும் போட்டியில் வவுனியா மாவட்டம் இரண்டாமிடத்தை பெற்று சாதனை படைத்துள்ளது.

(ஓமந்தை விஷேட நிருபர்)

# கொழும்பு அக்ரம் அறக்கட்டளை ஏற்பாட்டில் இன நல்லிணக்க புத்தாண்டு நிகழ்வு

## பிரதம அதிதியாக முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க பங்கேற்பு























அக்ரம் அறக்கட்டளை, வனிதா சவிய அறக்கட்டளை மற்றும் கொழும்பு இளைஞர் கழகம் இணைந்து ஒழுங்கு செய்த சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு கொண்டாட்டம் கொழும்பு ஹைட் பார்க் மைதானத்தில் அறக்கட்டளையின் தலைவரும் முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினருமான மொஹமட் அக்ரம் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக முன்னாள் நிதி அமைச்சரும் கொழும்பு வடக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளருமான ரவி கருணாநாயக்க கலந்து சிறப்பித்தார்.

விழாவின் பிரதம அதிதி முன்னாள் அமைச்சர் தனது உரையில், நாம் அனைவரும் ஒன்றிணைந்து எமது நாட்டை அபிவிருத்தி செய்ய முன்வர வேண்டும். எமது நாட்டில் வாழுகின்ற சிங்கள, தமிழ், முஸ்லிம் மற்றும் ஏனைய இனங்கள் நாட்டின் முன்னேற்றத்திற்காக உழைத்து இன நல்லிணக்கத்துடன் வாழ முன்வர வேண்டுமென்பது காலத்தின் தேவையாகும். அனைவரும் இன, மத, கட்சி வேறுபாடுகளின்றி ஒற்றுமையுடன் பேதங்களை மறந்து ஒன்றுபட வேண்டுமென நான் இச்சந்தர்ப்பத்தில் அழைப்பு விடுக்கிறேன் என்றும் ரவி கருணாநாயக்க மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பல்வேறு கலாசார போட்டிகள் இடம்பெற்றதோடு போட்டியில் வெற்றி பெற்றோருக்கும் பிரதம அதிதியினால் பரிசுகள் வழங்கி வைக்கப்பட்டன. முன்னாள் மாநகர சபை உறுப்பினர் ஏ.ஆர்.எம். ஷப்வான், ரவி கருணாநாயக்கவின் ஒருங்கிணைப்பு செயலாளர் காமில் ஹசன் மற்றும் அக்ரம் அறக்கட்டளை உறுப்பினர்கள் உட்பட பெருந்திரளான பெண்களும் கலந்து கொண்டனர்.

**ருஸைக் பாருக்**


# இலங்கை வங்கி

**விடுமுறை விடுதியாகப் பயன்படுத்த பொருத்தமான இடம் வாடகைக்கு தேவைப்படுகின்றது.**

**இலங்கை வங்கியின் ஊழியர்கள் விடுமுறை விடுதியாகப் பயன்படுத்தக் கூடிய பொருத்தமான இடம் பின்வரும் வசதிகளோடு மஹரகமவை அண்மித்ததாக வாடகைக்கு தேவைப்படுகின்றது.**

1. கொட்டாவைக்கும் நுகேகொடைக்கும் இடையில் ஹைலெவல் பாதைக்கு அண்மித்த குடியிருப்புப் பகுதியில் போக்குவரத்து வசதிகளுடன் அமைந்திருக்க வேண்டும்.
2. இணைந்த குளியலறை வசதிகளோடு 05 க்கு மேற்பட்ட படுக்கையறைகளைக் கொண்டதாகவும் குறைந்தது 20 பேர் பயன்படுத்தக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.
3. குறைந்தது 05 வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு போதுமான இடவசதி இருத்தல் வேண்டும்.
4. தடங்கலில்லாத நீர்விநியோக வசதி, மூன்று கட்ட மின்சாரம் என்பவற்றுடன் படுக்கையறைகள் மற்றும் வெளிக்கூடம் என்பன குளிரூட்டப்பட்டிருத்தல் வேண்டும். (சூரிய சக்தி மின்சாரம் விரும்பத்தக்கது)
5. பராமரிப்பாளருக்கும் சாரதிக்கும் குளியலறை வசதியோடு தனியான தங்குமிட வசதி இருத்தல் வேண்டும்.

மேற்கூறிய தகைமைகளை உறுதிப்படுத்த பின்வரும் ஆவணங்களின் பிரதிகளை சமர்ப்பிக்க வேண்டும்.

அ) உரிமைத்துவ உறுதி அல்லது உரிமைச் சான்றிதழ்
ஆ) அங்கீகாரம் பெற்ற அளவையியல் திட்டம்
இ) அங்கீகாரம் பெற்ற கட்டடத்தின் திட்ட வரைபு
ஈ) இணக்கச் சான்றிதழ் (COC)
உ) முக்கிய நகரங்களுக்கான திசை வரைபடங்கள்

- எதிர்பார்க்கும் மாதாந்த வாடகையைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்

இது தொடர்பில் ஆர்வமுள்ள விலைகூறுவோர் மேற்கூறிய ஆவணங்களை பதிவுத் தபாலில் அனுப்பவும் அல்லது விலைகூறல் பெட்டியில் 2024/06/04 ஆம் திகதி அல்லது அதற்கு முன் இட வேண்டும். விண்ணப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை வங்கியின் ஊழியர்கள் விடுமுறை விடுதியாகப் பயன்படுத்தக் கூடிய பொருத்தமான இடத்துக்கான விலைகோரல்" எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

பிரதான முகாமையாளர்
சொத்துக்களும் சேகரிப்பும் பிரிவு
14 ஆம் மாடி, தலைமையகம், "இலங்கை வங்கிச் சதுக்கம்"
இல: 1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
தொலைபேசி: 011-2204271 / 011-2430268
தொலைநகல்: 011-2449629

மேலதிக விபரங்களுக்கு Scan செய்யவும்

தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல 1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.

**தலைவர், பிராந்திய பெறுகைக் குழு,**
**பிராந்திய பணிப்பாளரின் அலுவலகம் (மேல் மாகாணம்),**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

# பெறுகை அறிவித்தல்

## மாகாண சமூக சேவைத் திணைக்களம் – வடமத்திய மாகாணம்

01. வடமத்திய மாகாண சபையின் சமூக சேவைத் திணைக்களத்தின் பெறுகைக் குழுத் தலைவரான என்னால் வடமத்திய மாகாண சமூக சேவைத் திணைக்களத்திற்காக 2024ம் ஆண்டுடன் சம்பந்தப்பட்ட 2024.07.01 முதல் 2024.12.31 வரை கீழ்க்காணும் வழங்கல் மற்றும் சேவைகளை பெற்றுக் கொள்வதற்கு தகைமையுள்ள வழங்குநர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக இத்தால் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| பெறுகை இலக்கம் | வழங்கல் மற்றும் சேவைகள் பற்றிய விபரம் | அளவு | 105 நாட்களுக்கு செல்லுபடியாகும் கேள்வி பிணையின் பெறுமதி | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் |
|---|---|---|---|---|
| NCP/SS/F05/01/02/01 - 2024 | உலர் உணவுப் பொருட்கள் வழங்குதல் (தானிய வகைகள்) சாலியபுர முதியோர் இல்லம் | கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகளில் | ரூ. 45,000/- | ரூ. 1000.00 |
| NCP/SS/F05/01/02/02 - 2024 | உலர் உணவுப் பொருட்கள் வழங்குதல் (பலசரக்கு வகை மற்றும் அது சார்ந்த உற்பத்தி) - சாலியபுர முதியோர் இல்லம் | | ரூ. 18,000/- | ரூ. 1000.00 |
| NCP/SS/F05/01/02/03 - 2024 | உலர் உணவுப் பொருட்கள் வழங்குதல் (கருவாடு மற்றும் பதில் உற்பத்திகள்) சாலியபுர முதியோர் இல்லம் | | ரூ. 16,000/- | ரூ. 1000.00 |
| NCP/SS/F05/01/02/04 - 2024 | உலர் உணவுப் பொருட்கள் வழங்குதல் (பான வகைகள் மற்றும் அது சார்ந்த உற்பத்தி) சாலியபுர முதியோர் இல்லம் | | ரூ. 12,000/- | ரூ. 1000.00 |
| NCP/SS/F05/01/02/05 - 2024 | உலர் உணவுப் பொருட்கள் வழங்குதல் (தானிய வகைகள்) சாலியபுர முதியோர் இல்லம் | | ரூ. 6,000/- | ரூ. 1000.00 |
| NCP/SS/F05/01/02/06 - 2024 | மரக்கறி வழங்குதல் சாலியபுர முதியோர் இல்லம் | | ரூ. 60,000/- | ரூ. 1000.00 |
| NCP/SS/F05/01/02/07 - 2024 | பழங்கள் வழங்குதல் சாலியபுர முதியோர் இல்லம் | | ரூ. 25,000/- | ரூ. 1000.00 |
| NCP/SS/F05/01/02/08 - 2024 | தேங்காய் வழங்குதல் - சாலியபுர முதியோர் இல்லம் | | ரூ. 16,000/- | ரூ. 1000.00 |
| NCP/SS/F05/01/02/09 - 2024 | மீன்,கோழியிறைச்சி, முட்டை வழங்குதல், சாலியபுர முதியோர் இல்லம் | | ரூ. 65,000/- | ரூ. 1000.00 |
| NCP/SS/F05/01/02/10 - 2024 | அரிசி, மா, இடியப்பம் வழங்குதல் சாலியபுர முதியோர் இல்லம் | | ரூ. 8,000/- | ரூ. 1000.00 |
| NCP/SS/F05/01/02/11 - 2024 | பான் வழங்குதல் - சாலியபுர முதியோர் இல்லம் | | ரூ. 11,000/- | ரூ. 1000.00 |
| NCP/SS/F05/01/02/12 - 2024 | வெற்று பினப்பெட்டி வழங்குதல் - சாலியபுர முதியோர் இல்லம் | | ரூ. 7,000/- | ரூ. 1000.00 |

02. இக் கேள்வி கோரல் தேசிய போட்டி கேள்வி கோரலின் கீழ் இடம்பெறும்.

03. மேற்படி வழங்கல் அல்லது சேவைகளுக்காக கேள்விகளைச் சமர்ப்பிக்கும் கேள்விதாரர்களாகும் அந்த ஒவ்வொரு வழங்கல் அல்லது சேவைகள் வழங்குதல் சம்பந்தமாக குறைந்த பட்சம் ஒரு வருட (01) அல்லது அனுபவத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

04. இது பற்றி ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு மேலதிக விபரங்களை வடமத்திய மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் 025 - 2224173 தொ.பே.இலக்கத்தில் விசாரித்துப் பெற்றுக் கொள்ள முடிவதுடன் அலுவலக நேரங்களில் (மு.ப.9.30 முதல் பி.ப.3.30 வரை) கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம்.

05. ஒவ்வொரு வழங்கலுக்கும் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்படுமாறு மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை வடமத்திய மாகாண சமூக சேவைப் பணிப்பாளரிடம் காசாகச் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து 2024.05.14 முதல் 2024.06.03 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.30 முதல் பி.ப. 3.30 வரையான காலத்திற்டகுள் சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்ட கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

06. மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்படுமாறு இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக் கொண்ட 2024.09.18 வரை 105 நாட்கள் வரை செல்லுபடியாகுமாறு "வடமத்திய மாகாண சமூக சேவைப் பணிப்பாளரின்" பெயரில் பெற்றுக்கொண்ட நிபந்தனையற்ற கேள்விப் பிணையொன்றை அல்லது அதன் பெறுமதிக்கு சமமான தொகையை "வடமத்திய மாகாண சமூக சேவைப் பணிப்பாளர்" இன் பெயரில் வைப்புச் செய்து பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை ஒவ்வொரு கேள்வியுடனும் வேறுவேறாக சமர்ப்பித்தல் வேண்டும்.

07. சகல கேள்விப் பத்திரங்களும் கேள்வி திறக்கப்படும் தினம் முதல் 77 நாட்கள் வரை செல்லுபடியாதல் வேண்டும்.

08. வடமத்திய மாகாண சமூக சேவைத் திணைக்களம், இல.372, தர்மபால மாவத்த, அநுராதபுரம் என்ற முகவரியில் 2024.05.21 மு.ப. 10.00 இற்கு கேள்விக்கு முன்னரான கூட்டம் நடைபெறுவதுடன் கேள்விதாரர்களுக்கு இதற்காக சமுகமளிக்கலாம்.

09. ஒவ்வொரு பெறுகைக்குமான கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளுடன் தயாரிக்கப்பட்டு "மூலப்பிரதி" மற்றும் "நகல்பிரதி" என வேறுவேறாகக் குறிப்பிட்டு 02 உறைகளில் இட்டு பொறியிட்டு அவ் உறைகள் இரண்டையும் ஒரு உறையில் இட்டு பொறியிட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் குறித்த "வழங்கல் அல்லது சேவை வகை மற்றும் வருடத்தை" குறிப்பிட்டு 2024.06.04 மு.ப. 10.00 இற்கு முன்பு கிடைக்குமாறு, மாகாண சமூக சேவைப் பணிப்பாளர், மாகாண சமூக சேவைத் திணைக்களம், இல. 372, தர்மபால மாவத்த, அநுராதபுரம், என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது இத் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் சகல வழங்கல்கள் மற்றும் சேவைகளுடன் சம்பந்தப்பட்ட கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படுவதுடன் அவ் வேளையில் கேள்விதாரர்களுக்கு அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட ஒரு பிரதிநிதி மாத்திரம் சமுகமளிக்கலாம்.

10. சகல கேள்விதாரர்களும் பெறுகை ஆவணங்களில் குறிப்பிடப்படும் சட்டத்திட்டங்களுக்கு இணங்குவதுடன், திணைக்கள பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

**பணிப்பாளர்/ தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இல.372, தர்மபால மாவத்த,**
**அநுராதபுரம்.**
**2024.05.14**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

நீர்ப்பாசன அமைச்சு

நீர்ப்பாசனத் திணைக்களம்

## தேசிய போட்டி ரீதியிலான விலைகோரல்

01. பின்வரும் வழங்கல்களுக்காக தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை நீர்ப்பாசனத் திணைக்களத்தின் சார்பாக பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.

**அட்டவணை இல. 01**

| விலைக் கோரல் இல. | வழங்கல் விபரங்கள் | எண்ணிக்கை | மீளளிக்கப் படாத வைப்பு (ரூபா) | விலைக் கோரல் செல்லுபடி யாக வேண்டிய காலம் | விலைக் கோரல் பிணை முறித் தொகை (ரூபா) | பிணை முறி செல்லுபடிக் காலம் |
|---|---|---|---|---|---|---|
| IFB/ID/GOSL/NCB/2024/001 | எல்லே வெவ நீர்தேக்கத் திட்டத்திற்கு **Metal (20mm)** மற்றும் **Rubble (150mm – 225mm)** என்பவற்றிற்கான பெறுகை | | | | | |
| | Lot 01 - எல்லே வெவ நீர்த் தேக்கத் திட்டத்திற்கு Metal (20mm) என்பவற்றின் பெறுகை | 78.0 | 2,000.00 | 2024-08-06 வரை | 15,000.00 | 2024-09-03 வரை |
| | Lot 02 - எல்லே வெவ நீர்த் தேக்கத் திட்டத்திற்கு Rubble (150mm – 225mm) என்பவற்றின் பெறுகை | 177.0 | | | 27,000.00 | |
| IFB/ID/GOSL/NCB/2024/002 | எல்லே வெவ நீர்த்தேக்கத் திட்டத்திற்கு மணலுக்கான பெறுகை | 2050.0 | 9,000.00 | 2024-09-03 வரை | 500,000.00 | 2024-10-01 வரை |

02. மீளளிக்கப்படாத கட்டணத்தை (தொகைக்கு தயவு செய்து 01ஆம் அட்டவணையைப் பார்க்கவும்) செலுத்தி மற்றும் நிறுவனக் கடிதத் தலைப்பில் (மூலப்பிரதி) எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் செய்வதன் பேரில் கொழும்பு 07, பௌத்தாலோக்க மாவத்தை, 230ஆம் இலக்கத்திலுள்ள நீர்ப்பாசனத் திணைக்களம், நீர்ப்பாசன பணிப்பாளர் (ஒப்பந்தங்கள் மற்றும் பெறுகைகள்) அலுவலகத்திலிருந்து 2024-05-13ஆம் திகதி முதல் 2024-06-03ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்யலாம்.

03. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் விரும்பினால் விலைமனுக்களைப் பெற்றுக்கொள்ளும் முன் விலைமனுக்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம் என்பதுடன் மேலதிக தகவல்களை நீர்ப்பாசனப் பணிப்பாளரிடமிருந்து (ஒப்பந்தங்கள் மற்றும் பெறுகைகள்) பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 011-2582897 / 011-2582677.

04. பின்வரும் 02ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.

**அட்டவணை இல. 02**

| விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் | |
|---|---|
| **எல்லே வெவ நீர்த்தேக்கத் திட்டத்திற்கு Metal (20mm) மற்றும் Rubble (150mm – 225mm) என்பவற்றிற்கான பெறுகை** | **எல்லே வெவ நீர்த்தேக்கத் திட்டத்திற்கு மணலுக்கான பெறுகை** |
| திகதி: 2024-05-20 | திகதி: 2024-05-20 |
| நேரம்: மு.ப. 10.30 | நேரம்: மு.ப. 11.00 |
| **இடம்:** நீர்பாசனத் திணைக்களம், பிரதான வதிவிடப் பொறியியலாளர் அலுவலகம், எல்லேவெவ நீர்த்தேக்கத் திட்டம், பல்லேகம, எம்பிலிப்பிட்டிய. 047-2262310 | **இடம்:** நீர்பாசனத் திணைக்களம் பிரதான வதிவிடப் பொறியியலாளர் அலுவலகம், எல்லேவெவ நீர்த்தேக்கத் திட்டம், பல்லேகம, எம்பிலிப்பிட்டிய. 047-2262310 |

05. வழங்குநர் இயைபுடைய உள்ளூராட்சி நிறுவனங்களிடமிருந்து சட்டபூர்வமான அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும் என்பதுடன் சட்டபூர்வமான அப்புறப்படுத்தல்களுக்கான ஏற்புடைய வரிகள் மற்றும் கட்டணங்களைச் செலுத்துதல் வேண்டும்.

06. 01ஆம் அட்டவணையில் தரப்பட்டுள்ள பெறுமதிக்கான விலைமனுப் பிணைமுறியொன்று விலைமனுக்களுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். ஏதாவது விலைமனு செல்லுபடியாகும் விலைமனுப் பிணை முறி இல்லாமல் இருந்தால் எவ்வித முன்னறிவித்தலுமின்றி பதிலளிக்காதவை எனக் கருதப்பட்டு நிராகரிக்கப்படும்.

07. விலைமனு ஆவணத்தின் சகல பக்கங்களிலும் விலைமனுதாரர் சிற்றொப்பமிட்டு அவரது முத்திரை பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

08. பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்களை 2024-06-04ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னராகக் கிடைக்கும் வகையில், கொழும்பு-07, பௌத்தாலோக்க மாவத்தை 230ஆம் இலக்க நீர்ப்பாசனத் திணைக்களம், 3ஆம் மாடியிலுள்ள பிரதான நிதியிடல் அலுவலரின் 311ஆம் இலக்க அறையில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில், தலைவர், திணைக்கள பெறுகைக் குழு என முகவரியிட்டு மேற்படி முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விலைமனுக்கள் 2024-06-04ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முடிவுறுத்தப்பட்டு அதன் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

09. கடிதஉறையின் இடது பக்க மேல் மூலையில் வேலை விபரம் மற்றும் ஒப்பந்த இலக்கம் என்பவற்றை தயவு செய்து எழுதவும்.

10. சுய விருப்பத்தின் பேரில் சமுகமளிக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

**பொறி. அஜித் குணசேக்கர,**
**நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம்,**
**நீர்ப்பாசனத் திணைக்களம்,**
**இல. 230, பௌத்தாலோக்க மாவத்தை,**
**கொழும்பு-07**

2024-05-14ஆம் திகதி.


Trusted Marketplace of Classified Advertisers

Sunday Observer adz it's what you want Classified




For 15 Words Rs. 800/-
* Cost of each additional word Rs. 20/-

077 7 278 948 / 011 2 429 342/ 343 / 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk

Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291
Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361


Daily News Classifieds, the Housewives' companion

**முன்மொழிவுகளுக்கான தேவைப்பாடு இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் நிர்வாக நிபுணரொருவரை ஒப்பந்தத்தில் தெரிவு செய்தல்**

## நீடிப்பு அறிவித்தல்

**B/22/2024**

மேலேயுள்ள தலையங்கத்தின் கீழ் இந்த பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரங்கள் தொடர்பில் விலைமனுக்கோரல் ஆவணங்களை ஏற்கனவே கையேற்றுக் கொண்டவர்களிடமிருந்து பொருத்தமான ஒப்பந்த நிர்வாக நிபுணரொருவரை தெரிவு செய்வதற்கான முன்மொழிவுகளை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் இத்தால் அழைக்கின்றது.

விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதி திகதியாக நிர்ணயிக்கப்பட்ட 2024.05.13 ஆம் திகதியன்று பி.ப. 2 மணியானது 2024.05.20 ஆம் திகதியன்று பி.ப. 2 மணி வரையும் நீடிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், முன்மொழிவிற்கான செல்லுபடியாகும் காலப்பகுதியானது விலைமனுக்களை மூடும் திகதியிலிருந்து 63 நாட்களாகும். (அதாவது: 22.07.2024)

மறுசீராக்கம் செய்யப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணமானது (முன்மொழிவிற்கான தேவைப்படுத்தல்) இபெகூ இணையதளத்தில் விரைவில் காட்சிப்படுத்தப்படும்.

முன்னைய விளம்பரத்தில் பிரசுரிக்கப்பட்ட அனைத்து ஏனைய நிபந்தனைகளில் எந்தவொரு மாற்றமுமில்லை.

**தலைவர்,**
**திணைக்கள உசாத்துணையாளர்கள் பெறுகைக் குழு,**
**முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்) மே/பா,**
**பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள் செயற்பாடு,**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்,**
**1 ஆம் மாடி, இல.: 609, டனிஸ்டர் த சில்வா மாவத்தை, கொழும்பு-09.**

---

**இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு**
**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

## விலைமனுக்கோரல் (IFB)

### ஏழு மாகாணங்களுக்கான BITUMINOUS EMULSIONS (CSS-1, CRS-1) வழங்கல் மற்றும் விநியோகித்தல்

| இல. | விபரம் |
|---|---|
| 01, 02, 03, 04, 05, 06, 07 | மத்திய, தெண், சப்ரகமுவ, ஊவா, வடமேல், வட மத்திய மற்றும் வட மாகாணங்களுக்கு **Bituminous Emulsions** வழங்கல் மற்றும் விநியோகித்தல். |

ஏழு மாகாணங்களுக்கான BITUMINOUS EMULSIONS (CSS-1, CRS-1) வழங்கல் மற்றும் விநியோகிப்பதற்கான தேசிய போட்டி ஏல நடைமுறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள மனுதாரர்கள் **2024.05.14** ஆம் திகதி முதல் **2024.06.06** ஆம் திகதி வரை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் இணையத்தளத்தை **www.rda.gov.lk** பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

---

## திருத்தம்

நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவைத் திணைக்களம் (வடமேல் மாகாண சபை) 2024.05.07ம் திகதி பிரசுரிக்கப்பட்ட மேற்படி பெறுகைக்கான கேள்வி அழைப்பிற்கு (IFB) கீழ்க்காணும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தயவுடன் அறிவித்துக் கொள்கிறோம்.

- 05ம் பந்தியில் "கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் 2024 மே 28 15.00 மணிக்கு முடிவடையும்" என்பதற்குப் பதிலாக" கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் 2024 மே 29 11.00 மணிக்கு முடிவடையும் என திருத்தப்படல் வேண்டும்.
- அட்டவணையில் குறிப்பிடப்படும் கேள்விகள் குறியீட்டு இலக்கங்களுடன் சம்பந்தப்பட்ட CIDA தரம் (கட்டிடங்கள்) திருத்தப்படல் வேளை என்பதை தயவுடன் அறிவித்துக் கொள்கிறோம்.

| கேள்வி குறியீட்டு இலக்கம் | தேவைப்படும் CIDA தரம் (கட்டிடங்கள்) |
|---|---|
| NWP/DPCS/ACC/05/CON/01/RE/2024 | C8 - C7 |
| NWP/DPCS/ACC/05/CON/19/RE/2024 | C7 - C6 |
| NWP/DPCS/ACC/05/CON/241RE/2024 | C7 - C6 |

**தலைவர், திணைக்கள பெறுகைக் குழு,**
**நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைத் திணைக்களம் (வடமேல்)**
**குருநாகல் .**
**2024.05.08**

---

Repeat Your Ad For Better Offers

---

## வாகனங்கள் விற்பனைக்கு

| வாகன இல. | வகை | மாதிரி | வருடம் |
|---|---|---|---|
| **கார்** | | | |
| CAG -7XXX | SUZUKI | ALTO 800 | 2015 |
| **கெப்** | | | |
| DAC -5XXX | MAHINDRA | BMT PLUS MDI | 2015 |
| **வேன்** | | | |
| 058 -8XXX | NISSAN | LARGO | 1992 |
| **லொறி** | | | |
| 040 -5XXX | ISUZU | ELF | 1980 |
| LJ -4XXX | TATA | LPT2515 | 2010 |
| PR -4XXX | TATA | ACE | 2011 |
| PR -7XXX | MAHINDRA | MAXXIMO | 2011 |
| DAC -1XXX | TATA | ACE EX 2 | 2015 |
| **டிப்பர்** | | | |
| LL -4XXX | LAKNKA ASHOK LEYLAND | TIPPER 1618 | 2013 |
| **முச்சக்கர வண்டிகள்** | | | |
| HM -2XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2003 |
| JJ -3XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2004 |
| QB -7XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2005 |
| QB -7XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2005 |
| QC -6XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2005 |
| QD -1XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2005 |
| QG -3XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QI -2XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QI -5XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QR -6XXX | BAJAJ | AUTO AR4S | 2008 |
| YC -8XXX | BAJAJ | AR4S-UG | 2010 |
| QX -2XXX | BAJAJ | AR4S-UG | 2010 |
| AAZ -9XXX | BAJAJ | RE | 2015 |

வாகன பரிசீலித்தல்களுக்கு:
**மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ**
வாகன முற்றம் - இல.176, வாவி வீதி, மஹரகம.
தொ.பேசி : 0112 088 505

### வாகன பரிசீலித்தல்களுக்கான திகதிகள்

மேற்குறிப்பிட்ட விலாசத்தில் 2024 மே 14ஆம், 15ஆம், 16ஆம் மற்றும் 17ஆம் திகதிகளில் மு.ப.9.00 முதல் பி.ப.5.00 வரை பரிசீலிக்க முடியும். (கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படுவது 2024 மே 17ஆம் திகதி பி.ப.5.00 மணியுடன் நிறைவுபெறும்)

மீளப் பெற முடியாத கட்டணமான ரூ.200/-ஐ செலுத்தி கேள்வி படிவங்களை மேற்குறித்த விலாசத்தில் மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ வாகன முற்றத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். வெற்றிகரமான கேள்விதாரர் தொலைபேசியூடாக அறிவிக்கப்படுவதுடன் அதனுடன் தொடர்பான வாகனம் அறிவிக்கப்பட்டதிலிருந்து 7 நாட்களுக்குள் அப்புறப்படுத்தப்பட வேண்டும். கேள்வியிலிருந்து எந்தவொரு காரணத்தையும் கூறாமல் எந்தவொரு வாகனத்தையும் விலக்கிக் கொள்ள கம்பனிக்கு பூரண உரிமையுண்டு. அத்தோடு வெற்றிகரமான கேள்விதாரர் வாகனத்தை அதன் தற்போதைய நிலையிலேயே பொறுப்பேற்க வேண்டியதோடு, அதனுடன் தொடர்பான அரச வரி மற்றும் வாகன வருமான உத்தரவுப் பத்திரம் போன்றவற்றின் நிலுவைக் கட்டணங்கள் இருப்பின் அவற்றையும் கேள்விதாரரே பொறுப்பேற்க வேண்டும்.

**இக் கேள்விகள் தொடர்பான மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ இன் முடிவுகளே இறுதியானதாகும்.**

**மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சி**

Mercantile Investments and Finance PLC

தலைமை அலுவலகம்
236, காலி வீதி, கொழும்பு - 03
தொ.பேசி: 2343720 - 7 நீட்சி: 210

தொடர்பு:
**ஜானக்க - 0711 624 559 / தினேஷ் - 0718 751 995**

www.skillsads.com

---

## மக்கள் வங்கி

### பிராந்திய தலைமைக் காரியாலயம், நுவரெலியா

**மீட்கப்படாத தங்க நகைகளின் ஏலவிற்பனை**

மக்கள் வங்கி நுவரெலியா பிராந்திய தலைமைக் காரியாலயத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள் / சேவை மையங்களில் 28.02.2023 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட) 14.06.2024 திகதி வரை மீட்கப்படாத / புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ள திகதிகளில் மற்றும் இடங்களில் காலை 9.00 மணி தொடக்கம் ஏலத்தில் விற்கப்படும்.

**ஏலவிற்பனை திகதி - 15.06.2024**

| ஏலவிற்பனை நடைபெறும் இடம் | நுவரெலியா கிளை |
|---|---|
| **கிளைகள்** | ஹங்குராங்கெத்த, இராகலை, தலவாக்கலை, நில்தண்டாகின்ன, நுவரெலியா, பூண்டுலோயா, மஸ்கெலியா, ஹட்டன், உடபுசல்லாவ, கினிகத்தேன, ரிகில்லகஸ்கட, பொகவந்தலாவ |
| **சேவை நிலையங்கள்** | ஹேவாஹட்ட, பதியபலல்ல, அதிகாரிகம, இராகலை, ஆக்கரபத்தன, வலப்பனை, கந்தபொல, நானுஓயா, ஹபுகஸ்தலாவ, தவலந்தென்ன, அப்கொட், கொட்டகலை, டிக்கோயா, வட்டவளை |

இந்த ஏலவிற்பனையை அறிவிப்பு இன்றி இரத்துச் செய்ய, ஏலவிற்பனை செய்யும் இடத்தை மாற்ற, ஒன்றிணைத்துச் செயற்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

**பிராந்திய முகாமையாளர்,**
**பிராந்திய தலைமைக் காரியாலயம்,**
**நுவரெலியா.**
**052-2222555**

www.peoplesbank.lk 1961 PEOPLE'S BANK Pride of the Nation

---

## மக்கள் வங்கி

### குருநாகல் பிராந்தியம்

**மீட்கப்படாத அடகு நகைகளை ஏலத்தில் விற்பனை செய்தல்**

மக்கள் வங்கியின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள் மற்றும் சேவை நிலையங்களில் 2023.02.28ஆம் திகதி வரை அடகு வைக்கப்பட்டு, 2024.06.14ஆம் திகதி வரை மீட்கப்படாத தங்க நகைகள் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் மற்றும் இடங்களில் மு.ப.9.00 மணிக்கு ஆரம்பித்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.

**ஏல விற்பனை நடைபெறும் திகதி 2024.06.15 மற்றும் 2024.06.16**

| ஏலவிற்பனை நடைபெறும் இடம் | குருநாகல் கிளை வளாகம் | வாரியபொல கிளை வளாகம் |
|---|---|---|
| **கிளைகள்** | குருநாகல், பொல்கஹவெல, அளவ்வ, கிரிஉள்ள, ரிதீகம, மாவத்தகம, இப்பாகமுவ, மளியதேவ, பொத்துஹெர, எதுகல்புர, மெல்சிறிபுர, மாகந்துர | குளியாபிட்டிய, மஹவ, நாரம்மல, நிகவெரட்டிய, ஹெட்டிபொல, வாரியபொல, பிங்கிரிய, கல்கமுவ, கொபெய்கனே, பொல்பெதிகம |
| **சேவை நிலையங்கள்** | வைத்தியசாலை அலகு, நகர சபை அலகு, கொடவெல, போயவலான, பானகமுவ, தொடம்கஸ்லந்த, பரகஹதெனிய, கும்புக்கெடே, பிதுறுவெல்ல, மலியதேவ, மத்தவ, ஹிரிபிட்டிய, மல்லவபிட்டிய, தம்பதெனிய, பம்மன்ன, பன்னல | தும்மலசூரிய, பீஹல்பொல, கந்தானேகெதர, உடுபத்தாவ, நாகொல்லாகம, கட்டுபொத, கிரில்ல, நிகவெரட்டிய, ரஸ்நாயகபுர, பண்டாரகொஸ்வத்த, மாஸ்பொத, வீரபொகுன, அம்பன்பொல, பொரளுவெவ. |

மேலே குறிப்பிடப்பட்டுள்ளபடி நடத்தப்படவிருக்கும் இந்த ஏலவிற்பனையை மீள் அறிவித்தல் இன்றி இரத்துச் செய்வதற்கு, ஒத்திவைப்பதற்கு அல்லது ஒருங்கிணைத்து நடத்துவதற்கு வங்கிக்கு உரிமை உண்டு.

**பிராந்திய முகாமையாளர்,**
**மக்கள் வங்கி, பிராந்திய தலைமை அலுவலகம்,**
**இல. 03, வத்ஹிமி ரோட், குருநாகல்.**

www.peoplesbank.lk 1961 PEOPLE'S BANK Pride of the Nation

---

## மக்கள் வங்கி

### காலி பிராந்தியம்

**மீட்கப்படாத அடகு நகைகளை ஏலத்தில் விற்பனை செய்தல்**

மக்கள் வங்கியின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள் மற்றும் சேவை நிலையங்கள் என்பவற்றில் 2023.02.28ஆம் திகதி வரை (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட அடகு வைக்கப்பட்டு). 2024.06.13ஆம் திகதி கொடுக்கல் வாங்கல் முடிவடையும் வரை மீட்கப்படாத தங்க நகைகள் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் மற்றும் இடத்தில் மு.ப. 9.00 மணிக்கு ஆரம்பித்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.

**ஏலவிற்பனை நடைபெறும் திகதி 2024.06.15**

| ஏலவிற்பனை நடைபெறும் இடம் | காலி கோட்டை கிளை |
|---|---|
| **கிளை** | காலி கோட்டை, அம்பலன்கொட, எல்பிட்டிய, பத்தேகம, உடுகம, ஹிக்கடுவ, பலபிட்டிய, காலி மகா வீதி, அஹங்கம, ஊரமஸ்பங்ஹந்திய, பட்டபொல, இமதுவ, தல்கஸ்வல, வதுரம்ப, கொக்கல, கராபிட்டிய. |
| **சேவை நிலையம்** | வஞ்சாவல, கிங்தொட்ட, பெட்டிகலவத்த, அம்பலன்கொட மகா வீதி. வதுகெதர, கரந்தெனிய பிட்டிகல, குருந்துகஹஹெதெக்ம, நெளுவ, ரத்கம, கோனாபீனுவல, குமாரகந்த, கொஸ்கொட, கழுவெல்ல, பின்னதூவ, மிடியாகொட, யக்கலமுல்ல, போகஹகொட, நாகொட |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள படி நடத்தப்படவிருக்கும் இந்த ஏலவிற்பனையை மீள அறிவிக்காமல் வங்கியின் தற்றுணிபின் படி இரத்துச் செய்வதற்கு, ஒத்திவைப்பதற்கு அல்லது ஒருங்கிணைத்து நடத்துவதற்கு வங்கிக்கு உரிமை உண்டு.

பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, பிராந்திய தலைமை அலுவலகம், இலக்கம் 22, கீழ் டிக்ஷன் வீதி, காலி.

**தொலைபேசி இலக்கம் 091-2223563, 091-2223564**

www.peoplesbank.lk 1961 PEOPLE'S BANK Pride of the Nation

---

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

### கல்வி அமைச்சு

### தொழில்நுட்ப புத்தாக்கல் ஆய்வுகூடத்திற்கான உபகரணங்களின் பெறுகை (வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுதல்)

**விலைகோரல் இல. ED/07/101/10/2024/CF/SESIP/G-01**

1. சிறந்த முன் அனுபவத்தைக் கொண்டுள்ள தகைமை மற்றும் தகுதி வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து நாடெங்கிலும் அமைந்துள்ள நிலையங்களுக்கு பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்ப ஆய்வுகூட உபகரணங்களின் பெறுகையின் பொருட்டு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை கல்வி அமைச்சின் செயலாளரின் சார்பில் அமைச்சுப் பெறுகைக் குழுவின் தலைவர் இப்போது அழைக்கிறார். முழுமையான விபரங்கள் விலைமனு ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. எதிர்பார்க்கப்படும் விநியோகக் காலம் ஏற்றுக்கொள்ளும் கடிதத் திகதியிலிருந்து 20 வாரங்களாகும். விலைமனுதாரர்கள் பின்வரும் பொருட்களுக்கு விலைகோரல் வேண்டும் என்பதுடன் சகல விலைக்கோரல்களுடனும் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள வகையில் விலைமனுப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| பொருட்களின் விபரம் | விலைமனுப் பிணை முறித் தொகை ரூபா |
|---|---|
| தொழில்நுட்ப புத்தாக்கல் ஆய்வுகூடத்திற்கான உபகரணங்கள் | **1,250,000.00** |

விலைமனுதாரர்கள் விலைக்கோரலுடன் தரப்பட்டுள்ள மாதிரிக்கு அமைவாக விலைமனுப் பிணையொன்றை வழங்குதல் வேண்டும்.

2. விலைக்கோரல்கள் தேசிய போட்டி விலைகோரல் (NCB) மூலம் நடைமுறைப்படுத்தப்படும்.
3. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிக விபரங்களை 'இசுருபாய' கல்வி அமைச்சின் 5ம் மாடியிலுள்ள பெறுகைப் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 011-2785573 அல்லது 0112785141 – 50 நீடிப்பு 1530) மற்றும் 2024 ஜுன் 03ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தில் இலவசமாக விலைமனுக்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
4. மேற்குறிப்பிடப்பட்ட பெறுகைக்காக கல்வி அமைச்சின் 5ம் மாடி, பெறுகைப் பிரிவில் 2024 மே 22ஆம் திகதி பி.ப. 12.30 மணிக்கு விலைகோரலுக்கு முன்னரான கூட்டம் இடம்பெறும்.
5. ஆவணத்தின் பொருட்டு மீளளிக்கப்படாத 15,000.00 ரூபா கட்டணத்தை செலுத்துவதன் பேரில் 2024 ஜுன் 03ஆம் திகதி வரையில் பி.ப. 3.00 மணி அல்லது அதற்கு முன்னர் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் செய்வதன் மூலம் பெறுகைப் பிரிவிலிருந்து ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். (கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்தில் மட்டுமே செலுத்துதல் வேண்டும்)
6. விலைமனுக்களை 2024 ஜுன் 04ஆம் திகதி மு.ப. 11.30 மணி அல்லது அதற்கு முன் பெறுகைப் பிரிவு, 5ம் மாடி, கல்வி அமைச்சு, "இசுருபாய", பத்தரமுல்ல எனும் முகவரிக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும். அதன் பின்னர் பின்வரும் முகவரிக்கு தாமாக வருகை தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் மூடப்பட்டு உடன் திறக்கப்படும்.
7. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''தொழில்நுட்ப புத்தாக்கல் ஆய்வுகூடத்திற்கான உபகரணங்களின் பெறுகை - ED/07/101/10/2024/CF/SESIP/G-01'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

**செயலாளர்,**
**கல்வி அமைச்சு,**
**''இசுருபாய'',**
**பத்தரமுல்ல.**

---

**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு**
**வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சு**
**வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்**

## கேள்வி அழைப்பு

### விசேட அனுமதிப் பத்திரத்துடன் இறக்குமதி செய்ய வேண்டிய மருந்துகளை கொள்வனவு செய்தல்

WL/2/17/03/2024

வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரால் மருந்துகளை கொள்வனவு செய்தற்காக தகைமையுள்ள மற்றும் அதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| உருப்படி | கேள்விப் பிணை (ரூ) | மீளளிக்கப்படாத கேள்வி கட்டணம் (ரூ) |
|---|---|---|
| Lot 1 - Analgesics & Anti-inflamatory | 3,935.00 | 1,000.00 |
| Lot 2 - Anesthetics (& Sedatives) | 46,270.00 | 1,800.00 |
| Lot 3 - Anthelmintics | 2,850.00 | 1,000.00 |
| Lot 4 - Antibiotics | 3,760.00 | 1,500.00 |
| Lot 5 - Antiseptics & Disinfectants | 4,250.00 | 1,000.00 |
| Lot 6 - Emergency Medication | 94,650.00 | 3,300.00 |
| Lot 7 - Medical & Lab accessories | 7,180.00 | 1,000.00 |
| Lot 8 - Nutrient additives | 1,215.00 | 1,000.00 |
| Lot 9 - Parental fluids | 3,120.00 | 1,000.00 |
| Lot 10 - Sympotomatic therapy | 350.00 | 1,000.00 |
| Lot 11 - Topical treatments | 14,450.00 | 1,000.00 |

01. ஒரு கேள்விதாரருக்கு ஒரு உருப்படி அல்லது பலவற்றிற்கு கேள்விகளை அனுப்பி வைக்கலாம்.
02. கேள்விகோரல் தேசிய போட்டி கேள்விகோரலின் கீழ் நடைபெறும்.
03. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு கேள்வி ஆவணங்களை 2024.05.14 முதல் அரச வேலை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.00 வரை பத்தரமுல்ல, வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் கணக்குப் பிரிவில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
04. கேள்வி ஆவணங்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.00, 2024.06.12 வரை வனசீவராசிகள் பணிப்பாளர் நாயகம், வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் பெயரில் மேற்கொள்ளப்படும் எழுத்துமூல வேண்டுதல் மேற்படி மீளளிக்கப்படாத வைப்புத் தொகையை திணைக்களத்தின் காசாளரிடம் செலுத்திய பின்பு பெற்றுக்கொள்ளலாம்.
05. கேள்வி ஆவணங்களுடன் கேள்விப் பிணைமுறியொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் அது கேள்வி ஆவணங்களில் உள்ளடக்கப்படும் மாதிரியின் பிரகாரம் அரச அங்கீகாரம் பெற்ற வர்த்தக வங்கி மூலம் அல்லது வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் காசாளரிடம் 2024.06.13, பி.ப. 2.00 இற்கு முன்பு காசு செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். கேள்வி ஆவணங்களுடன் கேள்விப் பிணையை சமர்ப்பித்திராத கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
06. கேள்விப் பிணைமுறி கேள்வி திறக்கப்படும் தினம் முதல் குறைந்தபட்சம் 90 நாள் காலத்திற்கு செல்லுபடியாதல் வேண்டும்.
07. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்கள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி வேறுவேறாக கடித உறைகளில் இட்டு பொறியிட்டு மீண்டும் ஒரு உறையில் இட்டு பொறியிட்டு உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறித்த கேள்வியின் பெயர் மற்றும் இலக்கத்தை குறிப்பிட்டு 2024.06.13 பி.ப. 2.00 இற்கு முன்பு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அல்லது வன சீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் நிதிப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்வி உள்ளிடும் பெட்டியில் உள்ளிடுவதுடன், தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். கேள்வி திறக்கப்படுதல் அன்றே 2.00 இற்கு இடம்பெறுவதுடன், அதற்கு உங்களுக்கு அல்லது உங்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொவருக்கு சமுகமளிக்கலாம்.
08. கேள்விப் பத்திரங்கள் பற்றிய மேலதிக விபரங்கள் 011-2871537 தொ.பே. இலக்கத்திற்கு திணைக்கள உதவிப் பணிப்பாளர் (நிதி)ஐ அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் பற்றிய தீர்மானம் எடுத்தல் உரிமை திணைக்கள பெறுகைக் குழுவிற்கு உரித்தாவதுடன், இவ் அறிவித்தலில் அல்லது கேள்வி மாதிரிகளில் குறிப்பிடப்படும் அல்லது குறிப்பிடப்படாத இப் பெறுகை சேவையுடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் விடயங்கள் பற்றிய தீர்மானம் எடுக்கும் அதிகாரம் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு உரியது.
09. கேள்வி பத்திரங்களை தயாரித்தல் சம்பந்தமாக ஏற்படும் எந்த செலவுகளுக்கும் தலைவர், திணைக்கள பெறுகைக் குழுவினால் பொறுப்புக் கூறப்படமாட்டாது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம்,**
**இல. 811/ஏ, ஜயந்திபுர வீதி, பத்தரமுல்ல**

---


Sunday Observer ADZ it's what you want — தினகரன் வாரமஞ்சரி

**Hand over your Classified Advertisements to Our nearest Branch Office**

Promotional Rates for a Classified Advertisements (Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| Rs. 800/- (Except Thinakaran Varamanjari) | Rs. 1,000/- (Except Thinakaran Varamanjari) | Rs. 1,330/- |

Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910
Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291 / Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335
Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 2225361 FAX : 021 22 25 361

# வியாஸ்காந்தின் தேர்வு தொடர்பில் இலங்கை தேர்வுக் குழு விளக்கம்



வியஜயகாந்த் வியாஸ்காந்த் அண்மைக் காலத்தில் சிறந்த முறையில் பந்து வீசுவதாகவும் எதிர்காலத்தில் அவரிடம் இருந்து பயன்பெற எதிர்பார்ப்பதாகவும் இலங்கை கிரிக்கெட் தேர்வுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்கா மற்றும் மேற்கிந்திய தீவுகளில் நடைபெறவுள்ள டி20 உலகக் கிண்ண போட்டிக்கான அணித் தேர்வு குறித்து விளக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று (13) இலங்கை கிரிக்கெட் சபை தலைமையகத்தில் நடைபெற்றது.

இதில் உபுல் தரங்க தலைமையிலான இலங்கை தேர்வுக் குழு உறுப்பினர்கள் பங்கேற்றிருந்தனர்.

டி20 உலகக் கிண்ணத்திற்கான 15 பேர் கொண்ட இலங்கை குழாத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 22 வயதான வியாஸ்காந்த் இடம் பெறாதபோதும் அணியுடன் செல்லும் மேலதிக வீரர்களில் ஒருவராக சேர்க்கப்பட்டுள்ளார்.



வியாஸ்காந்த் தொடர்பில் இலங்கை தேர்வுக் குழுவில் இடம்பெற்றிருக்கும் இரு சுழற் பந்து வீச்சாளர்களான தில்ருவன் பெரேரா மற்றும் அஜந்த மெண்டி விளக்கம் அளித்தனர்.

இதில் பேசிய தில்ருவன் பெரேரா, 'வியாஸ் மற்ற வீரர்களை விட உயரமான சுழற்பந்து வீச்சாளர். பந்துவீசும்போது அவரது கையும் உயரமாக செல்லும்.

எனவே மேற்கிந்திய தீவுகளின் மந்தமான ஆடுகளத்தில் அவரது பந்துவீச்சு பொருத்துமாக இருக்கும் என்று நம்புகிறோம். அங்கு அவரது வேகமான பந்துவீச்சு முறையில் பயன் பெற முடியுமாக இருக்கும்' என்றார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அஜந்த மெண்டிஸ், 'அண்மைய போட்டிகளைப் பார்த்தால் வியாஸ்காந்த் சிறந்த முறையில் பந்து வீசி இருக்கிறார். வீரர்கள் சிறந்த முறையில் செயற்படுவது தொடர்பில் நாம் முக்கியமாக அவதானம் செலுத்த வேண்டும்.

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் அவர் ஆடாதபோதும் லீக் கிரிக்கெட்டில் அவர் சிறப்பாக செயற்பட்டு வருகிறார். அதனால் அவருக்கு எந்த ஒரு சவாலையும் எதிர்கொள்ள முடியும் என்று நாம் நினைக்கிறோம். அதனாலேயே வியாஸ்காந்தை நாம் முன்னிலைப்படுத்த நினைத்தோம்' என்று குறிப்பிட்டார்.

டி20 உலகக் கிண்ணப் போட்டி எதிர்வரும் ஜூன் 1 தொடக்கம் 29 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இதற்கான இலங்கை அணி இன்று (14) மாலை அமெரிக்காவை நோக்கி புறப்பட்டுச் செல்லவுள்ளது. இலங்கை அணியுடன் தேர்வுக் குழு தலைவர் உபுல் தரங்கவும் பயணிக்கவுள்ளார்.

# கண்டி இறுதிக்கு தகுதி

*பிரின்ஸ் குணசேகர*



ஸ்ரீ லங்கா ஸ்போட்ஸ் குருப் தனியார் நிறுவனம் ஏற்பாடு செய்துள்ள 'லங்கா கால்பந்து கிண்ண' தொடரின் இறுதிப் போட்டியில் ஆட கண்டி கால்பந்து அணி தகுதி பெற்றுள்ளது.

கண்டி மற்றும் யாழ்ப்பாண அணிகளுக்கு இடையில் கடந்த சனிக்கிழமை (11) கொழும்பு சிட்டி லீக் மைதானத்தில் நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் கண்டி முழு ஆதிக்கம் செலுத்தியது. இதில் முதல் பாதியில் 3–0 என முன்னிலை பெற்ற கண்டி தொடர்ந்து இரண்டாவது பாதியில் இரண்டு கோல்களை புகுத்தி 5–0 என வெற்றியீட்டியது.

எட்டு அணிகளின் பங்கேற்போடு ஆரம்பமான இந்தத் தொடரில் சம்பியன் அணிக்கு ஒரு மில்லியன் ரூபாவும் இரண்டாம் இடம் பெறும் அணிக்கு 5 இலட்சம் ரூபாவும் வழங்கப்படும். இந்தத் தொடர் கொழும்பு கால்பந்து கழக நிறுவனர் மற்றும் எக்ஸ்போ லங்கா முகாமைத்துவ பணிப்பாளர் சாயிப் யூசுப்பினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

# கம்பளை சர்வதேச பாடசாலை சம்பியன்

நெஸ்ட்லே மைலோ அனுசரணையில் இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான கால்பந்து தொடரின் 12 வயதுக்கு உட்பட ஆண்கள் பிரிவில் கம்பளை சர்வதேச பாடசாலை சம்பியனானது.







இப்போட்டி கொழும்பு குதிரைப் பந்தைய விளையாட்டுத்திடலில் கடந்த சனிக்கிழமை (11) நடைபெற்றது.

இறுதிப்போட்டியில் அநுராதபுரம் புனித ஜோசப் வித்தியாலய அணியை எதிர்கொண்ட கம்பளை சர்வதேச பாடசலை பெனால்டி முறையில் 5–4 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

# ஆப்கான் ஏ அணி போராட்டம்



இலங்கை ஏ அணிக்கு எதிரான ஒரே ஒரு உத்தியோகபூர்வமற்ற டெஸ்ட் போட்டியில் இரண்டாவது இன்னிங்ஸுக்கு பலோ ஒன் செய்திருக்கும் ஆப்கான் ஏ அணி இன்னிங்ஸ் தோல்வி ஒன்றை தவிர்க்க போராடி வருகிறது.

கொழும்பு, பீ. சரா ஓவல் மைதானத்தில் நடைபெற்று வரும் நான்கு நாட்கள் கொண்ட டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் 237 ஓட்டங்களால் பின்தங்கிய நிலையில் மூன்றாவது நாளான நேற்று தனது இரண்டாவது இன்னிங்ஸுக்கு பலோ ஒன் செய்த ஆப்கான் ஏ ஆட்ட நேர முடிவில் 108 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளை இழந்துள்ளது. அந்த அணி இன்னிங்ஸ் தோல்வியை தவிர்க்க 8 விக்கெட்டுகள் கைவசம் இருக்க மேலும் 129 ஓட்டங்களை பெற வேண்டும்.

முன்னதான இலங்கை ஏ தனது முதல் இன்னிங்ஸில் 435 ஓட்டங்களை பெற்ற நிலையில் ஆப்கான் ஏ முதல் இன்னிங்ஸில் 198 ஓட்டங்களுக்கு சுருண்டது.

வனுஜ சஹன் ஐந்து விக்கெட்டுகளை வீழ்த்தியதோடு நிஷான் பீரிஸ் 3 விக்கெட்டுகளை பதம் பார்த்தார்.

இன்று போட்டியின் கடைசி நாளாகும்.

# இந்தோனேசியாவில் திடீர் வெள்ளத்தில் 41 பேர் பலி



இந்தோனேசியாவின் சுமத்ரா தீவில் திடீர் வெள்ளம் மற்றும் குளிர்ந்த எரிமலை குழம்புகள் அடித்து வந்ததில் குறைந்தது 41 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை பல மணி நேரம் நீடித்த கனத்த மழையை அடுத்து மராப்பி மலையில் இருந்து வெள்ளத்துடன் எரிமலைச் சாம்பல் மற்றும் பாறைகள் அடித்து வரப்பட்டன.

இரு மாவட்டங்களில் நிலச்சரிவு ஏற்பட்டதோடு 100க்கும் அதிகமான வீடுகள், பள்ளிவாசல்கள் மற்றும் பொது வசதிகள் சேதமடைந்துள்ளன. பதினேழு பேர் தொடர்ந்து காணாமல்போன நிலையில் உள்ளனர்.

பொலிஸார், படையினர் மற்றும் உள்ளூர் மீட்புக் குழுக்கள் என சுமார் 400 பேர் காணாமல்போனோரை தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

மாரப்பி எரிமலை கடந்த டிசம்பரில் வெடித்தபோது 20க்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் நீக்கம்



ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் தனது நீண்ட கால நண்பரான செர்கை ஷொய்குவை பாதுகாப்பு அமைச்சு பதவியில் இருந்து நீக்கியுள்ளார்.

கடந்த 2012 தொடக்கம் அந்தப் பதவியில் இருந்து வந்த ஷொய்கு, ரஷ்ய பாதுகாப்பு கௌன்சிலின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்நிலையில் பிரதிப் பிரதமர் அன்ட்ரோ பெலோசு புதிய பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்படவிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

புட்டின் ரஷ்ய ஜனாதிபதியாக மீண்டும் பதவியேற்றுள்ளார். அவர் புதிய அமைச்சர்களை நியமனம் செய்வது அரசமைப்புச் சட்டத்தின் கீழ் கட்டாயமாகும். எனினும் உக்ரைனுடனான போருக்கு மத்தியிலேயே பாதுகாப்பு அமைச்சர் மாற்றப்பட்டுள்ளார்.

அவர் செய்யும் அமைச்சரவை மாற்றங்களுக்கு பாராளுமன்றம் ஒப்புதல் வழங்க வேண்டும். அதற்கான வாக்களிப்பு இன்று (14) நடைபெறும்.

# எவரெஸ்ட் ஏற்றத்தில் இருவர் புது சாதனை



எவரெஸ்ட் மலையை அதிகம் ஏறி சொந்த சாதனையை முறியடித்துள்ளார் பிரிட்டனைச் சேர்ந்த கென்ட்டன் கூல் எனும் 50 வயது ஆடவர். அவர் 18ஆவது முறையாக 8,849 மீற்றர் உயரத்தை அடைந்துள்ளார்.

அவரைப் போலவே மலையேறிகளுக்கு உதவும் நேபாளத்தைச் சேர்ந்த வழிகாட்டியான 54 வயது கமி ரிதா என்பவரும் 29ஆவது முறையாக அந்த உயரத்தைத் தொட்டு சொந்தச் சாதனையை முறியடித்துள்ளார்.

அவர்கள் இருவரும் தனித்தனியாகக் குழுவைக் அழைத்துக் கொண்டு மலையேறி உள்ளனர்.

எவரெஸ்ட் மலையேற்றப் பருவம் ஆரம்பிக்கப்பட்டிருப்பதோடு எதிர்வரும் வரங்களில் நூற்றுக்கணக்கான மலையேறிகள் மலையேற்றத்தில் ஈடுபடுவார்கள் என்று நம்பப்படுகிறது.

கடந்த ஆண்டில் 600க்கும் அதிகமானவர்கள் மலையுச்சியை தொட்டபோதும் அந்த ஆண்டில் 18 பேர் மலையேற்றத்தின் போது உயிரிழந்தனர்.

## சர்வதேச செய்திகள்

# காசாவின் ரபாவுடன் ஜபலியா முகாமிலும் தாக்குதலை தீவிரப்படுத்தியது இஸ்ரேல்

## போருக்கு பின்னரான 'அராஜகம்' குறித்து அமெரிக்கா எச்சரிக்கை

இஸ்ரேலிய டாங்கிகள் கடும் வான் மற்றும் தரைவழி தாக்குதல்களுக்கு மத்தியில் வடக்கு காசாவின் ஜபலியா நகருக்கு முன்னேறி வருவதோடு, தெற்கில் ரபா புறநகர் பகுதியில் உள்ள பிரதான நெடுஞ்சாலை ஒன்றை கடந்து இஸ்ரேலிய டாங்கிகள் மற்றும் துருப்புகள் முன்னேறுவதாக குடியிருப்பாளர்கள் மற்றும் பலஸ்தீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

காசாவில் இருக்கும் எட்டு அகதி முகாம்களில் மிகப்பெரியதான ஜபலியா அகதி முகாமின் மையப் பகுதியை நோக்கி டாங்கிகள் முன்னேற முயன்று வருகின்றன. செல்குண்டுகள் முகாமின் மையப்பகுதியில் விழுந்து வருவதாகவும் வான் தாக்குதல்களில் வீடுகள் அழிக்கப்பட்டு வருவதாகவும் குடியிருப்பாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அந்த முகாமில் கடந்த ஞாயிறு இரவு தொடக்கம் இடம்பெற்று வரும் உக்கிர தாக்குதல்களில் பலர் கொல்லப்பட்டிருப்பதாக மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இஸ்ரேல் தாக்குதல்கள் தீவிரமாக இருப்பதால் அங்கு மருத்துவ உதவிகளை அனுப்ப முடியாமல் இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஹமாஸை தடுப்பதற்காகவே ஜபலியாவில் படை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருப்பதாக இஸ்ரேலிய இராணுவம் குறிப்பிட்டுள்ளது. 'அவர்கள் வீடுகளை இழந்த மக்கள் வசிக்கும் பாடசாலைகளுக்கு அருகில் மற்றும் எல்லா இடங்களிலும் குண்டு வீசுகிறார்கள்' என்று 45 வயதான அங்குள்ள குடியிப்பாளர் ஒருவர் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார். 'போர் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருப்பதையே ஜபலியாவில் காண முடிகிறது' என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஜபலியாவில் இருந்து ஹமாஸ் தோற்கடிக்கப்பட்டதாக இஸ்ரேல் பல வாரங்களுக்கு முன்னர் அறிவித்த நிலையிலேயே அங்கு மீண்டும் படை நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மறுபுறம் எகிப்து எல்லையை ஒட்டி இருக்கும் ரபாவில் வான் மற்றும் தரைவழி தாக்குதலை இஸ்ரேல் தீவிரப்படுத்தியுள்ளது. ரபாவின் பிரேசில் பகுதியில் இஸ்ரேல் நேற்று நடத்திய வான் தாக்குதலில் ஒரு சிறுமி உட்பட நால்வர் கொல்லப்பட்டதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டது.

குண்டு வீசப்பட்ட கட்டடம் ஒன்றை அடைய முயன்ற மீட்புப் பணியாளர்கள் மீது இஸ்ரேல் அளில்லா விமானம் மூலம் தாக்குதல் நடத்தியதாக பலஸ்தீன சிவில் பாதுகாப்பு அமைப்பு முன்னதாக குறிப்பிட்டது.

ரபாவின் கிழக்கு பகுதியை பிரிக்கும் சலாஹுத்தீன் வீதியை இஸ்ரேலிய டாங்கிகள் துண்டித்திருக்கும் அதேநேரம் ரபாவின் கிழக்குப்பகுதி வெறிச்சோடி இருப்பதாக குடியிருப்பாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். இந்நிலையில் ரபாவின் தெற்கு பகுதியில் இஸ்ரேலிய படை மற்றும் டாங்கிகள் நிலைகொண்டிருக்கும் நிலையில் அங்கு உக்கிர மோதல் வெடித்திருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இஸ்ரேலின் ரபா ஊடுருவல் இன்றும் அமெரிக்காவுக்கு ஏற்றுக்கொள்ளும் அளவில் இருப்பதாக இஸ்ரேலுக்கான அமெரிக்க தூதுவர் ஜான் லியு குறிப்பிட்டுள்ளார். அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் சி.என்.என். தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில், இஸ்ரேல் ரபாவுக்குள் நுழைந்தால் அதற்கு வழங்கும் ஆயுதங்களை நிறுத்தி வைப்பதாக எச்சரித்திருந்தார்.

'ஜனாதிபதி அண்மையில் வழங்கிய பேட்டியில் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார். இஸ்ரேலின் இதுவரையான செயற்பாடு எமது முரண்பாட்டுக்கான பகுதியை எட்டவில்லை. நாம் உண்மையான முரண்பாட்டை எட்டமாட்டோம் என்று நம்புகிறோம்' என்று இஸ்ரேலிய ஊடகம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் லியு கூறினார்.



கிழக்கு ரபா மற்றும் கிழக்கு ஜபலியாவின் வீதிகளில் இஸ்ரேலிய படைகளுடன் தமது போராளிகள் துப்பாக்கிச் சண்டையில் ஈடுபட்டதாக ஹமாஸ் ஆயுதப் பிரிவு தெரிவித்துள்ளது.

காசாவுக்கு அருகில் உள்ள இஸ்ரேலிய பகுதிகளில் நேற்று பல தடவைகள் சைரன் எச்சரிக்கை ஒலி எழுப்பப்பட்டது. பலஸ்தீன ரொக்கெட் அல்லது மோட்டார் குண்டு தாக்குதலுக்கான எச்சரிக்கையாக அது சந்தேகிக்கப்படுகிறது.

ரபாவின் கிழக்கு பகுதியில் இருந்து மக்களை வெளியேறும் உத்தரவை கடந்த வாரம் வெளியிட்ட இஸ்ரேல் இராணுவம் இரண்டு நாட்களுக்கு முன்னர் அந்த இடங்களை விரிவுபடுத்தியது. இந்நிலையில் ரபாவில் இருந்து இதுவரை 360,000 பேர் வரை வெளியேறி இருப்பதாக பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா. நிறுவனம் தெரிவித்துள்ளது.

'இங்கே எங்கு போவதற்கு இடமில்லை. போர் நிறுத்தம் இன்றி பாதுகாப்பு இல்லை' என்று அந்த நிறுவனம் எக்ஸ் சமூகதளத்தில் குறிப்பிட்டுள்ளது.

எரிபொருள் பற்றாக்குறை காரணமாக காசாவில் சுகாதார அமைப்பு சில மணி நேரங்களில் செயலிழந்து விடும் என்று காசா சுகாதார அமைச்சு எச்சரித்துள்ளது. 'மருத்துவமனைகளின் இயக்கம், அம்புலன்ஸ் வண்டிகள் மற்றும் ஊழியர்களின் போக்குவரத்துக்கு தேவையான எரிபொருளில் பற்றாக்குறை இருப்பதாக' அது சுட்டிகாட்டியுள்ளது.

எகிப்துடனான காசாவின் ரபா எல்லைக் கடவையை இஸ்ரேல் இராணுவம் கடந்த வாரம் கைப்பற்றியது தொடக்கம் காசாவுக்கான உதவி மற்றும் எரிபொருள் விநியோகம் தடைப்பட்டுள்ளன.

ரபா எல்லை கைப்பற்றப்பட்டது அண்டை நாடான எகிப்தினது எதிர்ப்பை வலுக்கச் செய்துள்ளது. இந்நிலையில் காசா போரில் இஸ்ரேல் இனப்படுகொலை சாசனத்தின் கடப்பாட்டை மீறியதாக குற்றம்சாட்டும் சர்வதேச நீதிமன்றத்தில் தென்னாபிரிக்கா தொடுத்த வழக்கில் உத்தியோகபூர்வமான இணைந்ததாக எகிப்து அறிவித்துள்ளது.

பலஸ்தீனிய குடிமக்களுக்கு எதிரான இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு அதிகரித்து வருவதால் கெய்ரோ இந்த வழக்கில் சேர விரும்பியதாக எகிப்து வெளியுறவு அமைச்சு ஞாயிற்றுக்கிழமை (12) கூறியது.

காசா மக்களுக்கு எதிரான இஸ்ரேல் இனப்படுகொலையில் ஈடுபடுவதாக குற்றம்சாட்டியே கடந்த ஜனவரியில் தென்னாபிரிக்கா இந்த வழக்கை தொடுத்தது. கடந்த எட்டு மாதங்களாக நீடிக்கும் காசா மீதான இஸ்ரேலின் இடைவிடாத தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை தற்போது 35,000ஐ தாண்டியுள்ளது.

எனினும் பணயக்கைதிகள் விடுவிக்கப்படும் வரை மற்றும் ஹமாஸ் ஆட்சி மற்றும் அதன் படை பலம் ஒழிக்கப்படும் வரை காசா போர் தொடரும் என்று இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் யோவ் கல்லன்ட் குறிப்பிட்டுள்ளார். மௌன்ட் ஹாசிலில் இடம்பெற்ற விழா ஒன்றில் பேசிய அவர், 'இந்தப் போர் இஸ்ரேலியர்களின் வாழ்வை வரவிருக்கும் தசாப்தங்களில் வடிவமைக்கும்' என்றும் குறிப்பிட்டார்.

ஆனால் காசாவின் ரபா மீதான இஸ்ரேலின் படை நடவடிக்கை ஹமாஸை ஒழிக்காது, அராஜகத்தையே தூண்டிவிடும் என்று அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளிங்கன் ஞாயிறன்று எச்சரிக்கை விடுத்திருந்தார். ரபா மீதான படை நடவடிக்கைக்கு எதிராக அமெரிக்க அழுத்தம் கொடுத்து வரும் நிலையிலேயே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

'ஹமாஸ் விட்டுச் செல்லும் பல ஆயுதக் குழுக்களின் கிளர்ச்சி அல்லது அவ்வாறு விட்டு விட்டால் அந்த இடைவெளியில் குழப்பம், அராஜகத்திற்கே இஸ்ரேல் வழிவகுக்கும் என்பதோடு அது ஹமாஸினால் மீள நிரப்பச் செய்யப்படலாம்' என்று சி.பி.எஸ். தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் பிளிங்கன் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் இஸ்ரேல் நினைவு தின நிகழ்வு ஒன்றில் நேற்று பேசிய இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, 'எமது சுதந்திரப் போர் இன்னும் முடியவில்லை. இன்றும் கூட அது தொடர்கிறது. இந்தப் போராட்டத்தில் வெற்றி பெறுவதில் நாம் உறுதியாக உள்ளோம்' என்றார்.

இஸ்ரேலின் சுதந்திர தினத்தை ஒட்டியே நினைவு தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. 1948 இல் இஸ்ரேலின் உருவாக்கத்தை பலஸ்தீனர்கள் 'நக்பா' அல்லது பேரழிவு தினமாக அனுஷ்டிக்கின்றனர். அப்போது ஆயிரக்கணக்கான பலஸ்தீனர்கள் தமது சொந்த வீடுகளில் இருந்து துரத்தப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 மே மாதம் 14ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.